Free Circulation | Germany | England | Swiss
கார்த்திகை. Nove. 2018

# வெற்றிமணி

ESTD 1950
Vettimaniy
பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு சிவகுமாரன் B.F.A



Orientalische Textilien & Schmuck
தொடர் மலிவு விற்பனை!
தரமான தங்க நகைகளுக்கு உத்தரவாதமிக்க நகை மாளிகை
Tel:0231 162377
Königswall 16 (Am HBF)
44137 Dortmund
Germany
Fax:0231 147836


## சாதிக்கத்தானே புலம் பெயர்ந்தோம்!

அனைவருக்கும் எங்கள்
இனிய தீபாவளி
நல் வாழ்த்துக்கள்

## உன்னை அன்றே கண்டிருந்தால்...

மாதவி





## Planning your study time



S.K.Silks & Gold Paraadise
தீபாவளியை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை!
அனைத்து ஆடைகளும் 50% முதல் 70% வரை
மாபெரும் ராஜமுத்திரை
16th ANNIVERSARY
Mr.P.Sritharan.Proprietor
Tel:0231 9501 647 Adler str 33 - 44137 Dortmund

MITCHAM (UK) U.K
செல்வராஜா
Selvaraja Gold House & Textiles

T.T.S.Brothers GmbH&Co.KG
RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288
Germany
Page.12

Gopara Gnanam GMBH
Tel:0231 5450028 Mob:0171 330 6542
Rheinische str.81 - 44137 Dortmund
Page.08

StaR-Impex
Kipper Str.03
44147 Dortmund/ Germany
Tel:0231 860 26 96
S.39



Foto:Vevitha

# Planning your study time

நீங்கள் படிக்கும் நேரத்தை திட்டமிடல்

Jayanthan

You can learn and understand the topics you are taught. But without revisiting them using a suitable revision technique, you will not be able remember them all. It is important you plan your revision soon after you learn something new, not few weeks before the exam.
Planning your time will save your time & help you to organise your work sensibly. (So that you can enjoy your free time too)

**Your study plan / time table**
Researches show if you study continuously for a long session say for sample 2 -3 hours, then your efficiency of study will decrease because your mind will get tired. At the end of the session, as you think the session is going to over, your mind refreshes and the efficiency will increase slightly. Hence psychologists advise, to put fixed study sessions say 2 or 3 hours and break these up into three or four short periods with planed breaks of about 5 minutes. This will help you to keep your learning efficiency high. After every study time allow a slightly long interval about one hour for relaxation.
List the things you have to do and you want to do. Also put deadlines if necessary. When you are working in the evening, start as early as possible, since you can study best when you feel fresh. Don't take heavy meals in the night.

**Your revision time table**
You cannot remember your topics without revising them. Revision should be started after the first unit is finished. Revising your topics throughout your course help you to understand & remember your topics very well. Your final revision then will be just going over things you have already understood. Of course, you need a final revision timetable for the few months before the final examination. But you have to use all available time in this final revision (time table) even the free period during school time.

**Where to study & Revise**
Work in a quiet room that should have good ventilation & good lighting. You must have a table or desk, so that you can spread your books, notes & tutorials. Keep all your papers, pens pencils & other essential equipment at hand in a place to avoid time wastage during your study time. You should have a watch or clock & a reading lamp. Try to keep the gadgets, which will distract you, away from you.

**How to study & revise**
You cannot study your subject simply by reading textbooks or watching YouTube videos. Do not memorize the subject material in each page blindly. It is a great aid to understanding and memory if we can associate or correlate any new ideas that we study with those which we already know. In other words we should organize our knowledge .It is difficult to remember unrelated scraps of information. This forces us to think while reading the book.


In some subjects after reading a topic or 2 pages, you must close your book or notes, and then try to recall the points/ facts that you studied, and the best is to note down them in a rough paper. In case of diagrams, you must practise them by drawing as many times as you can.

Making notes will help you to understand & concentrate, and also help you in the final revision. You will then find that, quite often, only a few fundamental concepts and facts need be remembered. Merely reading and re-reading a book several times is a passive and inefficient method of study. Take notes, as you work every unit. Make sure that your notes are organized and easy to read. Make mini notes on charts / strips of papers, for quick revision & keep them in your pockets or bags so that you can use them in rare moments. Make revision check lists of laws, formula and definitions and hang them in your study room or bed room.
To study effectively we should have a critical and questioning attitude. One way to practise your knowledge is doing questions. Testing your knowledge by doing questions will help you know your progress. Try questions in the conditions that will be provided in the hall. Allow you only the exam time for each question. When you could not answer a question, work through the topic again and attempt the questions
The success of your revision depends on you identifying the revision technique that works well for you. Good Luck.






வெற்றிமணி
தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
ஓசை 267



ஆரம்பம்:1950
ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
(முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன்.பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
"ஓவியக்கலைவேள்"
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன் B.F.A.
Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A.

Brinker Höhe.13
58507 Lüdenscheid
Germany
Tel: 02351/45 88 62
0163 199 2 333
e-mail: vettimaniy@hotmail.com

"வெற்றிமணிமொழி"
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது

பத்திரிகை வடிவம்
சிவகுமாரன் சஞ்ஜீவன்.B .Eng (Hons)
Sanje:07824 61 83 83

Vettimaniy Ltd
Company No: 8876276

# கொழும்பு அரசியலில் "றோ"





இலங்கையிலிருந்து பாரதி

கொழும்பு அரசியலை கடந்த சில வாரங்களாகக் கலக்கிவரும் ஜனாதிபதி மைத்திரி கொலை முயற்சி குறித்த சர்ச்சையில் அதிரடியான திருப்பம் ஏற்பட்டிருக்கின்றது. தன்னைக் கொலை செய்ய முன்னெடுக்கப்பட்ட முயற்சிகளின் பின்னணியில் இந்தியாவின் புலனாய்வு நிறுவனமான "றோ" சம்பந்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதிரடியாக அறிவித்ததுதான் இந்தத் திருப்பம். அமைச்சரவைக் கூட்டத்திலேயே ஜனாதிபதி இந்த அதிரடி அறிவிப்பை வெளியிட்டார்.

ஜனாதிபதி அவ்வாறு சொல்லவில்லை என ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு பின்னர் கூறியிருந்த போதிலும், ஜனாதிபதி அவ்வாறு சொன்னார் என்பதை இச்செய்தியை வெளியிட்ட ஊடகவியலாளர்கள் உறுதியாகத் தெரிவித்திருக்கின்றார்கள். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் நேரடியாகத் தொலைபேசியில் தொடர்புகொண்டும் தான் அவ்வாறு சொல்லவில்லை என மைத்திரி கூறியிருக்கின்றார்.

செவ்வாய்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில்தான் மைத்திரி அதிரடியான இந்த அறிவித்தலை வெளியிட்டார். அன்று அமைச்சரவையில், என்னதான் நடந்தது என்பதை முதலில் பார்ப்போம்:

"அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு கொடுத்து இப்போது கொழும்பு துறைமுகத்தை இந்தியாவுக்கு கொடுத்தால் ஒரு அவசரத்துக்கு - போர்க்கால சூழ்நிலை ஒன்று ஏற்பட்டால் என்ன செய்வது? இந்தியப் பிரதமரிடம் இதை நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன்... தேவைப்படின் இனியும் அதனை தெளிவுபடுத்தி சொல்வேன்..." என்று ஜனாதிபதி அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவித்த போதுதான் சர்ச்சை ஆரம்பமாகியது.

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனைக்கான கொள்கலன் தொகுதியை அமைப்பது தொடர்பான அமைச்சரவை பத்திரம் விவாதிக்கப்பட்ட போதே ஜனாதிபதி இப்படி அதிரடியாக கூறியிருக்கிறார்.. இந்த விடயம் தொடர்பில் இந்தியாவுடன் முன்னதாக ஒரு புரிந்துணர்வு ஏற்பட்டுள்ளதாகவும் அதனை இந்தியாவிடம் கையளிக்க வேண்டுமென்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்த போதிலும் ஜனாதிபதி தனது நிலைப்பாட்டை விட்டுக் கொடுக்கவில்லை.

"பிம்ஸ்டெக் மாநாட்டின் போது பிரதமர் மோடியை நான் சந்தித்தேன் .. அப்போது இதை விளக்கினேன் .. அவர் புரிந்துகொண்டார்.." என்று ஜனாதிபதி கூறிய கையோடு பிரதமர் இதனை மேலும் விளக்கி கூற முற்பட்டார்..

அப்போது அமைச்சர் மஹிந்த சமரசிங்க இடையில் குறுக்கிட்டு தனது கருத்துக்களை சொல்ல முயன்றார் . அது பிரதமருக்கு கடுப்பை ஏற்படுத்தியது."ஒரு பிரதமரின் உரைக்கு குறுக்கே பேசுவது சரியா? சற்று அமைதியாக இருங்கள்" என்று அவரை கடிந்து கொண்டார் ரணில்... எப்படியோ அமைச்சர் மலிக் சமரவிக்ரம இதில் சில விளக்கங்களை கூறினாலும் ஜனாதிபதி ஏற்கவில்லை...

இதனால் அந்த அமைச்சரவை பத்திரம் நிறைவேற்றப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டது.. இவ்விடயத்தில் அமைச்சரவைக்குள் மைத்திரி தரப்பும் ரணில் தரப்பும் முரண்டு பிடித்துக்கொண்டிருந்தன.

இந்த இடத்தில் சீற்றமடைந்த மைத்திரி தன்மீதான கொலை முயற்சி குறித்து கவனத்தை ஈர்க்க முற்பட்டார்.

"பொலிஸ் திணைக்களம் நீதியாக செயற்படுகிறதா ? எனக்கெதிராக கொலை முயற்சி நடப்பதாக வந்த செய்திகளுக்கு என்ன நடந்தது...? இந்திய உளவுத்துறை "றோ" இந்த சதிகளின் பின்னணியில் இருப்பதாக செய்திகள் என்னிடம் வந்துள்ளன. இந்தியப் பிரதமருக்கு தெரியாமல் இவை நடப்பதாகவே தெரிகிறது.. நானும் அமைதியாக இருந்து எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறேன்.." என்று ஜனாதிபதி கர்ஜிக்க அமைச்சரவையே ஒரு நிமிடம் ஆடி அடங்கிப் போனது...

வியாழக்கிழமை பிரதமர் ரணில் இந்தியா சென்று இந்திய பிரதமரை சந்திக்கவிருந்த நிலையில் ஜனாதிபதியின் இந்த "அதிரடி" இரு நாடுகளுக்கிடையில் உள்ள உறவில் சிறிய விரிசலை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது... கொழும்பில் உள்ள இந்திய தூதரகத்தில் இருந்து இயங்கும் "றோ" உளவுப் பிரிவு சில நடவடிக்கைகளை பின்னால் இருந்து இயக்குவதாக ஜனாதிபதி கருதுகிறார் என அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன..

தொடர்ச்சி 04 ம் பக்கம்.




அனைவருக்கும் எங்கள் உள்ளம் கனிந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்

**கொழும்பு அரசியலில் ”றோ”** 03ம் பக்கத் தொடர்ச்சி

”கைது செய்யப்பட்ட இந்தியர், என்னைக் கொல்ல முயற்சிக்கும் றோவின் முகவராக இருக்க வேண்டும். இதனை இந்தியப் பிரதமர் அறியாமல் இருக்கலாம். இது பெரும்பாலும் வழக்கம்தான். சி.ஐ.ஏயின் இது போன்ற நடவடிக்கைகள் ரம்புக்கும் தெரியாமல் இருக்கலாம்” என்றும் மைத்திரி கூறியுள்ளார். மைத்திரியின் இந்தக் கருத்து இராஜதந்திர வட்டாரங்களிலும் கடும் அதிர்வுகளை ஏற்படுத்தியிருந்தது.
மஹிந்தவுடன் இணைந்து இடைக்கால அரசு ஒன்றை அமைக்கும் தனது முயற்சிகளுக்கு இடையூறு விளைவிக்கும் “றோ” தனக்கு எதிராக வந்த சதி முயற்சிகளிலும் பின்னால் இருப்பதாக ஜனாதிபதி கருதுகிறார் என தெரிகிறது. மைத்திரி இவ்வாறு கருதுவதற்கு சில காரணங்கள் உள்ளன.

ஜனாதிபதி கொலை சதி முயற்சிகளை வெளியிட்ட நாமல் குமார என்பவரின் வீடு கொழும்புக்கு வெளியில் தூரத்தில் உள்ளது. அதாவது கம்பஹாவில் உள்ளது. இச்சம்பவத்துடன் தொடர்புபட்டவர் எனக் கைதாகியுள்ள இராஜேந்திரகுமார் என்ற இந்தியப் பிரஜை ஒரு மனநோயாளி என இந்தியத் தூரகம் தெரிவித்திருக்கின்றது. அப்படியான ஒருவர் எவ்வாறு கம்பஹாவில் உள்ள நாமல் குமாரவின் வீட்டைத் தேடிச் சென்றார்? விலாசம் எப்படி கிடைத்தது? அங்கு போக உதவியது யார்?
இது போன்ற காரணங்கள்தான் மைத்திரியின் அதிரடியான அறிவிப்புக்குக் காரணம்!

ஆக மொத்தத்தில் ”றோ” ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவாக எதிர்காலத்தில் பிரதமர் ரணிலை ஜனாதிபதியாக்கும் முயற்சியில் இறங்கியுள்ளதாக கருதும் ஜனாதிபதி , இப்போதே அதற்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தனது முக்கியமான உளவு அமைப்பின் மீதான ஒரு நாட்டுத் தலைவரின் குற்றச்சாட்டை புதுடில்லி அரசு இலகுவில் நிராகரித்து விடமுடியாத இராஜதந்திர நெருக்கடி நிலையே இப்போது ஏற்பட்டுள்ளது. இந்தப் பின்னணியில்தான் புதன்கிழமை அவசரமாக கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவரை அழைத்து விளக்கம் கொடுத்த மைத்திரி, மாலையில் இந்தியப் பிரதமர் மோடியுடன் தொலைபேசியில் உரையாடியுள்ளார்.

இந்தச் சர்ச்சையில், மைத்திரியை மாட்டிவிட்டதே மஹிந்த தரப்புத்தான் என்கின்றன உள்வீட்டு வட்டாரங்கள். இரண்டு வாரங்களுக்கு முன்னர் எஸ்.பி. திஸநாயக்கா வீட்டில் ராஜபக்ஷக்களை, மைத்திரிசந்தித்தார். அப்போது அங்கு கொடுக்கப்பட்ட ஒரு கயிறை விழுங்கிவிட்டுத்தான் இப்படி அமைச்சரவைக் கூட்டத்தில் வந்து கக்கியிருக்கின்றார்கள் மைத்திரி. அந்தச் சந்திப்பின்போது பிரதமர் ரணிலுடன் இனிமேலும் என்னால் சேர்ந்து வேலை செய்ய முடியாது என்று ரணிலைக் கரித்துக் கொட்டினார் மைத்திரி. அதுதான் சந்தர்ப்பம் என்று பார்த்து கோட்டாபய கயிறைக் கொடுத்திருக்கின்றார்.
”பாருங்கள் என்னையும் உங்களையும் கொல்வதற்கு ரணிலின் ஆள் நடவடிக்கை எடுத்தி ருக்கின்றார். அது குறித்து ரணில் தலைமையிலான அமைச்சர்கள் துரித நடவடிக்கையும் எடுக்கவில்லை குற்றவாளிகளைச் சட்டத் தின் முன் நிறுத்த முயற்சிக்கவுமில்லை. இதற்கு பின்னால் இந்தியக் கையும் இருக்கின்றது போலும். இந்தியர் ஒருவரும் சந்தேக வலைக்குள் சிக்கியிருக்கின்றார்.““ - என்று போட்டுக் கொடுத்தாராம் கோட்டா.

அதைத்தான் விழுங்கி விட்டுவந்து, அமைச்சரவையில் கொட்டியிருக்கின்றார் மைத்திரி. அதை செவிமடுத்த ஐ.தே.கட்சியைச் சேர்ந்த சில அமைச்சர்களுக்கு சந்தோஷமோ சந்தோஷம். அமைச்சரவைக் கூட்டம் முடிந்த கையோடு கொழும்பில் உள்ள ”தி ஹிந்து“ செய்தியாளரான பெண்மணியைத் தொடர்பு கொண்டு விடயத்தை ஒப்பித்தமை. ஒன்றல்ல, இரண்டல்ல, ஐந்து அமைச்சர்கள் மைத்திரி இந்தக் கருத்தை வெளியிட்டமையை அந்தச் செய்தியாளருக்கு உறுதிப்படுத்தினர்.

”அப்படி ஐந்து அமைச்சர்கள் இத்தகவலை உறுதிப்படுத்தியுள்ளார்கள். ஆகவே செய்தி முற்றிலும் சரி. ஆனால், நாளைக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதைக் கட்டாயம் மறுப்பார்.தாம் அமைச்சரவையில் கூ றி ய கருத்தை பகிரங்கமாக வெளியில் கூறும் திராணி அவருக்கு இல்லை. ஆகவே இந்த செய்தியை பிரசுரிக்கின்றமை குறித்து நீங்களே தீர்மானியுங்கள்!“ - என்ற அடிக் குறிப்புட னேயே ”தி ஹிந்து“ கொழும்புச் செய்தியாளர் விடயத்தைத் தமது ஆசிரியருக்கு அனுப்பி வைத்தார்.

ஆசிரியரும் அந்தச் செய்தியை முக்கியத்துவம் கொடுத்து பிரசுரிக்க, கொழும்புச் செய்தியாளர் குறிப்பிட்டபடி உடனடியாகவே - அந்த விடயத்தில் ”பல்டி“ அடித்து அறிவிப்பை வெளியிடச் செய்யவேண்டியவரானார் மைத்திரிபால. ஆனால், இந்து நிறுவனத்தின் தலைவரான என்.ராம் தமது செய்தி சரியானது என்பதை மீண்டும் வலியுறுத்தியிருக்கின்றார்.
இந்தப் பின்னணியில்தான் ரணில் விக்கிரமசிங்கவின் புதுடில்லி விஜயம் இடம்பெற்றது. இதன்போது இரு தரப்பிலும் இணங்கப்பட்ட பல விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்ற கருத்தை மோடி முன்வைத்தார். அதனைவிட, இரு பிரதமர்களும் மூடிய அறைக்குள் தனியாக நீண்ட நேரம் பேசியதாகவும் செய்தி. ஆக, மற்றொரு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த டில்லி தயாராகின்றதா என்பதுதான் இப்போது எழும் கேள்வி!

## தினம் தினம் மாவீரர் தினமே!




பண்டார வன்னியன் தொடக்கம்
மறைத்தமிழன் மாண்புடன் வாழ
விடுதலைக்கு வித்தான முத்துக்கள் எத்தனை
கரிகாலன் காலத்தில்……

பொன் சிவகுமார் ஏற்றிவைத்த விடுதலைத் தீயில்
அஞ்சா நெஞ்சுடன் உடலை உருக்கியவன்
தியாக தீபம் திலீபன் உணவை மறுத்து
தன் உயிரை தாய் மண்ணுக்கு உரமாக்கினான்

தமிழினம் மானத்துடன் வாழ
கனவுகளைத் தொலைத்த இலட்சிய வீரர்களை
உயிர் உள்ளவரை உள்ளத்தில் சுமப்போம்
காலத்தால் அழியாத காவியங்களையும்
அவர்களின் கனவுகளையும்

கடல் கடந்தாலும்…..
கண்ணுக்குள் வைத்துக் காத்திடுவோம் வாறீர்

ஈழத் தாயின் இதய முத்துக்கள்
இன்பமாய் நாம் வாழ ஈகைச் சுடராகி
இளமையைத் தொலைத்த
இலட்சியத்தின் வேங்கைகள்

கயவனின் பகைமுடித்து களத்தை வென்ற
காவல் தெய்வங்களை காண்போம்
தினம் தினம் மாவீரர் தினமே!

**ஜீவிதா**
ஜேர்மனி




Bochum
Lucky Fly Reisebüro
Luckyfly
அனைவருக்கும்
எங்கள் உள்ளங்கனிந்த
தீபாவளி நல்வாழ்த்துக்கள்
Gulf Air
GULF AIR
GRAND PRIX 2010
A9C-AC
Mob:No: 0179 1484 892
பதிவுக்கு முந்துங்கள்...
Sommer Offer
Jan-June.2019
Ab:589 €
46 Kg
Graphic Design Vettimaniy Ltd
e.mail:siva 0108 @hotmail.com
QATAR AIRWAYS
Emirates
Essener Str.26
44793 Bochum
Tel: 0234-2399032
Fax 0234-79457171
www.Lucky-fly.de


TKS
BEST FOODS
தீபாவளி
நல்வாழ்த்துக்கள்
மளிகை உலகின்
BIG BOSS
0049 231 950 468 83
0049 231 950 468 82
tks-bestfoods@web.de
www.tks-bestfoods.de
tksbestfoods
Rheinische Str. 79, 44137, Dortmund Germany

# உன்னை அன்றே கண்டிருந்தால்...




பல்வேறு முகங்களுடன் உறவாகத் தினம் பழக, இன்னும் சொல்லப்போனால் உரிமையுடன் பேச, அரியவாப்பு பெற்றவர்கள் கலைஞர்கள்.

கலைஞனுக்கு கலைகள் வசப்படுவதுபோல், காதலும் நன்கு வசப்படும். கரையில் வந்து மோதும் கடல் அலைகள்போல் வந்து, வந்து, அவர்கள் காலடியில் காதல் அலைமோதும்.
காதலே கலை என்றாலும், சலனம் இல்லாத மனிதர்களே இல்லை. சலனங்களை சலசலப்பின்றி வென்றவர்களும் உண்டு. வெல்வேன் என்று சலனத்துள் வீழ்ந்தவர்களும் உண்டு.

இங்கே ஒரு பெரும் மிருதங்கக்கலைஞன். அக் கலைஞனுக்கு எதுவித பட்டமும், பதவியும், கிடையாது. பரம்பரையாக வந்த கலையோ என்றால் அதுவும் அறவே கிடையாது. தானாக ஒவ்வொரு நாளாக விரும்பி விரும்பிக் கற்ற கலை. யாரும் சிறப்பாக மிருதங்கம் வாசித்தால் “அவன் ஒரு முத்துக்குமார்“ என புகழ்வார்கள். அந்த அளவிற்கு அவன் பெயரே பெரிய விருதாய் விரிந்து கிடந்தது. இன்று 40 வருடங்களாக மிருதங்கம் அவன் வாழ்வின் லயமாகவே உள்ளது.
எத்தனை மேடைகள், எத்தனை பாடல்கள், அத்தனயிலும் முத்திரை பதித்த மிருதங்க கலைஞன் முத்துக்குமார்.
மிருதங்கத்திற்கு இருபக்கம்போல் அவனுக்கும் இருபக்கங்கள்.

மனைவி பேரப்பிள்ளைகள் என அட்டகாசமான ஒரு குடும்பம் ஒரு பக்கம். மறுபக்கம் புதிதாக ஒரு தேடல்....

அவன் மனைவி ஒரு குடும்பவிளக்கு. வீட்டுவேலைகள், வெளிவேலைகள் என அவளாகவே இழுத்துப் போட்டுக்கொண்டு செய்வாள். அதிகம் பேச்சு வராது. தொலைபேசியிலும் அதிகநேரம் இருக்கமாட்டாள். தொலைக்காட்சி நாடகம் அறவே பிடிக்காது. காரணம் நாடகத்தில் ஒரு கணவனுக்கு இரு மனைவிகள். மற்றும் திருமணமான பெண்ணை விரும்புதல், போன்ற காட்சிகளை அவளால் ஜீரணிக்க முடியவில்லை. பாட்டுமட்டும் கேட்பாள். கர்னாடக இசை பெரிதும் பிடிக்கும்.
முத்துக்குமார் நான்கு மாதமாக ஒரு அரங்கேற்ற நிகழ்வுடன் ஒன்றிப் போயிருந்தார். சாதாரணமாக ஒரு நான்கு வார ஒத்திகையுடனே அரங் கேற்றத்திற்கு வாசிக்கும் முத்துக்குமார், இன்று நான்கு மாதமாக ஒத்திகை என்று அலைகிறார். அந்த அரங்கேற்றம் மூன்றுமாதத்திற்கு முன்பு நடந்திருக்கவேண்டும். அரகேற்றம் செய்ய இருக்கும் ஆண்டாள் சிறந்த நர்த்தகி. அவளது அம்மம்மா இறந்ததால் நடக்க இருந்த அரங்கேற்றம் நின்றுபோனது. இப்போது இந்தமாதம் அரங்கேற்றம். ஒத்திகை தொடர்கிறது.

குமாரின் மிருதங்கவாசிப்புக்கு தாளம் தப்பாது நடன மாடுவாள் ஆண்டாள். எத்தனை அரங்கேற்றங்கள் எத்தினை ஒத்திகைகள் அவற்றில் எல்லாம் காணாத ஒரு மந்திரசக்தியை ஆண்டாள் காலடியில் கண்டு மிரண்டான் முத்துக்குமாரு.
அந்த மந்திரத்தில் அந்தரத்தில் தொங்கி ஊசலாடியது அவன் மனது. அந்த விரல்களின் அழகும்,அந்த பாதங்கள் சுமந்துநிற்கும் சுமையும், அவன் இதயத்தில் கனத்தது. வயது அறுபது. ஆனால் அறுத்துக்கொண்டு ஓடும் வெள்ளாடுபோல் மனம் ஓடியது. காரணம் அவளின் துள்ளும் இளமை மட்டுமல்ல அவள் ஆடும் அற்பதக்கலையும் தான்.

அன்று கே.பாலச்சத்தரின் சிந்துபைரவி படம் பார்த்தபோது எப்படி இந்த அளவு வயது வித்தியாசத்தில் ஒரு இரசிகையை தாயாக்க முடிந்தது. ஜே.கே.பியும் சிந்துவும் கொண்ட உறவு அவனுக்கு ஏற்கமுடியாது இருந்தது. இன்று அந்த உறவே அவனுக்கு முன் வந்து முன்னுதாரணமாக சிந்துபடிக்கின்றது.

ஆண்டாள் தன்னை மறந்து நான்கு மாதமா முத்துக்குமாரின் தாளத்துடன் இணைந்து ஆடப்பழகி விட்டாள் அவளுக்கு வயது இருபத்தினான்கு. அவள் எங்கோ வீழ்ந்துவிட்டுடேன் என்பது மட்டும் அவளுக்குப் புரிந்தது.

அது பரதத்தினுள்ளா அல்லது மிருதங்கத்தின் ஒரு அங்கமாகிவிட்டாளா என்பது இன்று வரை அவளுக்கு தெரியவே இல்லை.
முத்துக்குமார் போடும் தாளம் தப்பாது. ஆடும் ஆண்டாளை அவன் ஆளத்தொடங்கினான். கலையில் உள்ள ஆர்வத்தால் வந்த தொல்லை இது. அவர் திருமணமானவர் வயதோ அறுபது. ஆனால் எந்தப் பொண்களுக்கும் இல்லாத அடக்கம், அவளுள் அடங்கிக்கிடந்து. எந்த சந்தரா்ப்பத்திலும் அவள் தாளம் தவறி ஆடியது கிடையாது. அது மேடையாக இருந்தாலும் சரி வாழ்வாக இருந்தால் சரிதான்.
அடிக்க அடிக்க அம்மியும் நகரும் என்பது முத்துக்குமாரின் கலையானது. முத்துக்குமார் மெல்ல மெல்ல மிருதங்கத்தை நிமிர்த்திவைத்து சுத்தியலால் சுதி ஏற்றத் தட்டுவது போல் அவளையும் சுத்தி சுத்தி கைகளால் தட்டித் தட்டி கதைக்க ஆரம்பித்தார்.
இதுமட்டுமல்லாமல் இன்றை இளையவர்போல் தொலைபேசியில் உள்ள அத்தனை சலுககைளையும் தன் காதல் கலைவளர்க்கப்பாவித்தான். வட்சப் செய்திகளால் நிரம்பி வழிந்தது.

“தருவாயா நம் வரவு செலவு கணக்கு பார்க் ,ஒரு நாள். நஷ்டம் என்றாலும் இஸ்டம் தான்” என்று எழுதினான் முத்துக்குமாரு.
பதிலுக்கு ஆண்டாள் : வரவு என்று ஒன்றிருந்தால் செலவு என்று ஒன்று இருக்கும் . இதற்கு என்ன கணக்குபார்க்க இருக்கு என எழுதிவிட்டாள்.
(என்னகொடுமை இந்த தமிழிற்கு எதனையும் இருமுறை வாசித்தால் போதும் இரட்டைக்கருத்தை அது அள்ளி வீசும்.)
நீ பிடிகொடுக்காமல் எழுதுகிறாய். நான் உன்னில் பிடித்ததை எழுதுகின்றேன் எனப்பதில் போட்டான் முத்துக்குமாரு. யாழ்ப்பாணத்தில் மின்வெட்டாலும் அவன் வட்சப்பை தடுக்கமுடியவில்லை. அவன் எந்த நேரமும் புல் சாஜ்யில் இருந்தான்.
அவன் காதல் வரிகளை காமச்சிதறல்களை எழுதினால் ஆண்டாள் அதனைப் பார்த்தகையோடு தானே அழித்துவிடுவான். அவள் பாரத்தால் போதும் அது இந்த ஜென்மத்திற்கு அது போதும்.
ஆண்டாள் வாசிக்கும் ஒவ்வொரு குறும் செய்திகளும் அவள் இளமையை துள்ளவைத்தது என்பது எப்படி உண்மையோ, அதுபோலவே அந்த துள்ளலுக்கு முத்துக்குமாரின் காதல் காரணம் அல்ல, அந்த வரிகளில் உள்ள காந்தம் மட்டுமே காரணம் என்பதும் பேருண்மையாகும்.
கண்ணதாசனின் பாடல்கள் கண்ணதாசனை காதலிக்க வைக்கவில்லை. ஆனால் பலரது காதலுக்கு அதுவே காதல் வரிகளானது போல்தான் முத்துக்குமாரது வரிகளும் அமைந்திருந்தது. தொடர்ச்சி 08 ம் பக்கம்.



**7ம் பக்கத் தொடர்ச்சி..** உன்னை அன்றே கண்டிருந்தால்



முத்துக்குமார் முதல் முறையாக தன் எண்ணத்தை நேராகவே கேட்டேவிட்டார். அது புதிதாக எதுவும் இல்லை. வயதானவர்கள் விடும் முதல் காதல் அம்பு அதுதான்

**உன்னை நான் முன்பு கண்டிருந்தால்.. நீ இன்னும் முந்திப்பிறந்திருந்தால் ..... நீ என்னை விரும்பியிருப்பாயா என்பதுதான்.**

ஆண்டாள் ஒரு கணம் திகைத்தாலும் அந்த கலைஞனின் அற்புத திறன் அவளை முழுமையாக ஆட்கொண்டிருந்ததால். இது என்ன கேள்வி ... அன்று கண்டிருந்தால் நானே கடத்திக்கொண்டு போய் இருப்பேன் என்றாள்.

இப்போ முத்துக்குமாரின் மடியில் இருப்பது மிருதங்கமல்ல. ஆண்டாளேதான்.

இந்த சம்பாஷனை நடந்தது நேற்று காறில் ஆண்டாளை வீட்டில் விடச் சென்றபோது. இரவு 9 மணி இருக்கும். ஆண்டாள் சொன்னது இறந்தகாலம். கடத்திக் கொண்டுபோய் கட்டி இருப்பேன் என்றது இப்போது என்ற பொருளில் இல்லை.
ஆனால் முத்துக்குமார் இறந்தகாலத்தைப் போட்டு நிகழ்காலத்தைப்பிடிக்க முயல்கிறார் என்பதனை ஆண்டாள் இப்போது நன்கு உணர்ந்து கொண்டாள். இந்தக்காலத்துப் பெண்கள் வெளிப்படையாகவே கதைப்பார்கள். அவை சிலசமயம் வயதானவர்களது இளமைப் படலத்தை திறந்துவிடும்.

ஆண்டாள் காறால் இறங்கி வீட்டுக்குள் ஓடியவள். சட்டென திரும்பி வந்தாள். அவள் யன்னல் அருகே வந்து தனது கைத்தொலைபேசியை விட்டுவிட்டேன் என்று எடுத்தாள். அப்போது கைத்தொலைபேசி காரில் சாச்சரில் போட்டிருக்க வயர் அவளைத் தடுத்து. ஆண்டாள் இன்னும் சற்று குனிந்து எடுத்தாள்.
அவள் குனியவும் இவன் நிமிரவும் விழிகள் இணையவும் வயரைப்பிடுங்கவும் அந்த அசைவில் இருவரது இதழ்களும் ஒரு நொடி முட்டி மோதி விலகின. முத்துக்குமாருக்கோ அவள் முதல் முத்தம்.

தொலைபேசியை எடுத்துக்கொண்டு வெறுப்பு விருப்பற்ற ஒரு ஞானிபோல் விரைந்தாள்.
அவள் திரும்பி பார்ப்பாளா என இவன் மனம் ஏங்கியது. தான் தப்புச்செய்துவிட்டேன் என்பதனைவிட அது தப்பு இல்லை என அவளுக்கு எப்படி புரியவைக்கலாம் என்ற எண்ணமே குமாரிடம் ஓங்கி நின்றது. அவள் திரும்பி பாரக்கவே இல்லை. முத்துக்குமார் பொறுமையாக பாரத்தபடி இருந்தார். காரணம் அவரது முதுமை. அவள் ஒரு ஞானிபோல் நடந்தாலும் அழகாக இருந்தாள்.

இரவு 11.00 ஆண்டாளின் வட்சாப் அடித்தது. ஆம் ஆண்டாள் நினைத்தது போலவே முத்துக்குமாருதான். மறுபுறத்தில் மிருதங்கத்திற்கு சுதியேற்ற கட்டைகளை அடிப்பதுபோல் முத்துக்குமாரு கட்டம் கட்டமாக அடித்து தனக்கேற்ற சுருதியாக ஆண்டாளை மாற்றும் முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டு இருந்தான்.
ஆண்டாள் முத்துக்குமாருக்கு நீங்கள் திருமணமானவர் எனக்கு குருவானவர் என்று சொல்ல முயலும் வேளை எல்லாம் அவர் தனி ஆவாத்தனம் செய்வார்.
நான் என் மனைவியுடன் மகிழ்வாக இல்லை. குழந்தைகள் பெற்றது எல்லாம் காமத்தின் கூத்திலும் இல்லை. கலையோடு வாழ்வதால் கவலைமறந்து இருந்தேன் இப்படி எல்லாம் நீங்கள் எனக்குச் சொல்லி என்னைத் தேவதையாகப் பார்க்கலாம்.
இந்த ஆண்டாள் காணும் ஆண் ஒரு கலைஞனாக இருந்தால் மகிழ்வேன். ஆனால் மணப்பதற்கு கலைக்கும் அப்பால் சிலவற்றைத்தேடுவேன்.
என் வீட்டில் உங்களை தெய்வமாக மதிக்கின்றார்கள் எனவே நான் நாளை உங்கள் வீட்டிற்கே வருகிறேன். உங்கள் குடும்பத்துடன் ஒரு பொழுது வாழ்கின்றேன். அப்பா அம்மாவிற்கு அரங்கேற்றத்திற்கான ஒத்திகை என்று சொல்கின்றேன். ஆனால் அது வாழ்க்கைபற்றிய ஒத்திகை என்பதனை உங்களுக்கு மட்டும் சொல்கின்றேன்.
அதற்காக திட்டமிட்டு உங்கள் மனைவியை எங்கும் அனுப்பவேண்டாம். அந்த அதிஷ்டசாலியை நானும் காணவேண்டும். என்றாள். அவள் அதிஷ்ட சாலி என்றால் அவள் என்னை எந்த இடத்தில் வைத்துள்ளாள் என்பதை சட்டென்று புரிந்துகொண்டான்.

முத்துக்கமாரு வீட்டுவாசல் மணி அடிக்க, வெட்கம் கலந்த மகிழ்வுடன் திறக்கின்றார். ஆண்டாள் ஒரே ஒரு பார்வை. பின் உள்ளே நுழைகின்றாள்.
மனைவி காயத்திரி ஓடிவந்து வா மகளே நான் கொடியில் உடுப்பு காயவிட்டுக்கொண்டு நின்றேன். இந்த மனுஷன் இருந்தா எழும்பாது. தனிய மிருதங்கத்திற்கு சுதி ஏற்றுவதும் தட்டுவதும்தான் பிழைப்பாய்போச்சு. எல்லா வேலையும் நான்தான் பார்க்கனும்.

ஆண்டாள் பலநாள் பழக்கம்போல் நானும் கெல்ப்பணிறேன். என்று காயத்திரியுடன் சென்றாள் ஆண்டாள்.
உடுப்பை காயவிடுகிறாள் காயத்திரி. ஆண்டாளும் அரைவாசி எடுத்து காயவிடுகிறாள். மீதி எடுக்க காயத்திரி உள்ளேசெல்ல. 18வயது இளைஞன் போல் வாசலில் வந்து ஒரு பார்வை பார்கிறார் முத்துக்குமாரு.

ஆண்டாள் விலகிய ஆடையயை ஒதுக்கியபடி

அப்போதே கண்டிருந்தால் நானும்
இதைதான் பண்ணி இருப்பேன்

நேற்றுக் கேட்ட கேள்விக்கு இன்று பதில் இப்ப சொல்லி இருக்கிறேன். மனைவி வேறு! காதலி வேறு!! என்னை அப்போது கண்டிருந்தால் என்னை கட்டி இருப்பாயா என இனி அவரையும் கேட்காதீர்கள்.
அன்று காதலியாக இருந்து இன்று மனைவியாக இருப்பவர்கள் எல்லாம் இதைத்தான் பண்ணிக்கொண்டு இருக்கிறார்கள் என்றாள் ஆண்டாள்.
முத்துக்குமாரு .... அப்படி என்றால் அந்த முத்தத்தின் போது எதிர்க்கவில்லையே. பின்பும் அதுபற்றி சினக்கவில்லையே. அந்தச் சிறுசிணுங்கல் மட்டும்தான் எனக்கு இப்பவும் கேட்கிறது. அதனை மறந்துவிட்டாயா ஆண்டாள் என படங்களில் வரும் வில்லன்கள்போல் கேட்டான்.
அவள் நிதானமாக முத்தம் !!! எப்போ என்றாள்.
முத்துக்குமாரு நேற்று காருக்குள் நடந்த அந்த நிகழ்வை அவளுக்கு நினைவுபடுத்தினான்.
அவள் திகைத்து நின்றாள். நீங்கள் சொல்லித்தான் அது முத்தம் என்றே தெரிகிறது. அது ஒரு விபத்து. காறின் வெறும் அசைவால் எமது இதழ் முட்டி இருக்கலாம். எத்தனை தடவை என்னை தட்டி தட்டி கதைத்திருப்பீர்கள் அது எந்த உணர்வையும் எனக்குத் தூண்டவில்லையே.
சரி அதை முத்தம் என்றே வையுங்கள் மகிழுங்கள்
அதற்காக மொத்த வாழ்கையையே நான் தொலைக்க முடியுமா?


முத்துக்குமாரின் மனைவி காயத்திரி ஆண்டாள் நீங்கள் பேசிக்கொண்டு இருங்கள் அவருக்கு 12 மணி என்றால் சாப்பாடு மேசையில் இருக்கவேண்டும். என்றபடி அடுப்படிக்குள் நுழைந்தாள்.
வீட்டு வாசலில் ஐயா என்று சத்தம் கேட்க முத்துக்குமாரும் ஆண்டாளும் வாசலுக்கு சென்றனர். மரத்தில் பிடுங்கிய தேங்காயுடன் ஒரு வயதானவர் கம்பீரமாக நின்றார். உங்கமரத்து தேங்காய்தான் என்று முத்துக்குமாரிடம் கொடுத்தார்.
ஆண்டாள் அட ஆளைப்பார்க்க வயசே தெரியல்லை என்ன.
இவரை நான் அப்பவே கண்டிருந்தால் .....
முத்துக்குமாரு மனைவி காயத்திரியும் வாசலுக்கு வந்திட, எங்க வீட்டில் தேங்காய்பிடுங்க வரச்செல்லி இருப்பேன் என்றாள் ஆண்டாள். (தயவுசெய்து இரண்டாவது தடவையும் இதனை வாசித்துவிடவேண்டாம். தமிழின் அர்த்தம் மாறினால் யாம் பொறுப்பல்ல)




# முகத்தில் சிரிப்பில்லை என்று குறை சொல்ல வேண்டாம் அது விற்றமின் டி குறைபாடாகவும் இருக்கலாம்.

## D விற்றமின் யின் முக்கியத்துவம்.

சிவஜெனனி





தாய்நாட்டை விட்டு வந்த எமக்கு. இழப்பு அங்குள் சொந்தங்களும் பழங்களும் உணவுகளும் மட்டுமல்ல அங்கு உதிக்கும் காலைச் சூரியனுமே. நாம் இருக்கும் இடத்தில் இருந்துகொண்டால் எல்லாம் சௌவுக்கியமே என கண்ணதாசன் சும்மாவா சொன்னார். நமது தோல் நிறத்திற்கு சூரிய ஒளி மிக மிக அவசியம். நாம் நம் இடத்தைவிட்டு வெளிநாடு வந்ததுவிட்டோம். அதனால் எம்மவரில் 85 சதவீதமானோர் விற்றமின் டி குறைபாடுக்கு உள்ளாகி உள்ளனர்.

சூரியன் ஒளி எமது தோலில் படாதமையால் மட்டும் அல்ல இந்த விற்றமின் டி குறைபாடு ஏற்படுகின்றது. எவ்வித உயிரினச் சார்பான உணவும் ( Vegan) மற்றும் பால்வகை ஒவ்வாமையுடையவர்களுக்கும் இக்குறைபாடுவரும். எமது தோல் சூரிய ஒளியை உள்வாங்கி விற்றமின் டி ஐ உருவாக்குகின்றது. அதே சமயம் சில உணவுவகைகளில் இது இயற்கையாகவும் இருக்கிறது. சில மீன் வகைள், மீன் லிவர் ஓயில், முட்டை மஞ்சள் கரு. மற்றும் தானிய வகைகளில் உண்டு.

இந்த விற்றமின் டி குறைபாட்டால் எலும்பு கலங்களின் அடர்த்திக்குறைவு ( Bone density) எலும்பு புரை, (Osteoporosis) எலும்பு முறிவு ஆகியன ஏற்படலாம். இது மட்டுமன்றி இருதய நோய்கள் சர்க்கரைவியாதி உயர் இரத்த அழுத்தம், தசைநார்ப்பிடிப்பு, மற்றும் உடலில் இயல்பாக உள்ள எதிர்ப்பு சக்தியும் பாதிக்கப்படலாம்.

விற்றமின் டி அதிகமான அளவு குறைந்தவர்களுக்கு இன்னும் பல நோய்கள்





வரவாய்ப்புக்கள் உண்டு. குறிப்பாக சிறுவர்களுக்கும் (Rickets disease) எலும்புகள் பலவீனமாக்கும் நோய்களும் ஏற்படலாம். அவர்களின் வளர்ச்சி அதனால் குன்றும்.

ஆரம்பத்தில் விற்றமின் டி குறைபாடுகளால் சிலருக்கு உடற்சோர்வும், நோவும் தோன்றலாம். இதனை ஒரு நோய் என்று கொள்ளாமல் இது வயதினால் அல்லது வேலைச்சுமையினால் வந்தது என இலகுவாக உதாசீனம் செய்துவிடுவார்கள்.

சிலருக்கு முன் நெற்றி வியர்த்தலும் ஒரு அறிகுறியாகும்.

மற்றும் வெளிநாட்டில் உள்ள நம்மவர்களது முகத்தில் சிரிப்பைக் காணாதமைக்கும் பிறரைமட்டும் குறை சொல்லாதீர்கள், இந்தச் சூரியனும் ஒரு பொறுப்பாகும். அதாவது சூரிய ஒளியை பாரப்பதால் எமது உடலில் செரோனின் சுரக்கும். (Serotonin) இது எமது மனநிலையை நிர்ணயிக்கும் முக்கிய காரணிகளில் ஒன்றாகும். இது பாதிப்பானால் சிரிப்பு இழந்து மன உழைச்சலுக்கு ( Depression) ஆளாவோம்.

முக்கிய குறிப்பு இவற்றில் உள்ள அறிகுறிகள் எதுவும் இல்லாமலும் இருக்கலாம். ஆனால் நீங்கள் ஆசிய நாட்டவராக இருந்தால் நிச்சயமாக உங்கள் வைத்தியரை அணுகி விற்றமின் டி பரிசோதனையை மேற்கொள்ளவும்.







# பூமியின் சுழற்சி வேகம் குறைந்துகொண்டே போகின்றதா?





## Dr.நிரோஷனின் அதிசய உலகம்

ஒரு நாள் என்றால் என்ன? நமது புவி தன்னைத் தானே ஒரு முறை சுற்றி வருவதை நாம் ஒரு நாள் என்று கூறுகின்றோம். ஆனால் இந்த ஒரு நாள் எப்போதுமே ஒரு நாளாகத் தானா இருந்தது? என்ன புரியவில்லையா? அது என்னவென்றால், நமது பூமி எப்போதுமே அதே வேகத்தில் தானா தன்னைத் தானே சுற்றிக்கொண்டு இருந்தது?

நமது பூமி தன்னைத் தானே ஒரு முறை சுற்றி வருவதை ஒரு நாள் என்று அழைக்கின்றோம். உண்மை சொல்லப் போனால் இப்படி ஒரு முறை தன்னைத் தானே சுற்றி வர நமது பூமிக்கு சுமார் 23 மணித்தியாலங்கள் 56 நிமிடங்கள் 4 வினாடிகள் மட்டும் தான் தேவைப் படுகின்றது. ஆனால், உங்களுக்கு ஒன்று தெரியுமா?

பகல் பொழுதுகள் கொஞ்சம் கொஞ்சமாக நீண்டு கொண்டே போகின்றன. உலகம் தோன்றிய பொழுது ஒரு நாள் எவ்வளவு மணி நேரம் கொண்டது என்பதை உங்களால் யூகிக்க முடியுமா?


இரவும் பகலும் சேர்ந்து வெறும் 6 மணி நேரம் மட்டுமே தான் நீடித்தது! 400 மில்லியன் வருடங்களுக்கு முன்பு இதே ஒரு நாள் 21 மணி நேரம் நீடித்தது. அப்படி என்றால் அந்நேரம், ஒரு வருடம், அதாவது நமது பூமி சூரியனை ஒரு முறை சுற்றி வர, 410 நாட்கள் நீடித்தது. காலம் போகப் போக, சுமார் 100 மில்லியன் வருஷங்களுக்கு முன்னர் வாழ்ந்த டைனசோர்களுக்கு ஒவ்வொரு நாளும் 23 மணி நேரங்கள் நீடித்தது.

பல மில்லியன் மில்லியன் வருஷங்களுக்கு முன்பு நமது பூமி வேகமாக தன்னைத் தானே சுற்றிக்கொண்டு இருந்தது. அதோடு ஒப்பிடும் பொழுது தற்போது நமது பூமியின் சுழற்சி வேகம் குறைந்துவிட்டது.

ஆனால், பல நம்பத்தகுந்த ஆதாரங்களின் படி பூமியின் இந்தச் சுழற்சி வேகம் போகப் போக இன்னும் குறைந்து கொண்டே போகுமாம். ஆனால், கவலைப் படாதீர்கள், நமது பூமி சுழல்வதை ஒரு போதும் முற்றிலும் நிறுத்திவிடாது. அதற்குக் காரணம், பூமியின் சுழற்சி நின்றுவிடுவதற்கு முன்பு, நமது சூரியன் ஒரு சிவப்பு அரக்கனாகி நமது உலகை அழித்துவிடும். இதைப் பற்றி கூட நான் முன்பு ஒரு சிருகட்டுரையில் எழுதியிருந்தேன், அதைக் கண்டிப்பாகப் படித்துப் பாருங்கள்.

எனவே, கவலைப் படாமல் இன்றைய நாளை மிகவும் சந்தோஷமாகக் கழியுங்கள்!

## ஒரு மீனால் குரலை உயர்த்தி ஆரவாரம் செய்ய முடியுமா?



மனிதர்களால் தான் ஒருவருடன் உரையாடும் பொழுது குரலை உயர்த்தி, சத்தம் போட்டு, ஆரவாரம் செய்ய முடியும் என்று நீங்கள் இவ்வளவு காலமும் நினைத்திருந்தால், அது முற்றிலும் தவறான எண்ணம் ஆகும். விலங்குகளும் கூட, அதிலும் குறிப்பாக மீன்களாலும் கத்தி ஆரவாரம் செய்ய முடியும் என்று சொன்னால் நம்புவீர்களா? அட, இது என்னடா ரீலு விடுறேன் என்று யோசிக்கின்றீர்கள் என்றால் கண்டிப்பாகத் தொடர்ந்து படியுங்கள்!

ஒரு பிரச்சனை அல்லது சண்டை வந்தாலே போதும், நாங்கள் எல்லொருமே நமது குரலை உயர்த்தி சத்தமாகப் பேச ஆரம்பித்து விடுவோம். இது நான் மட்டும் இல்லை, இந்த உலகில் வாழும் அனைத்து மனிதர்களும் செய்யும் ஒரு விஷயம் ஆகும். ஆனால், சில விஞ்ஞானிகள் செய்த ஆய்வுகளின்படி சில வகை மீன்களாலும் கூட இவ்வாறு குரலை உயர்த்தி ஆரவாரம் செய்ய முடியுமாம். குறிப்பாக Blacktail Shiners என்று அழைக்கப்படும் மீன்களைக் கொண்டு நடத்தப்பட்ட ஒரு ஆய்வில், இந்த வியப்பூட்டும் விஷயம் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த மீன்களைப் பிடித்து ஒரு தொட்டிக்குள் அடைத்த பின்னர் இந்த மீன்கள் எவ்வாறு தொடர்பு கொள்கின்றன என்பதை மீன்பிடி உயிரியல் ஆய்வாளர்கள் அறிய முயன்றனர்.

ஒரு சில நாட்களாகச் செய்யப்பட்ட இந்த ஆய்வில் பெண் இன மீன் எவ்வித ஒலியையும் எழுப்பவில்லை என்றாலும், ஆண் இன மீன் இரண்டு வகையான ஒலிகளை எழுப்பியது. முதல் வகை ஒலி ஒரு வித பூனையின் மெல்லிய கத்தலின் ஒலி போன்று இருந்தது. ஆனால் இரண்டாவது வகை ஒலி சற்று பலமாக, ஒரு கதவில் தட்டும் போது ஏற்படும் ஒலி போன்று இருந்ததாக இவர்கள் கூறினர். சரி, இந்த இரு ஒலிகளையும் இந்த மீன்கள் ஏற்படுத்துகின்றன. அது இருக்கட்டும், ஆனால் அது ஏன் என்று தெரியுமா? முதல் வகை ஒலி பொதுவாக, ஆண் மீன் பெண் மீனைக் கவர்வதற்காக ஏற்பட்த்துகின்றது, இதுவே அந்த இரண்டாவது வகை ஒலியை மற்றொரு ஆண் மீனுடன் தன் இருப்பிடத்திற்காகவோ அல்லது துணைக்காகவோ சண்டையிடும் பொழுது எழுப்புவதாக ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இது ஆச்சரியமாக இல்லையா?
மனிதர்களால் மட்டும் தான் எல்லாமே பண்ண முடியும் என்கிற கருத்து தப்பானது என்பதற்கு இந்த வகை மீனும் ஒரு உதாரணம் ஆகிவிட்டது, அல்லவா? இந்த அதிசய விலங்கைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்? இதற்குப் பதிலை மட்டும் இல்லை, எனது சிறு கட்டுரை பற்றிய அபிப்பிராயத்தையும் எனக்குக் கண்டிப்பாக எனது முகநூல் பக்கத்தில் (www.facebook.com/scinirosh) அறியத் தாருங்கள்!







**டாக்டர் எம்.கே.முருகானந்தன்**
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
**குடும்பவைத்தியர்**


குழந்தைக்கு தாய்ப்பால் மட்டுமே கொடுக்க வேண்டும் என்பதை அறியாதவர் எவரும் இன்றைய காலத்தில் இருக்க முடியாது. ஆனால் சில அம்மாக்களும் அம்மம்மாக்களும் “தாய் சாப்பிடுகிறாள் இலை, களைச்சுப் போனாள். மாவைக் கரைச்சுக் கொடு“ என்று தூண்டாமலும் இலை.

தன் அழகு கெட்டுவிடும் எனப் பால் கொடுப்பதில்லை எனச் சிலர் தாய்மாரை நக்கல் அடிப்பதும் உண்டு. எவ்வாறாயினும் இவை யாவும் தவறான கருத்துகளாகும். குழந்தைக்கு ஏற்றது தாய்ப் பால் என்பதில் மாற்றுக் கருத்து ஏதும் இருக்க முடியாது. தாயின் பிற்கால் ஆரோக்கியத்திற்கும் பாலூட்டுதல் அவசியமானதே. எல்லாத் தாய்மாரும் போலவே நீங்களும்! உங்கள் குழந்தை பிறந்த உடனேயே அதற்கான உணவு உங்களிடம் தயாராக இருக்கிறது. இயற்கை தந்த வரம் அது.
தாய்ப்பால். அதை குழந்தைக்குக் கொடுக்கத் தவறாதீர்கள். நீடித்த உறவு இருந்தபோதும் தாய்ப்பால் ஊட்டுவதன் முழு வெற்றியும் பலனும் உடனடியாக எல்லோருக்கும் இயல்பாகக் கிட்டிவிடுவதில்லை. முதல் சில தினங்களில் நீங்களும் உங்கள் குழந்தையும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதிலேயே பெரிதும் தங்கியுள்ளது எனலாம். எல்லா முயற்சிகளும் போலவே பயிற்சிக்கப் பயிற்சிக்க பாலூட்டும் உங்கள் வினைத்திறனும் பெருகும். தொடுகையும் அணைத்தலும் அற்புதங்களை நிகழ்த்தும்.

சருமத்துடன் சருமம் படுவதினா உறவு நெருக்கமடையும். குழந்தையுடன் நீங்கள் செலவிடும் நேரம் முக்கியமானது. குழந்தையுடன் உறவுறும் நேரம் அதிகரிக்க உறவின் நெருக்கமும் அதிகரிக்கும். பாலும் சொரியும்.கடும்புப் பால் முதற்பால் அல்லது கடும்புப் பால் பற்றி நீங்கள் அறிவீர்கள். நிறம் சற்று மஞ்சளாக இருப்பதுடன் சற்று தடிப்பாகவும் இருக்கிறது. குறைந்த அளவிற்குள் நிறையப் போசாக்குகள் செறிந்துள்ளன. எனவே குறைந்த அளவையே குழந்தை குடித்தாலும் அதுவே குழந்தைக்குப் போதுமானதாக இருக்கும்.
தொற்று நோய்களைத் தடுக்கும் நோய்களுக்கு எதிரான பிறபொருள் எதிரிகள் (Antibodies) இக் கடும்புப் பாலில் செறிந்திருந்து குழந்தை தொற்று நோய்களுக்கு ஆளாகாமல் பாதுகாக்கின்றது. இவை உங்கள் வாழ்நாள் முழுவதுமாக நீங்கள் நோய்களுக்கு எதிராகப் போராடிப் பெற்ற நோய் எதிர்ப்புக் கவசமாகும்.
உங்களுக்குக் கிடைத்த கவசம் இப்பொழுது உங்கள் குழந்தையையும் பாதுகாக்கிறது. உடனடியாக பாலூட்ட ஆரம்பிக்கும்போது இந்த நோயெதிர்ப்புப் பொருட்கள் முக்கியமாக உங்கள் குழந்தையின் உணவுக் கால்வாயில் படர்ந்து பரவி கிருமிகள் தொற்றாமல் பாதுகாக்கின்றன.

## தாய்ப்பால் நீர்த்தன்மையானதா

ஒவ்வாமையைத் தடுக்கும் அத்துடன் ஒவ்வாமைகள் (Allergies) ஏற்படாமலும் தடுப்பதாக நம்பப்படுகிறது. அது என்ன ஒவ்வாமை எனக் கேட்கிறீர்களா? எமது பாரம்பரியத்தில் கிரந்தி என்று சொல்வோம். தோற் தடிப்பு, அரிப்பு, தலை அவிச்சல், சளி, மூக்கடைப்பு, தும்மலல் போன்ற பலவும் இவற்றில் அடங்கும். உடனடியாகத் தாய்ப்பால் அதாவது கடும்புப் பால் கொடுக்காது புட்டிப்பால் கொடுக்க ஆரம்பித்தால் மேற் கூறிய பாதுகாப்பு குழந்தைக்குக் கிட்டாமல் கிரந்திநோய்கள் (Atopic) தோன்றலாம். அத்துடன் வயிற்றோட்டம், சளி, காய்ச்சல் போன்ற தொற்று நோய்களுக்கும் ஆளாகலாம். எனவே பிறந்த உங்கள் குழந்தைக்கு தாய்ப்பாலைத் தவிர வேறெதுவும் கொடுக்காதீர்கள்.
நீங்கள் நோயுற்றால் பாலூட்டும்போது உங்களுக்கு தடிமன், சளி போன்ற தொற்று நோய்கள் வந்தாலல் நீங்கள் தொடர்ந்து பாலூட்டலாமா? நிச்சயம் ஊட்ட வேண்டும். தொற்று நோய்கள் உங்களுக்கு வரும்போது உங்கள் உடல் அதை எதிர்த்துப் போராடுவதால் அதற்கு எதிரான பிறபொருள் எதிரிகள் உங்கள் உடலில் தோன்றும். இவை உங்களது நோயைத் தணிப்பது மட்டுமின்றி குழந்தைக்கும் அதனை தாய்ப்பால் ஊடாக கடத்துகின்றன. அவர்களும் நோயெதிர்ப்பைப் பெறுவார்கள்.

பிறந்த உடன் குழந்தைக்கும் உங்களுக்கும் இரத்த உறவு என்றும் இருக்கவே இருக்கிறது. ஆனால் பிறந்த உடன் குழந்தையுடனான சரும உறவும் நெருக்கமும் அதன் நீட்சிக்கு மிகவும் முக்கியமாகும். பிறந்தவுடன் உங்கள் குழந்தையை உங்கள் சருமத்தில் படவைப்பதால் குழந்தைக்கு உங்கள் சரும வெப்பம் கிட்டும். அமைதிப்படுத்தும், அதன் சுவாசத்தையும் ஒழுங்காக்கும். பெரும்பாலான குழந்தைகள் பிறந்த உடனேயே விழிப் புணர்வுடன் இருக்கும். தாய்ப்பாலை நாடவும் கூடும்.

குழந்தை தாய்ப்பால் அருந்தியதும் உங்கள் உடலானது குழந்தையின் தேவைக்கு ஏற்ப சுரக்கத் தயாராகும். எனவே எவ்வளவு முடியுமோ அவ்வளவு விரைவாகப் பாலூட்டலை ஆரம்பியுங்கள். ஊட்டுவது அல்ல தானே குடிப்பது இரண்டு மூன்று நாட்கள் கழிய உங்கள் மார்புகள் கூடுதலாக பருத்து வெப்பமடைவதை உணர்வீர்கள். கடும்புப் பால் கழிந்து பால் அதிகமாகச் சுரக்கத் தொடங்குவதை இது குறிக்கும். எனவே குழந்தை வேண்டுமளவிற்கு அதிகம் பாலூட்ட முயலுங்கள். குழந்தையின் தேவைக்கு ஏற்பவே உங்களுக்குப் பால் சுரக்கும். குழந்தை தனக்குத் தேவையான அளவு தானே உறிஞ்சட்டும். அதிகம் ஊட்ட வேண்டும் என நீங்கள் தெண்டிப்பது அவசியமற்றது. முதல் ஓரிரு நாட்களுக்கு நீங்கள் குழந்தைக்கு ஊட்டுவதாக இருக்கும். அதன் பின்னர் குழந்தைக்கு பழக்கமாகிவிடும். அது தானே தனது தேவைக்கு ஏற்பக் குடிக்க ஆரம்பிக்கும்.
பாலின் தரம் உங்கள் பாலின் தடிப்பு ஆரம்பத்தில் கடும்புப் பாலாக இருந்தது போலன்றி பின் சில நாட்களில் நீர்த்தன்மையாக மாறும். உங்கள் குழந்தையின் தேவைகளுக்கு ஏற்ப உங்கள் பாலின் அடர்த்தியும் உள்ளடக்கமும் மாறும். முதல் ஓரிரு நாட்கள் போலன்றி அதன் நீர்த்தேவை அதிகரிப்பதால் அவ்வாறு இருந்தாலும் அதற்குத் தேவையான ஊட்டச் சத்துகள் யாவும் அதில் அடங்கியிருக்கும். தாய்ப்பால் ஊட்டுவது ஓர் அற்புதமான அனுபவம். உங்களுக்கும் குழந்தைக்கும் அது மகிழ்ச்சியையும் மனநிறைவையும் கொடுக்கும். குழந்தை வளர்ந்த பின்னும் அதற்கு தாய்ப்பால் உண்டதால் நல்லாரோக்கியம் தொடர்ந்து கிட்டும், ஊட்டியவருக்கும்தான்! நன்றி:தமிழர் தகவல் -கனடா






# Benefits part-time jobs for teenagers

## பகுதி நேர வேலையால் விடலைப்பருவத்தினர் பெறும் பயன்!

Samantha.V

In today's 21st century, the need to give teenagers financial education keeps growing. The goal of every society is to have responsible adults who are physically and financially mature to contribute their quota into the societal system. But the problem is that adults don't just grow from birth, they were transitioned from teenage years. As a result, it is necessary to train up kids right from time to be responsible for themselves, their families and society so that they won't constitute a nuisance in the nearest future.

One of the methods to assist or guide teenage from adolescence to adulthood is helping or allowing them to secure a part-time job. It is not just to help them to make money but also to develop their networking skills, identities, gain work experience and at the same time show them the sweetness of independence. In this article, we will be discussing the benefits of part-time jobs for teenagers.

**Benefits**

It helps the teens to build up their working experience

Today's job market most time favors those who have job experience. Most organizations are not ready to spend or waste funds (as I will choose to call it) on a new school leaver. Today's job market is undergoing a paradigm shift from certification acquisition to skills set acquisition – they are on the lookout for what an employee can offer them not their papers. Students who are involved in part-time jobs during high school have a better chance of building their resume and skills set to get the jobs they desired.

It helps to build up connection (networking)

Teens have the opportunity to meet up with professionals and employers in their workplace who might serve as future references and provide a recommendation on their behalf. Fortunately, those connections may last for decades or a lifetime. It gives teenagers who are exposed to the part-time job an edge over their counterpart who doesn't care about it.

**It helps to build confidence**

Taking up a part-time job allows teenagers to build up their confidence. It gives them the avenue to know how capable they are in the face of tasking situations. This virtue helps them to be more independent and serve as one of the strong pillars of turning them into responsible adults.

**It teaches balancing**

Although taking up a part-time job can hinder some of the teenager's school work. But it also teaches a vital lesson in life which is balancing. It prepares them to handle confusing situations and manage them well. It exposes them earlier to the struggles and reality of life so that they get prepared before their adulthood.





## Finance management

Taking up a part-time job in the early stage of life prepares one to learn how to manage funds effectively. It even provides them with the opportunity to learn by experience – trial an error until they eventually grasp the vital lesson of good finances.

Conclusively, exposing teenagers to the part-time job may have their adverse effects, but the benefits outweigh the disadvantage because it exposes them early to the issues of life and task of adulthood and it better prepares them for the future to turn them into responsible adults in the society.









# ஆகா! நரை வந்திடிச்சே!



ஜூட் பிரகாஷ் அவுஸ்ரேலியா

கொஞ்சக் காலத்திற்கு முன்னர், இடது கண் இமையில் ஒரு நீட்டு வெள்ளை மயிர் எட்டிப் பார்க்கத் தொடங்கியது. ஒரு காலம்பற shave எடுத்திட்டு, மூக்குக் கண்ணாடியை போட்டுக் கொண்டு முகக் கண்ணாடியை பார்க்க, "Hello.. how are you" சொல்லிக் கொண்டு அந்த ஒற்றை நரை மயிர் கண்ணிமையில் அரியாசனம் போட்டு அமர்ந்திருந்தது.

ஆண்டவரை கூப்பிட்டு மனதுக்குள் அழுதுவிட்டு, பெடியளை காரில் ஏற்றிக் கொண்டு பள்ளிக்கூடத்திற்கு போகும் வழியில், கண்ணிமையில் துளிர்விட்ட ஒற்றை நரை மயிரின் சோகத்தை அவங்களிடம் பகிர, பக்கத்து சீட்டில் இருந்த சந்தோஷ், காதடியில், பிடறியில் என்று தடவி பார்த்து விட்டு "அப்பா.. you got grey hair in your head too" என்று மல்டிபரல் கொண்டு மனதை நோகடித்தான்.

தலையும் நரைக்க தொடங்கி விட்டது, ஐயகோ என்று மனது அழத் தொடங்கியது. யாழ்ப்பாணத்தில் எங்களோடு வாழ்ந்த அம்மப்பாவை பழசு என்று சின்ன வயதில் பகிடியாக கூப்பிட்டது அப்போது ஞாபகம் வந்தது. அப்படியென்றால் நானும் இன்னும் கொஞ்ச நாளில் "பழசு" ஆகிவிடுவேனா, இப்பத் தானே பரி யோவானில் பத்தாம் வகுப்பில் படித்து விட்டு வந்த மாதிரி இருக்கிறது , அதற்குள் நானெப்படி "பழசாக" முடியும், இது கொடுமை என்று மனது அரற்றியது.

Signal light இல் கார் நிற்க, காரிலிருந்த முகக் கண்ணாடியை இறக்கி விட்டு மீண்டும் அந்த கண்ணிமை ஒற்றை நரையை கவலையோடு பார்த்துக் கொண்டிருக்க, மனிசியிடமிருந்து வரும் வழமையான காலை நேர தொலைபேசி அழைப்பு காரை உலுக்கியது.

"...என்ர கண்ணிமையில் ஒரு நரச்ச மயிர் வந்திட்டு" அனுதாபத்தை எதிர்பார்த்து கவலையை பகிர, "உமக்கு நீர் இன்னும் பெடியன் என்று நினைப்போ" மறுமுனையில் நக்கல் தொனித்தது. மௌனத்தையே விடையாக பகிர, "இன்னும் school Boys மாதிரி, கசநைனௌ ஓட சேர்ந்து வயசு போனது தெரியாமல் கூத்தடிக்க, நாடு நாடா வசனி போய்க் கொண்டிரும்.." Big Boss ன் அகம் TV மாட்டை மரத்தில் கட்டி விட்டு, பிரசங்கத்தை தொடர்ந்தது.

"..இந்த நரைச்ச மயிரை பிடுங்கட்டோ.." அந்த கண்ணிமையின் ஒற்றை நரை மயிரை நகங்களைக் கொண்டு சுற்றி வளைக்க முயற்சி செய்து கொண்டிருக்க, பின்னால் இருந்த கார்காரன் horn அடித்து, signal light இல் green light விழுந்ததை சுட்டிக் காட்டவும் சரியாக இருந்து.

"..பிடுங்காதேயும்..பிடுங்கினால் இன்னும் கனக்க வரும்..உதை விட்டு போட்டு.. பின்னேரம் வரும் போது மறக்காமல் பாலும் பாணும் வாங்கியாரும்.. மறக்காதேயும்.. உமக்கு வயசு போய்ட்டுது.. ஹா ஹா ஹா" மறுமுனையில் மனிசி மகிழ்ச்சியாக விடைபெற்றாள்.

"..பிடுங்கி தான் பார்ப்பமா.. அவா வேணுமெண்டு சொல்லுறாவோ" என்று மனம் ஒரு புறம் மனிசையை சந்தேகித்தது. வேலைக்கு வந்ததும், முதல் வேலையாக Googleஐ கேட்டால், அதுவும் மனிசி சொன்னது சரிதான் என்று சொல்லுது, ஒன்றை பிடுங்கினால் ஒம்பது முளைக்குமாம்.

ஊரில் வருடந்தோறும் நடக்கும் சம்சாரிகள் VS இளந்தாரிகள் கிரிக்கெட் ஆட்டத்தில், அப்பா சம்சாரிகள் அணிக்கு விளையாடும் போது அவருக்கும் நாற்பது சொச்ச வயசு தானிருந்திருக்கும். சம்சாரிகள் அணியை "பழசுகள் Team" என்று இளந்தாரி அண்ணாமார் நக்லடிக்கும் போது சிரித்ததும் ஏனோ இப்ப தான் நினைவில் வருகிறது.

பதினாறே பதினாறு வயதில் யாழ்ப்பாணம் வெலிங்டன் திரையிரங்கில் பார்த்த வருஷம் 16 படத்தோடு, குஷ்பூ கனவுக் கன்னியானாள். குஷ்பூவிற்கு வயதாகி சினிமாவை விட்டு விட்டு அரசியலில் நடிக்கத் தொடங்க, நாங்களும் நயன்தாராவின் கட்சியில் இணைந்தோம். நயன்தாராவின் கட்சியில் இணைந்தாலும், குஷ்பூவை என்றுமே மறக்க முடியவில்லை.

எங்களிற்கு வயது போவதை மறக்கவும் மறைக்கவும், நாங்கள் இளமையான நடிகைகளை பின் தொடர்ந்தாலும், வயது எங்களையும் அவளவையையும் கலைத்துக் கொண்டு தான் வருகிறது. எங்களைப் போல் குஷ்பூவிற்கும் தலைமயிர் நரைத்திருக்கும் என்று நினைக்க கொஞ்சம் ஆறுதலாக இருந்தது. நாளைக்கு நயன்தாராவிற்கும் தலைமயிர் நரைக்கும் என்று நினைக்க ஒரு நமுட்டுச் சிரிப்பு இதழோரத்தில் எட்டிப் பார்த்தது.

அலுவலகத்தில் கோப்பி போட போனால், Office குசினியில் இருக்கும் கண்ணாடியிலும் இடக்கண் இமையில் நரைத்த மயிர் தெரியுது. என்ன இழவிற்கு எல்லா இடமும் கண்ணாடி வைக்கிறாங்களோ என்று பொருமிவிட்டு, ஆசனத்தில் வந்தமர்ந்து கோப்பியைக் குடிக்க தொடங்கினால், மண்டைக்குள் அந்த ஒற்றை நரை மயிர் பற்றிய எண்ணம் தான் ஓடுது. Phoneல் எடுத்து முகத்தை ஒரு selfie எடுத்து, ஒற்றை நரையரின் தாக்கத்தை ஆராயத் தொடங்கினேன்.

இப்பக் கொஞ்ச காலமாக ஒவ்வொரு நாள் காலம்பறயும் பல் மினுக்கி, shave எடுத்து விட்டு, மூக்கு கண்ணாடியை மாட்டினால், முகக் கண்ணாடியை ஆக்கிரமிப்பது, இடது கண்ணிமையில் கோலோச்சும் அந்த ஒற்றை நரைமயிர் தான். ஒற்றை நரையரை பிடுங்கவா.. விடவா என்று விவாதத்தை மனம் ஒரு பக்கம் நடாத்திக் கொண்டிருக்க, தலையில் கொஞ்சம் கொஞ்சமாக நரைமயிர்கள், முல்லைத்தீவில் அரங்கேறும் சிங்களக் குடியேற்றங்களைப் போல், ஊடுருவத் தொடங்கிவிட்டன.

எவ்வளவு தான் மயிர் நரைத்தாலும் கடைசி வரை hair dye அடிப்பதில்லை, என்று ஏதோ வேகத்தில், ஏதோ அவசரத்தில், சமஷ்டி கேட்ட தமிழரசுக் கட்சியைப் போல, சபதம் வேறு எடுத்து விட்டேன். கன்னத்தில் கறுப்பு மை வழிய வழிய, எனக்கு நானே தலைக்கு கறுப்படிக்கும் காட்சியை முகக் கண்ணாடியில் காண, உண்மையிலேயே பயமாக இருக்கிறது.

எண்பதுகளில் நீட்டு காற்சட்டை போட்ட இயக்க அண்ணமார், எங்களது அரசியல் எதிர்காலத்தை, வேட்டி கட்டிய அரசியல்வாதிகளிடமிருந்து, பிடுங்கி எடுத்த காலத்தில், வயதானவர்கள் எல்லோரையும் ஏளனமாக பார்த்த இழிவான காலங்கள் இன்னும் நினைவில் நிழலாடுகின்றன. C50 என்றும், C70 என்றும் ரோட்டில் போகும் வயதானவர்களை பார்த்து கத்தி விட்டு ஓடிய தலைமுறையல்லவா நாங்கள்?

வயதில் முதிர்ந்த, அரசியல் அனுபவத்தில் நிறைந்த, வயதான அந்த பரம்பரையை ஒதுக்கி விட்டும், அழித்து விட்டும், நாங்கள் பயணித்த பயணத்திற்கு நடந்த கதை வரலாறி விட்டது. இன்றைய இளம் தலைமுறை அன்றைய இளம் தலைமுறையை போல இல்லை என்று, அன்று களமாடிய இன்றைய வயதானவர்களின் கவலைக் குரல்களும் கேட்கத் தொடங்கி விட்டன.

இன்று காலை எழுந்து, பல்லு மினுக்கி, ளாயஎந எடுத்து விட்டு, மூக்கு கண்ணாடியை மாட்டிக் கொண்டு முகக் கண்ணாடியை பார்த்தால், அதே இடதுகண் இமையில், நெட்டையாய் முளைத்திருந்த அந்த ஒற்றை நரை மயிருக்குப் பக்கத்தில், கட்டையாய் இன்னுமொரு கெட்ட நரை மயிர் ஒன்று குட்டியாய் முளைத்திருக்கிறது.

கண்ணிமையில் முளைத்த ஒற்றை மயிரோடு மல்லுக் கட்டிக் களைத் தவனுக்கு, இரட்டையரை ஆண்டவன் பரிசாக அளித்திருக்கிறான். மறுபடியும் மீசையும் குறுந்தாடியும் வளர்க்கத் தொடங்கினால், மீசையும் நரைக்கிறது, தாடியும் நரைக்கிறது, ஆனால் ஆசை மட்டும் இன்னும் நரைக்கவேயில்லை



# தமிழகத்தில் இந்த உகரச்சுட்டு இப்போது இல்லாமல் போய்விட்டது, ஈழத்தில் யாழ்ப்பாண வழக்கில் இன்றைக்கும் உள்ளது




தனசேகர் .பிரபாகரன்.

பச்சை உடுத்தியிருந்த ஆம்ஸ்டெர்டாம் மரங்களெல்லாம் மஞ்சள் உடுத்தி தன்னுடைய இலைகளை நீக்கி, எதிர்வரும் பனிக்காலத் தவத்திற்கு தம்மை தயார்படுத்திக் கொண்டிருந்தன. மனிதர்க்கு இதுவும் ஒரு படிப்பினை தான் போலும், பின்னாளில் வரும் அபாயம் அறிந்து அறிவுளோர் தங்களை காத்துக்கொள்வார் என்ற நீதிநூல்களின் சாராம்சத்தை அசைபோட்டவளாய் மெதுவே ஆம்ஸ்டர்டாம் சாலையோரத்தில் அலுவலகம் நோக்கி நடந்தாள் கயல்விழி.

தனியே சாலையினூடே நடக்கும்போது பலவிடயங்கள் கண்முன்னே வந்துபோகும், சிலசமயம் அது மலரும் நினைவுகளை அசைபோடுவதாகவும் சிலநேரங்களில் எதிர்காலத்தை எண்ணி தவிக்கும் மனநிலையாகவும் இருக்கலாம், கவிஞர்களுக்கோ அந்தத் தனிமை கவிதைகளை ஊறச்செய்யும் சூழலை கூட சிலநேரங்களில் ஏற்படுத்தி தரும்.

மடமடவென தோன்றியதை மனதில் வைத்துக்கொண்டாள், ட்ராமில் ஏறி அமர்ந்ததும் அதனை கைபேசியில் தமிழில் டைப் செய்தும் வைத்துக் கொண்டாள், வழக்கமான அலுவலக நாளான அன்று மதியம் வழக்கம் போல தோழி டென்சியுடன் மதிய உணவு அருந்த ஓரமாய் போய் உட்கார்ந்தாள் அவள், அன்று காலை எழுதிய கவிதையை டென்சியிடம் ஆர்வத்தோடு காட்டினாள் கயல்விழி.

டென்சி கேட்ட அடுத்த கேள்வி “உது உன்னுனைடய கவிதையா ?” ஆமன்று தலையசைத்த அவளுக்கு அடுத்து உடனே தோன்றிய ஐயம், உது ? இதென்ன புது வார்த்தை ?

டென்சி சிரித்துக்கொண்டே சொன்னாள் ”இதுவும் தமிழ் தான்”, மேலும் சொல்வாள் ”கல் தோன்றி மண் தோன்றா காலத்தே முன் தோன்றிய மூத்தமொழி எண்டு சொல்வாங்களே அந்த தமிழில் கிடைத்த பழைய நூல் தொல்காப்பியம், இற்றைக்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எழுதப்பட்ட அந்த நூல் ஒரு இலக்கண நூல்” அது சொல்கிறது ஒரு பொருளை சுட்டுவதற்கு மூன்று சுட்டுகள் அ, இ ,உ  உண்டு (அது, இது மற்றும் உது)

அது என்கிற அகரச்சுட்டு படர்கையிலும், இது எனும் சொல் அருகில் இருக்கும் பொருளை சுட்டவும் பொதுவாக பயன்படுத்தப்படும், ஆனால் இதற்கு இடையில் சொல்பவனுக்கு முன்னால் அதாவது முன்னிலையில் உள்ளது (ஓரளவு கிட்ட அல்லது நெருக்கமாக) முன்னிலையில் உள்ளவரிடம் பேசும்போது தான் உகரச்சுட்டு பயன்படுத்தப்படும்.

முழுதும் கேட்ட கயல்விழி, பெருமூச்சு விட்டவளாய் இப்படி ஒரு வார்த்தை எங்க ஊர்ல கேட்டதே இல்லை என்றாள்.

ஓம், தமிழகத்தில் இந்த உகரச்சுட்டு இப்போது இல்லாமல் போய்விட்டது, ஆனால் கடல் சூழ்ந்த ஈழத்தில் யாழ்ப்பாண வழக்கில் இன்றைக்கும் உள்ளது இந்த வார்த்தை.
கேட்கவே ஆச்சர்யமாக இருக்கிறது, நான் ஒரு புத்தகத்தில் வாசித்தேன் ஹோணல் எனும் மேலைதேயத்தவர் இவ்வாறு எழுதி இருக்கிறார்.

“நீண்டகாலமாக வடக்கிலங்கையிலே தனித்து வாழ்ந்து வரும் தமிழர் தம்முடைய தமிழகத்தில் வாழ்ந்துவரும் சகோதரர்கள் மறந்த பல தமிழ் வழக்கங்களை தக்கவைத்துள்ளனர். அதனுடன் செந்தமிழ் நிகர்த்த மொழியினை பேச்சுவழக்கில் கொண்டுள்ளனர்.”

மேலும் சொல்வாள் ”தமிழகத்தில் எழுதும் தமிழும் பேசும் தமிழும் இராண்டாகிப் போனது, பேசுவது போல எழுதுவதில்லை” ஆனால் டென்சி நீ பேசுவதே நான் எழுதும் வழக்கில் தான் என்று.

சரி உகரச்சுட்டு கற்றுக்கொண்டாய் அல்லவா கயல்விழி, இதையே போய் தமிழகத்தில் அதை கொடுங்கள், இதை கொடுங்கள் என்று கேட்கும் இடத்து ”உதை” கொடுங்கள் என்று கேட்டுவிடாதே, உதை கொடுத்துவிடுவார்கள் என்று ஹாஸ்யமாய் முடித்தால் டென்சி.



# சாதிக்கத்தானே புலம்பெயர்ந்தோம்!



-கல்லாறு சதீஷ்








சுபா உமாதேவன் சர்வதேசத் திட்டங்கள் சுவிஸ் என்னும் குழந்தைகள் உதவி நிறுவனத்தின் புதிய நிர்வாகப் பணிப்பாளராகப் பதவியுயர்வு பெற்றுள்ளார் என்பது ஊடகங்கள் மூலம் அறிந்ததே! இன்று பல சுவிஸ் ஊடகங்கள் சுபா பற்றிப் பேசுகிறது. இலங்கையிலிருந்து இரண்டுவயதில் பெற்றோருடன் சுவிஸ் வந்த சுபா, கல்வியில் சிறந்தார்,பெற்றோரை வணங்கினார், சமூகத்தை,மனிதத்தை நேசித்தார். தனக்கு வாழ்வு தந்த தேசத்தை மதித்தார்.உலக மானுடத்தை நேசித்தார்.

பல்கலைக்கழகங்களில் இளமாணி,முதுமாணிப் பட்டஙரகளைப் பெற்று சுவிஸ்தேசம் போற்றும் பெண்ணாக இன்று உயர்ந்துள்ளார்.தமிழ் மக்கள் நடாத்துகின்ற அதிக நிகழ்வுகளைத் தொகுத்து வழங்கினார்.

தமிழில்,ஆங்கிலத்தில்,பிரெஞ்சில்,ஜேர்மனில் என்று அனைத்து மொழி களையும் சரளமாக மேடைகளில் பேசி சபையைத் தன் கட்டுப் பாட்டுக்குள் வைத்திருப்பார்.இவர்பேசும் தமிழில் மொழி இனிமை இருக்கும்.இவரின் இந்த உயர்ச்சிக்குத் தாய்மொழி அறிவும் ஒரு அடிப்படை என்பேன்.
சுபா ஜெனிவாவில் தொகுத்து வழங்கிய எழுத்தாளர் கல்வியாளர் அருந்த வராசா அவர்களுடைய இரண்டு நூல் வெளியீட்டு விழாக்களும் எனது தலைமையில் நடைபெற்ற போதும், IBC தமிழின் சுவிஸ் விழாவின் போதும் சுபாவின் மொழி ஆளுமை பார்த்து நான் வியந்ததுண்டு.

தற்போதைய எனது அதிக வாசிப்பு என்பது ஜேர்மானிய மொழியில்தான், வழமைபோல் ”லுசேர்ணர் றுண்ட்ஷாவ்”என்னும் இலவசப் பத்திரிகையை வாசித்துக்கொண்டிருக்கும் போது,எனக்கு ஆச்சரியம் தரத் தக்க வகையில் எமது பிரதேச செய்தித் தாளிலும்,சுபாவின் போட்டோவுடன் கூடிய கட்டுரையை வாசித்தேன்,எமது பிள்ளை ஒன்று 72 நாடுகளில் உதவிப் பணியில் ஈடுபட்டுள்ள ஒரு உயரிய நிறுவனத்தின் பணிப்பாளராகப் பேசுவது,புலம்பெயர் வாழ்வு தந்த வரம் என்று மகிழத் தோன்றுகிறது. புலம்பெயர் சமூகம் தொடங்கிவிட்டது,அகதிச் சமூகமல்ல, அதிதிச் சமூகமாக வரலாற்றை மாற்றி எழுதத் தொடங்கி விட்டார்கள்.
மொழிச் சிரமம் கொண்ட முதல் சந்ததியின் குழந்தைகள் பன்மொழிப் பாண்டித்தியத்துடன் சுவிஸின் சகல திணைக்களங்களிலும் அதிகாரிகளாக வலம் வரத் தொடங்கிவிட்டார்கள்.

தமக்கு வாழ்வு தந்த தேசத்திற்கும்,மக்களுக்கும் நன்றியுடனும்,தேசத்தின் சட்டங்களுக்குத் தலை வணங்கியும் எமது சந்ததி வீழமாட்டோம் என்று வீறு நடை போடுவதைப் பார்க்கும் போது எனது நெஞ்சம் நிறைந்து பூரிக்கிறது. ஆனந்தக் கண்ணீர் கொட்டுகிறது.
"Stell dir vor .......du sprichtst ....und alle hören zu"
”நினைத்துப் பாருங்கள் .... இன்று நீ பேசுகிறாய், எல்லோரும் கேட்கிறார்கள்.”

சுபா இந்த உயரத்தை நிமிர்ந்து நின்று தொட்டுள்ளார்.தன்னம்பிக்கையைத் தாங்கி நின்று தழுவியுள்ளார்.எமது சமூகம் தொடவேண்டிய உயரங்களின் உண்மையான தொடக்கப் புள்ளியாக சுவிஸிலிருந்து சுபா தோன்றியுள்ளார். வாருங்கள் எமது நேச உறவுகளே சுபாவின் காலடித்தடம் பதித்து உலகின் சிகரங்களைத் தழுவுங்கள்.
உலகில் குழந்தைகள் மிகுந்த சிரமங்களையும்,வலிகளையும் அனுபவித் துக்கொண்டிருக்கிறார்கள், குறிப்பாகப் பெண்குழந்தைகளின் பாடுகளோ மிகவும் சோகத்துக்குரியது, உலகளாவிய ரீதியில் இவர்களின் குறை அகற்ற சுபா உமாதேவன் வழிநடத்தும் Plan International Schweiz எனும் அமைப்பும், சுவிஸ் google நிறுவனமும் இணைந்து நடாத்திய ஒக்டோபர் 11,பெண் குழந்தைகள் சர்வதேச தினத்தின் உச்சிமாநாடு வெற்றிகரமாக நடைபெற்றது. இரண்டு வயதில் புலம்பெயர்ந்த சுபா உமாதேவன் ஒரு உயர்ந்த சுவிஸ் சர்வதேச நிறுவனத்தின் தலைமைப்பீடத்தை நிறைப்பதானது எம்மினம் சாதிக்கத் தொடங்கிவிட்டது எனும் நம்பிக்கையைத்தருகிறது.

”புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகத்தின் முதல் தலைமுறை என்ன செய்தார்கள்? என்ற வினாவுக்கு,அவர்கள் தங்களின் சந்ததிக்கு சர்வதேசக்கல்வியை வழங்கிச் சென்றார்கள்” என்கிற உண்மையான சமூக நேசர்களின் இலட்சியத்தச்,சத்தியத்தை நிறைவேற்றி நிற்கும் சுபா போன்ற ஒவ்வொரு பிள்ளையும் எமது நம்பிக்கையின் சொத்தாகும்.




அனைவருக்கும் எங்கள் உள்ளம் கனிந்த தீபாவளி நல் வாழ்த்துக்கள்




அனைவருக்கும் எங்கள் உள்ளம் கனிந்த தீபாவளி நல் வாழ்த்துக்கள்

## நகுலா சிவநாதனின் "நதிக்கரை நினைவுகள் " நூல் வெளியீடு!



திருமதி நகுலா சிவநாதனின் நதிக்கரை நினைவுகள் எனும் நூல் தமிழகத்தில் திருச்சி நடைபெற்ற நிலாமுற்ற விழாவிலும் சென்னையிலும் கடந்த மாதம் வெளியீடு செய்யப் பட்டுள்ளது. நிலாமுற்ற விழாவில் வழக்குரைஞர் திரு பா. ரஹ்மான் அவர்கள் வெளியிட்டு வைத்தார். பிரபல தொழில் அதிபர் குமரன் அம்பிகா முதற் பிரதியைப் பெற்றுக்கொண்டார்

சென்னையில் நடைபெற்ற விழாவில் தொழிலதிபர் நமசிவாயம் வெளியிட திருப்பம் இதழ் ஆசிரியர் சதார் மன்சூர் அவர்கள் பெற்றுக்கொண்டார். நகுலா சிவநாதனின் 12 வது நூலாக நதிக்கரை நினைவுகள் தமிழகத்தில் வெளியீடு கண்டது இவ்விழாவை குறும்பட இயக்குனர் சக்கரவர்த்தி அவர்கள் ஏற்பாடு செய்தமையும் குறிப்பிடத்தக்கது.

## குரும்பசிட்டியில் சுவிற்சர்லாந்து பூர்ண ஆஸ்ரமத்தின் ஆத்மானந்தம் நூல் அறிமுகவிழா



குரும்பசிட்டி சன்மார்க்க சபை இணைவுடன் சுவிற்சர்லாந்து பூர்ண ஆஸ்ரமத்தின் ஆத்மானந்தம் நூல் அறிமுகமும் ஆன்மீக நிகழ்வும். (30.09.2018)

## எமது தயாரிப்புக்கள் தற்போது யேர்மனியிலும் கிடைக்கும்




# யாழ் மண்ணில் சாதனை படைத்த இருதய சத்திரசிகிச்சை நிபுணருக்கு பிறந்த மண்ணில் பெரு மதிப்பளிப்பு விழா!



டாக்டர்.சிதம்பரநாதன் முகுந்தன்







யாழ். போதனா மருத்துவமனையின் இருதய நெஞ்சறை சத்திரசிகிச்சை நிபுணர் சிதம்பரநாதன் முகுந்தனின் பணிகளை நயந்து தென்மராட்சி மக்கள் முன்னெடுத்த மதிப்பளிப்பு விழா சாவகச்சேரி சிவன்கோவிலடி தென்மராட்சி கலைமன்ற கலாச்சார மண்டபத்தில் 07.10.2018 ஞாயிற்றுக்கிழமை இம்பெற்றது.



பாராட்டு விழாக்குழுத் தலைவர் செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கலந்து கொண்டார்.

சாவகச்சேரி சிவன் கோவிலில் இருந்து விழா மண்டபம் வரை நாதஸ்வர வித்துவான் கே.எம்.பஞ்சாபிகேசனின் பேரர்களான வி.சித்தார்த்தன் , வி.பிரதித்தன் ஆகியோருடைய இசைமழையில் வரவேற்பு ஊர்வலம் இடம்பெற்றது.

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் சைந்தவி ஜனார்த்தனன் இறைவணக்கம் இசைத்தார். சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன் வரவேற்புரை ஆற்றினார்.

.சாவகச்சேரி முத்துமாரி அம்மன் ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ க.வீரபத்திரக்குருக்கள், சாவகச்சேரி பங்குத் தந்தை அருட்பணி றெக்ஸ் சவுந்தரா அடிகள் ஆகியோர் ஆசியுரைகளை வழங்கினர்.

.

பாராட்டுரைகளை வடமாகாண உறுப்பினர் கேசவன் சயந்தன், யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம், யாழ். போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் டாக்டர் ச.ஸ்ரீபவானந் தராஜா, தென்மராட்சி பிரதேச செயலர் தேவந்தினி பாபு, உணர்வழியியல் வைத்திய நிபுணர் டாக்டர் சு.பிரேமகிருஷ்ணா, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்யட்சகர் டாக்டர் ப.அச்சுதன், யாழ். போதனா வைத்தியசாலையில் முதன்முதலில் இருதய சத்திரசிகிச்சைக்கு உட்பட்ட முல்லைத்தீவைச் சேர்ந்த ச.ரண்குமார் ஆகியோர் ஆற்றினர்.

சிறப்பு மலரும் வெளியிட்டு வைக்கப்பட்டது. (டாக்டர் சி. முகுந்தன் 1969 ஆண்டு பிறந்தவர்) மலரை சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் ஓய்வுநிலை அதிபர் கைலைநாதன் வெளியிட்டு வைத்தார்.

.

யாழ். போதனா வைத்தியசாலையில் முதன்முதலாக திறந்த இருதய சத்திரசிகிச்சையை மேற்கொண்ட குழுவில் பிரதான அங்கம் வகித்த உணர்வழியியல் சிகிச்சை நிபுணர் டாக்டர் சு.பிரேமகிருஷ்ணா, தலைமைத் தாதிய உத்தியோகத்தர் பி.ஜே.வி.ரமேஷ்குமார் ஆகியோர் முதலமைச்சரால் பொன்னாடை போர்த்தி மதிப்பளிக்கப்பட்டனர்.

அன்று 2015 இல் தனது கல்வியை நிறைவு செய்து வைத்திய நிபுணராக இலங்கை வந்த இவருக்கு கொழும்பு லேடிறிஜ்வே (LRH)வைத்தியசாலையில் நியமனம் கிடைத்தது. பிறந்த மண்ணில் சேவையாற்ற விண்ணப்பித்து மிகக் கடினபட்டு கொழும்பு லேடிறிட்ஜ்வேயில் இருந்து விடுவிப்பைப் பெற்று 2016 இல் யாழ். போதனா மருத்துவமனைக்கு நியமனம் பெற்று வந்தார்.

கொழும்பு, காலி, கண்டி ஆகிய இடங்களில் மாத்திரம் திறந்த இருதய சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படும் சூழலில் யாழ். போதனா மருத்துவமனையில் இருதய சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படுவதற்கான ஆயத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

.

பணிப்பாளர் தலைமையிலான குழுவினர் தீவிரமாக இதற்கான முயற்சிகளில் ஈடுபட்டனர். அதில் முக்கிய பொறுப்பை ஏற்ற முகுந்தன் பணிக்குழுவிற்கான பயிற்சி வழங்கலில் இருந்து உபகரண நிர்மாணம் வரை தனது பங்களிப்பை முழுமையாக நல்கினார். இவரது முயற்சியின் தீவிரத்தை இவரைச் சந்திப்பதற்கு வைத்தியசாலைக்குச் சென்ற பொழுதுகளில் நானும் தரிசித்துள்ளேன்.

.2017 ஆம் ஆண்டின் இறுதியில் இவரது தலைமையிலான குழுவினர் வெற்றிகரமாக திறந்த இருதய சத்திரசிகிச்சையை மேற்கொண்டனர். குறைந்த ஆளணியுடன் குறைந்த வளங்களுடன் இச்சிகிச்சை மேற்கொள்ளப்பட்டமை ஒரு சாதனையாகவே பலராலும் பார்க்கப்படுகின்றது. இதனால் யாழ். போதனா மருத்துவமனையின் பெருமை மக்கள் மனங்களில் இன்னும் ஒரு படிமேலுயர்ந்தது..விழாக்குழுவின் இணைச் செயலர் ச.தயாபரன் நன்றியுரை நல்கினார்.

.நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், வடமாகாண எதிர்க்கட்சித் தலைவர் தவராசா, மாகாண உறுப்பினர்களான அரியரட்ணம், ஜெயசேகரம், கஜதீபன் மற்றும் சாவகச்சேரி நகரசபை, மற்றும் பிரதேச சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள் உள்ளிட்ட ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர். இவர்களுள் பலர் மட்டுவிலில் இருந்து வருகை தந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.. நிகழ்வில் தென்மராட்சி மக்கள் சார்பிலான நினைவுக்கிண்ணத்தை முதலமைச்சர் கையளித்தார்.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் சார்பான நினைவுக் கிண்ணத்தை தலைவர் ந.சிவபாலன் , உபதலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் கையளித்தனர்..

முகுந்தன் ஆரம்பக் கல்வியைக் கற்ற மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம் சார்பான கௌரவிப்பை அதிபர் எழிலன் தலைமையிலான பாடசாலைச் சமூகத்தினர் மேற்கொண்டனர்..

நன்றி : செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன். படங்கள் சாவகச்சேரி குகன்



# 6.5 மில்லியன் மக்கள்! யேர்மனிக்கு பியர்குடிக்க படை எடுத்தனர்!




வ.சிவராஜா

யேர்மனியில் நடைபெறும் கொண்டாட்டங்களில் உலகப் பியர் கொண்டாட்டம் மிகவும் பிரபலமானதாகும். பியர் குடிபானம் உற்பத்தியிலும் ரசித்து ருசித்துக் குடிப்பதற்கு ரகமான பியர் என்றால் அது யேர்மனியில்தான் கிடைக்கும் என உலகப் பெருங்குடி மக்கள் கருதுகிறார்கள். பியர் குடிப்பதற்கென்றே உலகநாடுகளிலிருந்து யேர்மனிக்குப் படை எடுத்துவரும் பெரும்குடிமக்கள் ஏராளம்பேராவர்.

இந்தப்பியர்திருவிழா யேர்மனியில் 1880ம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்டு வருடாவருடம் நடைபெற்று வருகின்றது. வழமையாக நடைபெறும் முன்சன் மாநகரில் 22.09.2018 தொடங்கி 7.10.2018ல் முடிவடைந்தது. 2 வாரங்களாக நடைபெற்ற இந்தப் பியர்த்திருவிழாவில் சுமார் 6.5 மில்லியன் உலகமக்கள் கலந்துகொண்டனர். இது நடைபெற்ற இடம் ஒரு கிராமம் போல் காட்சியளித்தது. சுமார் 8.000 பேர் ஒரே நேரத்தில் இருந்து குடித்து மகிழும்வண்ணம் கூடாரங்கள் அமைக்கப்பட்டிருந்தன. சுமார் 8 மில்லியன் லீட்டர் பியர்வகைகளைக் குடித்துத்தள்ளியிருக்கிறார்கள் இந்தப் பெருங்குடி மக்கள்.




ஒரு லீட்டர் பியர் 11 12 யூரோவரை விலைபோயுள்ளதென்றால் மிகவும் விரும்பி உண்ணும் பன்றி இறைச்சிவகை எத்தனை தொன் என கணக்குப் பாருங்கள். இந்தக்குறிப்பிட்ட இரு வாரமும் முன்சன் நகரமே விழாக்கோலம் பூண்டிருந்தது. விடுதிகள், ரெஸ்ரோரண்ட் எல்லாம் பல நாட்டு மக்களால் நிரம்பி வழிந்ததாம். பாதுகாப்பு, சுகாதாரம், போக்குவரத்து அனைத்து விடையங்களையும் முன்சன் மாநகரசபையினர் மேற்கொண்டிருந்தனர். இந்த பியர்த் திருவிழாவில் நம்மவர்களும் ஒரு சிலர் சென்றுவந்தாகத் தெரியவந்துள்ளது.

# 3.5 மில்லியன் யேர்மனியர் புகைத்து தள்ளுகிறார்கள்!

## E.Zigaretten

E.Zigaretten அதாவது மின்சாரச் சிகரட் என்றும் கூறலாம். இது சாதாரண சிகரட்டைவிட ஆபத்துக் குறைவானது எனக் கருதப்படுகின்றது. 1963ம் ஆண்டில் அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டது. தற்போதுதான் இதை அதிகம்பேர் பாவிக்கிறார்கள்.
யேர்மனிய சனத்தொகை சுமார் 82 மில்லியன்பேரில் 3.5 மில்லியன் பேர் இதைப் பாவிக்கிறார்கள். இதனால் சுமார் 600 மில்லியன் யூரோவிற்கு வருடாந்த வியாபாரம் நடைபெறுகிறது எனத் தெரியவருகின்றது.

யேர்மனிய மக்களில் 77 வீதம் ஆண்களும் 23 வீதம் பெண்களும் இந்தச் சிகரெட்டைப் பாவிக்கிறார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. எது எப்படியாயினும் இந்தப் புகைத்தலால் மனிதகுலத்துக்கு அழிவுதான். ஆகவே புகைத்தல் பழக்கமுடையவர்கள் படிப்படியாகக் குறைத்து இல்லாமல் செய்தால் இன்னும் பல ஆண்டுகள் உயிர் வாழலாம் என்பது உண்மையான விடையமாகும்.



படம்: வெற்றிமணி




வாகனச் சாரதி பயிற்சி நிலையம்
HK Hammacher
Fahrschule- hk- hammacher.de
எமது இணையத்தளத்தை பார்க்கவும்
ஆங்கிலம்,யேர்மன்,பிரஞ்,துருக்கி மொழிகளில்
வகுப்புக்கள் உண்டு.பரீட்சைக்கு வரக்கூடிய வினாக்கள், கார் மற்றும் மோட்டோசைக்கிளிற்கும் சிறப்பாகத் தெரிவுசெய்துகற்பிக்கப்படும்.
தமிழில் தொடர்புகளுக்கு: 0172 57 35 454
HK Hammacher
Schleswiger Str .5
44145 Dortmund
0231 81 55 94
0173 56 46 651
MPU
ASF
FES
இவர்களுக்கான சிறப்பு வகுப்புக்களும் உண்டு!



Chilli Mixx Catering
உங்கள் மங்கலகர வைபவங்கள்
சுவைபெற எம்மை அழையுங்கள்!
திருமண விழாக்கள்
பூப்புனித நீராட்டு வைபவங்கள்
பிறந்த நாள் கொண்டாட்டங்கள்
ஒன்றுகூடல்கள் எதுவானாலும்
அறுசுவை படைக்க அழையுங்கள்



+49 176 41842298
+49 176 21303158



அன்னைக்கு
உணவளிப்பதை தரணிக்கே
சொல்லும்
மாந்தர் இல்லை.
அத்தகைய அன்பைத் தான்
நாமும் கேட்கிறோம்.




ஏழையில் இரத்தப் பிரிவுக்கும், பணக்காரனின் இரத்தப் பிரிவுக்கும் கடவுள் எந்த பாகப்பிரிவினையும் செய்யவில்லை.
உனக்கான நாளுக்கு இருபத்து நான்கு மணிநேரமெனில், ஏழைக்கும் அது தானே வழங்கப்பட்டிருக்கிறது. உனக்கான சூரியனும் ஏழைக்கான சூரியனும் ஒன்று தான் ! உனக்கும் அவனுக்கும் இரவில் உதிப்பது நிலா தான். இறைவன் அனைத்தையும் பொதுவில் வைக்க, மனிதன் மட்டுமே பொதுவையும் தனக்குள் பதுக்கினான்.

# முகப்புத்தகத்தில் எங்கள் வறுமையின் வலியைப் போட்டு !எமக்கு வலிமை!! சேர்க்காதீர்கள்!!!

மிகப்பெரிய விழா. வாரி வழங்கும் விழா நடந்து கொண்டிருந்தது.
மைக் அறிவிப்பை ஒலிபரப்பியது. "இப்போது, ஏழைகளுக்கு உதவி வழங்கும் நிகழ்ச்சி."
கூட்டம் கரவொலி எழுப்பியது. பாப்கானைக் கொறித்துக் கொண்டும், ஸ்மார்ட் போனை நோண்டிக்கொண்டும் இருந்த மக்களின் கண்கள் அரங்கை நோக்கின.

"முதலில் கணவனை இழந்த செல்லாயிக்கு ஐயாயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது"
கூட்டம் கைகளைத் தட்ட, கதர் சேலையோடு அந்த ஏழைத் தாய் மேடையேறினாள். காஸ்ட்லி கேமராக்கள் வெளிச்சத்தை அவள் மேல் விசிறியடித்து புகைப்படங்களாய் அள்ளிக் கொண்டன. ஏழ்மையின் அத்தனை அம்சங்களையும் தன் முகத்தில் போர்த்தியிருந்த அவள் நடுங்கும் விரல்களால் அந்தப் பணத்தைப் பெற்றுக் கொண்டாள்.

உடலெங்கும் கூசியது. பணக்காரத்தனத்தின் முன்னால் அருகதையற்ற ஒரு ஏழையாய்த் தன்னை பிரகடனப்படுத்துகிறார்களே என அவளது உள்ளம் குத்தப்பட்டது. கூனிக் குறுகினாள். இருந்தாலும் அந்த அவமானங் களையெல்லாம் புறந்தள்ளி அவள் புன்னகைத்தாள். நாளை பத்திரிகைகளில் அவள் புகைப்படம் வரக்கூடும். மேடைபோட்டு கொடுத்த அவமானம் நாட்டின் பிற இடங்களுக்கும் பயணப்படும்.
பணத்தை வாங்கிக் கொண்டு இருட்டில் நழுவி சற்றுத் தொலைவில் இருந்த குடிசையை நோக்கி நடந்தாள் செல்லாயி. குடிசைக்குள் ஓரமாய் அமர்ந்து இயலாமையின் சுவர்களில் நகத்தால் சுரண்டிக்கொண்டிருந்தாள் பருவம் தாண்டிய அவளுடைய மகள்.

நம்மைச் சுற்றிலும் செல்லாயிக்கள் நிரம்பியிருக்கின்றனர்.

நான் பிறரிடம் ஏந்திப் பிழைக்கும் சாதி என பிரகடனம் செய்ய பத்திரிகைகளிலும் முகப்புத்தகத்திலும் என் புகைப்படத்தை வெளியிட்டு பரப்புரை செய்தீர்கள். எனக்கு கைக்குட்டை வழங்குவதற்காக என் ஆடைகளை உரிவதைப் போல அவஸ்தையைக் கொடுத்தீர்கள். பெற்றுக் கொள்ள வேண்டிய சூழல், ஏற்றுக் கொள்ள முடியாத அவஸ்தை.

ஏழைக்கு உதவ வேண்டும் எனும் எண்ணத்தை விட, நான் தர்மவான் என்று காட்டிக்கொள்வதையே இன்றைய சமூகம் விரும்புகிறது.

எல்லோருமே இறைவனின் பிம்பங்கள் தான். இறைவனின் படைப்பில் வேறுபாடு இல்லை. ஏழையின் இதயத்துக்கும், பணக்காரனின் இதயத்துக்குமிடையே இறைவன் டிசைனில் வேறுபாடு காட்டவில்லை.

பொருளாதாரத்தில் பல் பிடித்து, அந்தஸ்தின் கணக்கு பார்த்து வாழ்கின்ற வாழ்க்கை செயற்கையின் வெளிப்பாடு. இயற்கை விரும்பிய வாழ்க்கையும், இறைவன் விரும்பிய வாழ்க்கையும் அதுவல்ல. உடலின் உறுப்புகள் போல சமூகத்தின் மனிதர்கள் இணைந்து வாழ்தலே சிறப்பான வாழ்க்கை !

ஏழைகள் எதிலும் குறைந்தவர்களல்ல. அவர்களுக்கு பொருளாதாரம் மறுக்கப்பட்டிருக்கிறது, நமக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அது ஒன்றே வேறுபாடு. இருப்பவர் இல்லாதவரோடு பகிர்ந்து கொள்வதே தேவையானது. இல்லாதவர் குறைந்தவருமல்ல, இருப்பவர் பெரியவருமல்ல. இந்த வாழ்க்கையை முடிக்கும்போது வங்கிக் கணக்கின் அடிப்படையில் பேரின்ப வீடு ஒதுக்கப்படுவதுமில்லை.

உதவி என்பது பிறர் அறியாமல் செய்ய வேண்டியது. வலது கை செய்யும் உதவி இடது கைக்குக் கூட தெரியக் கூடாது இது கர்ணனின் கொடையுள்ளம்.

நாமோ ஊருக்கே விளம்பரம் செய்து தான், நாலுபேருக்கு பருக்கைகள் கொடுக்கிறோம்.

மகளுக்கு உதவி செய்வதை விளம்பரம் செய்யும் தந்தையில்லை. மனைவிக்கு சேலை வாங்கிக் கொடுப்பதை போஸ்டர் அடித்து பிரபலப்படுத்தும் கணவன் இல்லை. தந்தைக்கு உணவளிப்பதை தரணிக்கே சொல்லும் மைந்தன் இல்லை. அத்தகைய அன்புதான் அவர்களுக்குத் தேவையானது.

முகப்புத்தகத்திலும் பத்திரிகைகளிலும் தலைகுனிந்து தன்மானம் இழந்து நிற்கும் எங்கள் படங்களைப் போடாதீர்கள். உங்கள் படங்களைப் போடுங்கள். கொடுக்கும்போது உங்கள் முகம்தானே தெரியும். எங்கள் பின்பக்கம்தானே தெரியும். அதுவே உங்கள் சேவைக்கு சாட்சியாக இருக்க போதுமானது. எங்கள் பின்பக்கம் தான் உங்கள் உதவியின் பின்னணியாக இருக்கட்டும்.

அதன் மூலம் எங்களுக்கு உதவ முன்வருபவர்கள் எண்ணிக்கை அதிகரிக்கலாம். நீங்கள் எங்கள் படங்களைப் போடுவதற்காக கூறும் காரணங்களுக்கும் இது மாற்றீடாகவும் அமையலாம்.

பொது நிறுவனங்களுக்கு நீங்கள் அளிக்கும் உதவியை படம்பிடித்துப் போடுங்கள். அது சேவையாளரும் சேவையாளரும் கைகுலுக்கும் ஆனந்தக் காட்சியாக அமையட்டும்.

தொடர்ச்சி 21 ம் பக்கம்



## எங்கள் வறுமையின் வலியைப் போட்டு எமக்கு வலிமை சேர்க்காதீர்கள்.

20ம் பக்கத் தொடர்ச்சி...




உண்மையான உதவி என்பது முதலில் ஏழைகளை ஏழைகளாய்ப் பார்க்காமல் சக தோழர்களாய்ப் பார்ப்பது தான். அவர்களை எந்த வகையிலும் தன்னை விடக் குறைந்தவர்களாய்ப் பார்க்காமல் இருப்பது முதல் தேவை.



பசியை விட
பட்டினியை விட
சாவை விடக் கொடுமையானது
எல்லோரையும் விட
நான் தாழ்ந்திருப்பதாய்
நீ
அறிவிப்புக் கூட்டம் நடத்துவது.

எனக்குத் தருவதாய்
சொல்லிக் கொள்கிறாய்.
ஆனால்
தருவதை விட
அதிக மதிப்புள்ள
கர்வத்தைப் பெற்றுக்
கொள்கிறாய்.

-சேவியர்.

பிறருக்கு உதவுவது போல மகிழ்ச்சியான செயல் எதுவும் இல்லை. பிறருக்கு உதவக் கூடிய அளவுக்கு இறைவன் நம்மை வைத்திருக்கிறார் எனில் அது மிகப்பெரிய வரம் என்பதில் மாற்றுக்கருத்து ஏதும் இல்லை.

ஏழைகளை கனிவுடன் நோக்குவோம். அவர்கள் இறைவனின் குறைப்பிரவசங்களல்ல, நமது மனதின் இரக்கத்தை அளந்து பார்க்க அனுப்பப்பட்டவர்கள். நம்மிடம் இருப்பது கர்வமா கருணையா என்பதை கண்டறிந்து சொல்பவர்கள் இவர்கள் தான்.

மனதை மாற்றுவோம். ஏழைகள் நமது உயிரின் பாகங்கள். அவர்கள் நமது சகோதரர்கள், சகோதரிகள். அவர்கள் இந்த மண்ணில் நம்மோடு பயணிப்பவர்கள். அவர்களை அரவணைப்போம். அவர்களை கனிவுடன் நோக்குவோம். அவர்களுக்குத் தேவையான உதவிகளை செய்வோம். எந்த வகையிலும் அவர்களுடைய தன்மானம் சிதையாமலும், அவர்களை அவமானம் அணுகாமலும் உதவுவோம்.

முகப்புத்தகத்தில், பத்திரிகைகளில் எங்கள் வறுமையின் வலியைப் போட்டு எமக்கு வலிமை சேர்க்காதீர்கள்.

ஏழைகளுக்குத் தேவை நமது பொருளாதாரப் பகிர்தல் மட்டுமல்ல, அன்புப் பகிர்தல். அவர்களோடு நாமும் இணைந்திருக்கிறோம் என அவர்கள் நினைத்தால் அதுவே அவர்களுக்கு மிகப்பெரிய ஆறுதல். அதுவே ஆகப்பெரிய அன்பு.

ஒரு ஏழைக்கு உதவி தேவையெனில் அவர்களுடைய குடிசைக்குச் சென்று ரகசியமாய் கொடுத்து வாருங்கள். உங்களுடைய பணத்தின் எண்ணிக்கையல்ல, உங்கள் மனதின் எண்ணங்களே முக்கியம். உள்ளதைக் கொடுப்பதும், அவர்களுக்கு உங்கள் உள்ளத்தைக் கொடுப்பதும் தான் மிகவும் முக்கியம்.

எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் ஒரு செய்தியைச் சொன்னார். அவர்களுடைய ஆலயத்தில் ஏதேனும் ஏழைக்கு உதவி தேவைப்பட்டால் வசதி இருப்பவர்கள் பணத்தை ஒரு கவரில் போட்டு அவர்களுக்குத் தெரியாமல் அவர்களிடம் எப்படியாவது சேர்த்து விடுவார்களாம். யார் கொடுத்தது, யார் கொடுக்கச் சொன்னது என்பதை அறியாமலேயே அந்த ஏழைக்குத் தேவையான பணம் சென்று சேர்ந்து விடும்.

நமது ஈகை மறைவாய் இருக்கும் போது, இறைவன் நமக்கு பிரதிபலன் தருவார். நமது ஈகை தம்பட்டமாய் இருக்கும் போது இறைவனின் ஆதரவு அதற்கு எப்போதும் இருப்பதில்லை. அத்தகைய செயல்கள் நிச்சயம் பயனற்ற செயல்களாகவே முடிந்து விடும். விண்ணகத்தின் குறிப்பேட்டுக்கு அது எந்த ஒரு நல்ல செய்தியையும் அனுப்பாது.

விநாயகா ஜோதிட நிலையம்
பண்டித் துர்க்கா பிரசாத்
எவ்வித பிரச்சினைகளுக்கும் 09 நாட்களுக்குள் தீர்வு பெற்றுத் தரப்படும்..!
குடும்ப, காதல் விடயங்கள், மனை விவகாரங்கள், குழந்தை சந்தான பாக்கியம், பிள்ளைகள் படிப்பு, திருமண யோகம், தொழில், மனை, அபிவிருத்தி, லட்சுமிகடாட்சம் வாகனம், வீசாப் பிழச்சினைகள், நீதிமன்ற வழக்குகள், ஆரோக்கியம், பாக்கியம், வியாழ முன்னேற்றம் செய்வினை கோளாறுகள், பேய், பிசாசுத் தொந்தரவுகள், கண்திருஸ்டி, நாக தோஷம் மற்றும் உங்களது அனைத்துப் பிரச்சினைகளுக்கும்
உடனடித் தீர்வுகளுக்கு எமது சாஸ்திரியை நாடுங்கள் வெற்றி நிச்சயம்....!
பேசும் மொழி - ஆங்கிலம், ஹிந்தி, ஜேர்மன் மற்றும் தமிழ்
பார்வை நேரம் - வாரத்தின் 7 நாட்களும்
காலை 08.00 மணி முதல் மாலை 09.00 மணி வரை
Tel: +49 1512 95 88 372 +49 1521 33 58 655
PRABA SUPERMARKT
Hindenburgstraße 212, 41061 Mönchengladbach

Easy Holiday
Travels & Tours
உலகின் எப்பாகங்களுக்கும் சென்று வருவதற்கான விமான பயணச்சீட்டுகளை குறைந்த விலையில் நிறைந்த மனதுடன் தருகின்றோம்
தொடர்புகளுக்கு: Thureiraj Rukshan
Mob:0152 1365 4331 - 0152 04153138
எம் மக்களின் அபிமானம் வென்ற
Easy Holiday
Travels & Tours
தாய்நாடு சென்றுவர மலிவு விலையில்
●விமானச்சீட்டுக்கள்
●பயணக் காப்புறுதிகள்
●வாகன வசதிகள்
●வீசா உதவிகள் (இந்தியா இலங்கை)
●ஹோட்டல் வசதிகள்
Emirates ETIHAD Gulf Air OMAN AIR QATAR
Westring 36
44623 Herne
Germany
Tel:02323 965 4426 Fax:02323 9654427
e.mail: ezholiday16@gmail.com

## பெரியவர்களிடம் பிடித்ததும் பிடிக்காததும்

# பயத்தின் காரணத்தினால் அவர்கள் கண்டிக்கின்றனர்!

றஜினா தருமராஜா



பெரியவர்கள் என்றாலே மனதில் தோன்றுபவர்கள் யார்? அம்மாவும் அப்பாவும். இவர்களிடம் என்ன பிடிக்காமல் இருக்கும். ஒன்று மில்லையல்லவா?! நல்லதையே நினைப்பவர்களிடம் வேறு என்ன இருக்க முடியும். பிடித்தது மட்டுமே இருக்கும்.

ஆம் வாழ்க்கையை நீண்ட காலம் அனுபவித்தவர்கள் அவர்கள். அவர்கள் கூறும் அறிவுரைகள் கேட்பது பிடிக்கும். வாழ்ந்தவர்களிடம் வாழும் முறையினைக் கேட்டு அறிந்துகொள்வது பிடிக்கும்.

சரி பிழைகளைக் கூறும் முறை பிடிக்கும். பாதை தவறும் போது சரியான பாதைக்குக் கொண்டு செல்வதும் பிடிக்கும்.
சிறியவர்களிடம் அன்போடு காட்டும் அக்கறை பிடிக்கும். ஆறுதலாகப் பேசும் வார்த்தைகள் பிடிக்கும்.
கடினமாகக் கூறும் இடத்தில் கடுஞ்சொல்லும் பிடிக்கும்.
பிள்ளைகளைப் பற்றி கவலைப்படுவதும் அவர்கள் நினைவாக இருப்பதும் பிடிக்கும்.
பிடிக்காததும் சிலவற்றைக் கூறலாம்.
பிள்ளைகளின் மீது அளவு கடந்த பாசம் இருப்பதனால் சந்தேகிக்கின்றனர். கவலைக்குரிய விடயம். பிழைகள் செய்யவில்லையென்றாலும் தவறாக நினைத்துத் தண்டனை கொடுத்து விடுகிறார்கள்.
கண்டிப்பாக இருப்பது மனதுக்கு வேதனை தருகிறது. கண்டிக்க வேண்டும் ஆனால் அளவோடு இருப்பது நன்று.

சில நேரங்களில் அவர்கள் வாழ்ந்த முறையினை பிள்ளைகளிடம் திணிக்க முயலுவார்கள். எல்லோருக்கும் அக் காலத்து முறைகள் பிடிக்காதல்லவா. அந்நேரங்களில் பெரியவர்களைப் பிடிக்காது. அவர்கள் கூறுவது பிழையாகவே இருக்கும். நாம் பெரியவர்களின் இடத்தில் இருக்கும்போது தான் நாமும் உணருவோம்.
பெரியவர்களையும் பிழை சொல்ல முடியாது. பயத்தின் காரணத்தினால் அவர்கள் கண்டிக்கின்றனர்.

பெரியவர்களும் சரி சிறியவர்களும் சரி புரிந்து நடந்தால் பிரச்சினைகள் வருவதற்கு வாய்ப்பில்லை.
வேலை இடங்களில் பெரியவர்கள் அனுபவம் வாய்ந்தவர்கள். அவர்கள் எல்லாம் தெரிந்தவர்களாக இருப்பார்கள். ஆனால் புதிதாக சில முறைகளைக் கொண்டு வரும் பொழுது ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். பழைய முறைகளையே செய்வார்கள்.

ஆசிரியப் பணியைப் பற்றி பார்ப்போம். முதிய ஆசிரியர்கள் எவ்வளவு மாணவர்களை உருவாக்கியிருப்பார்கள். அவர்களிடம் இருந்து கற்கவேண்டியவை நிறைய உள்ளன. ஆனால் புதிய முறையில் கல்வியைக் கற்பிப்பது கடினம் என்பார்கள். அதாவது நவீன முறையில் கற்பிப்பது. இளைய ஆசிரியர்கள் அம்முறையினை மேற்கொள்கின்றனர்.

மாணவர்களுக்கும் பிடிக்கின்றது. முதியவர்களின் முறை பிழை என்று கூறவில்லை. ஆனால் காலத்துக்கு ஏற்ப நாமும் மாறிக்கொள்ள வேண்டும்.
பெரியவர்களை சிறியவர்களும் சிறியவர்களை பெரியவர்களும் புரிந்து நடந்தால் எப்பொழுதும் நன்று. இருவரும் அவர்களின் அனுபவங்களையும் சிந்தனைகளையும் பகிர்ந்து கொண்டால் யாவுமே நலமாக இருக்கும்.

பெரியவர்களை மதித்து வாழப் பழகிக் கொள்ள வேண்டும். அதேசமயம் பெரியவர்கள் இளையவர்களின் திறமைகளுக்கும் புதிய சிந்தனைகளுக்கும் தடையாக நிற்காது வழிவிடுதல் வேண்டும். அவர்களை அவர்களாக நிமிர்ந்து நிற்கும் தன்னம்பிக்கையை விதைக்கவேண்டும்.

வாழ்க்கை என்பது ஒரு மருதனோட்டம். அதில் ஓடிவந்து எம்மிடம் சேர்த்தபொருள் பெறுமதிமிக்கது, என்பதனை இளையவர் உணர்ந்து, அடுத்த கட்டப் பாச்சலுக்கு தம்மைத் தயார்செய்து கொள்வேண்டும்.




# இங்கிலாந்தில் வசிப்போர் வெளிநாட்டு சொத்துக்களை அறிவிப்பதற்கான நேரம் வந்துவிட்டது! இலையேல் அபராதம்!!!




**பத்திரிகை அறிக்கை**

**ஜயந்தன்**

"சரிசெய்ய வேண்டிய தேவை "எனும் புதிய சட்ட மூலம் (Requirement to Correct legislation) நடைமுறைப்படுத்தப்படுவதற்கு முன்பாக வெளிநாட்டு சொத்துக்களின் மூலமான வருமானத்தை அறிவிக்கத் தவறும் வரி செலுத்துவோர் அபராதங்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்படலாம் . HM வருவாய் மற்றும் சுங்க வரித் திணைக்களம் (HMRC) பிரிட்டனின் வரி செலுத்துவோர் தமது வெளிநாட்டு வருமானம் மற்றும் இலாபங்களை 2018 செப்டம்பர் 30 நதிகதிக்கு முன்னர் தாமாக முன்வந்து பிரகடனம் செய்வதன்மூலம் உயர் வரி அபராதங்களைத் தவிர்க்குமாறு வேண்டுகிறது.

பிரித்தானிய வரி செலுத்துவோர், ருமு வருமான வரி, மூலதன ஆதாய வரி, அல்லது பரம்பரை வரி தொடர்பான எந்தவொரு கடல் கடந்த அதாவது வெளிநாட்டு சொத்து வரி பொறுப்புக்களையும் (Offshore tax liabilities ) HMRC க்கு அறிவிக்க வேண்டும் என்று புதிய சட்டம் வலியுறுத்துகிறது

இருப்பினும் சில இங்கிலாந்து வரி செலுத்துவோர் தங்கள் வெளிநாட்டு நிதி நலன்களை அறிவிக்க வேண்டிய தேவையை உணரவில்லை. விதிகளின் கீழ், வெளிநாடுகளில் உள்ள சொத்துக்களை வாடகைக்கு விடுவது, வருமானம் மற்றும் சொத்துக்களை ஒரு நாட்டிலிருந்து மற்றொரு இடத்திற்கு மாற்றுவது போன்றவை, அல்லது வெளிநாட்டில் வாழும் போது பிரித்தானியாவிலுள்ள சொத்துக்களை வாடகைக்கு விடுதல் போன்றவை வரி செலுத்துபவர்கள் இங்கிலாந்தில் ஒரு வரியை (tax bill ) எதிர்கொள்ளவேண்டி ஏற்படும்

கருவூல நிதி செயலாளர், மெல் ஸ்ரைட் (Mel Stride ) எம்.பி., கூறினார்: 2010 ஆம் ஆண்டு முதல் நாங்கள் எமது முக்கிய பொது சேவைகளுக்கு £ 2.8 பில்லியனுக்கும் மேலான தொகையை, வெளிநாட்டு சொத்து வரி ஏய்ப்பவர்களிடமிருந்து கைப்பற்றியிருக்கிறோம். மேலும் விதிமுறைகளை பின்பற்றாதவர்கள் மீது அயராது நடவடிக்கை எடுப்போம. இந்த புதிய நடவடிக்கை HMRC ஐத் தொடர்பு கொள்ளாத மற்றும் அவர்களின் கடல்வழி வரி பொறுப்புகள் சரியானதா என்பதை உறுதிபடுத்தாதவர்களுக்கு அதிகமான அபராதம் விதிக்கப்படும். எவரேனும் இதனால் பாதிக்கப் பட்டிருந்தால் உடனே HMRC யை இப்போதே தொடர்பு கொள்ளும் படி வேண்டுகிறேன் .

அக்டோபர் 1 முதல் ருமு உட்பட 100 க்கும் மேற்பட்ட நாடுகளில், பொது அறிக்கை ஸ்டாண்டர்ட் (CRS) கீழ் நிதி கணக்குகளில் தரவுகளை பரிமாறிக்கொள்ள முடியும். CRS தரவு கணிசமாக வெளிச்சம் அல்லாத இணக்கத்தை கண்டறிய HMRC திறனை அதிகரிக்கிறது மற்றும் அந்த தரவு பெறப்படும் முன் எந்த இணக்கம் சரி செய்ய வரி செலுத்துவோர் நலன்களை பேணுவதாக உள்ளது


வெளிநாட்டு சொத்துகள், முதலீட்டு வருவாய் மற்றும் வெளிநாட்டில் இருந்து பிரிட்டனில் பணத்தை நகர்த்துவது தொடர்பாக வெளிநாட்டு வரிகளை அறிவிப்பது மிகவும் பொதுவான காரணங்கள். 17,000 க்கும் அதிகமானோர் ஏற்கெனவே HMRC ஐ தொடர்பு கொண்டு வெளிநாட்டு வருமானங்களின் ஆதாரங்களைப் பற்றி வரிக்கு அறிவிக்க வேண்டும், HMRC இன் டிஜிட்டல் வெளிப்படுத்தும் சேவை, உலகளாவிய வெளிவிவகார வசதி அல்லது HMRC வழங்கிய பிற சேவைகளின் ஒரு பகுதியாக வரி அல்லாத இணக்கத்தை சரிசெய்வதற்கான வழிவகையாகப் பயன்படுத்துகிறது. உங்கள் விவகாரங்களில் ஒரு விசாரணையின் போது HMRC இன் ஒரு அலுவலரைக் குறிப்பிடுவது. அல்லது வேறு எந்த முறையையும் பயன்படுத்தி HMRC உடன் உடன்பட்டார். செப்டம்பர் 30 ம் திகதி ஒரு வாடிக்கையாளர் HMRC க்கு ஒரு அறிவிப்பை அறிவிக்க வேண்டுமென அறிவித்தவுடன், 90 நாட்களுக்கு முழுமையான வெளிப்படுத்தல் மற்றும் வரி செலுத்த வேண்டும். வரி செலுத்துவோர் தங்கள் வரி விதிகள் வரிசையில் இருப்பதாக நம்பினால், அவர்கள் கவலைப்பட வேண்டியதில்லை. யாராவது உறுதியற்றவர்கள் என்றால், HMRC அவர்கள் ஒரு தொழில்முறை வரி ஆலோசகர் அல்லது முகவரியிடமிருந்து ஆலோசனையை பெற பரிந்துரைக்கிறது.

மேலும் தகவல்

1.கடல் சொத்துக்களை எடுத்துக்காட்டுகள்: கலை மற்றும் பழம்பொருட்கள் வங்கி மற்றும் பிற சேமிப்பு கணக்குகள் படகுகள் பணம் கடன்களை உங்களிடம் கொடுக்க வேண்டும் தங்கம் மற்றும் வெள்ளி கட்டுரைகள் அரசாங்க பத்திரங்கள் அணிகலன்கள் விடுமுறை நேரங்கள் உட்பட நில மற்றும் கட்டிடங்கள் ஆயுள் காப்புறுதிக் கொள்கைகள் மற்றும் ஓய்வூதியங்கள் பங்குதாரர் அல்லது வழக்கறிஞர்களான மற்ற கணக்குகள் பிற பத்திரப் பத்திரங்கள் மற்றும் தனிப்பட்ட போர்ட்.'.போலியோ பத்திரங்கள் உட்பட கடன்கள் உரிமைகள் அல்லது பட உரிமைகள் உட்பட அறிவார்ந்த சொத்து பங்குகள் மற்றும் பங்குகள் ஊழியர் நலன் நம்பகத்தன்மைகள் மற்றும் சுய-பணிபுரிந்த நபர்கள் உள்ளிட்ட அறக்கட்டளைகள் மற்றும் வாகனங்கள்.

2.புதிய ""நியாயமானது" சட்டம் ('Requirement to Correct' legislation )2017 ஆம் ஆண்டின் நிதி (2 ஆம்) சட்டத்தின் ஒரு பகுதியாக அறிமுகப் படுத்தப்பட்டது.

3.GOV.UK இல் சரியான சரியான வழிகாட்டுதல் கிடைக்கும். (Further guidance on Requirement to Correct is available on GOV.UK.) 4.Twitter இல் HMRC பத்திரிகை அலுவலகத்தை பின்பற்றவும் @HMRCpressoffice. 5.HMRC இன் பிளிக்கர் சேனல். (HMRC's Flickr channel.)


யேர்மனி
வாணி நர்த்தனாலய அதிபர்
**கலாநிதி வானதி தேசிங்குராஜா**
**அவர்கள் எழுதிய**
**Bharatham from my Perspective**
**என்னும் ஆங்கில நூலினை**
முத்திரை அனுப்பி இலவசமாகப்
பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு:**0049 176 38 97 83 61**
**லண்டனில்**
**Sangeetha jewellers இல்**
புத்தகங்கள் தேவையானோர் நேரில் சென்று
பதிவு செய்து இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.




'AMMA Restaurant" Neue- Jülicher Straße 17 52353 Düren Tel: 02421 - 780 6222
Mo-Fr:17:00-22:00
Sa,So,& Feiertage: 15:00-22:00
Dienstag:Ruhetag




மத்தேயு 15:21 முதல் 28 வரையுள்ள வசனங்கள் ஒரு மிகப்பெரிய விசுவாச நிகழ்வை விளக்குகின்றன.
கானானியப் பெண் ஒருவர் அவரிடம் வந்து, “ஐயா, தாவிதீன் மகனே, எனக்கு இரங்கும் என் மகள் பேய் பிடித்துக் கொடுமைக்குள்ளாகி இருக்கிறாள்” எனக் கதறினார். ஆனால் இயேசு அவரிடம் ஒரு வார்த்தைகூட மறுமொழியாகச் சொல்லவில்லை. சீடர்கள் அவரை அணுகி, “நமக்குப் பின்னால் கத்திக்கொண்டு வருகிறாரே, இவரை அனுப்பிவிடும்” என வேண்டினர்.
அவரோ மறுமொழியாக, “இஸ்ரயேல் குலத்தாருள் காணாமற்போன ஆடுகளாய் இருப்போரிடமே நான் அனுப்பப்பட்டேன்” என்றார். ஆனால் அப்பெண் அவர்முன் வந்து பணிந்து, “ஐயா, எனக்கு உதவியருளும்” என்றார்.

அவர் மறுமொழியாக , “பிள்ளைகளுக்குரிய உணவை எடுத்து நாய்க் குட்டிகளுக்குப் போடுவது முறையல்ல” என்றார். உடனே அப்பெண், “ஆம் ஐயா, ஆனாலும் தங்கள் உரிமையாளரின் மேசையிலிருந்து விழும் சிறு துண்டுகளை நாய்க்குட்டிகள் தின்னுமே” என்றார். இயேசு மறுமொழியாக, “அம்மா, உமது நம்பிக்கை பெரிது. நீர் விரும்பியவாறே உமக்கு நிகழட்டும்” என்று அவரிடம் கூறினார். அந்நேரம் அவர் மகளின் பிணி நீங்கியது.

இந்த நிகழ்வு யூதர்கள் அல்லாத பிற இன மக்கள் வாழும் பகுதியில் நடந்த இந்த புதுமை நமக்கு சில படிப்பினைகளைத் தருகிறது.

1. கனானேயப் பெண்ணின் அணுகுமுறை எப்படி செபிக்க வேண்டும் என்பதை நமக்குச் சொல்லித் தருகிறது. அவள் முதலில் தனது சமூக, மத, கலாச்சாரக் கட்டமைப்புகளைத் தாண்டி இயேசுவின் முன்னால் வருகிறாள். அத்தகைய அணுகுமுறை நம்மிடமும் இருக்க வேண்டும்.
2. இயேசுவின் மௌனம் நமது விசுவாசத்தைச் சோதிக்கும் ஆயுதம். அத்தகைய சூழல்களில் உடைந்து விடாத விசுவாசம் கொண்டிருக்க வேண்டியது அத்தியாவசியம். கனானியப் பெண்ணின் கதறலை, இயேசுவின் மௌனம் மௌனமாய் எதிர்கொள்கிறது. நமது விண்ணப்பங்களுக்கு பதிலாக வருகின்ற இறைவனின் மௌனம் நமது விசுவாசத்தை வலுப்படுத்த வேண்டும்.

3. இயேசுவின் சீடர்கள் கனானேயப் பெண்ணுக்காக இயேசுவிடம் பரிந்து பேசவில்லை. ஆனாலும் அந்தப் பெண்ணின் பார்வை இயேசுவின் மீதே இருந்தது, சீடர்களின் மீது அல்ல ! நாம் இயேசுவின் மீது வைத்த பார்வையை விலக்காமல் இருக்கிறோமா ?
3. கனானேயப் பெண்ணின் தொடர் வேண்டுதலை, இயேசுவின் பதில் தடுத்து நிறுத்தியது. அவள் இயேசுவின் முன்னால் வந்து பணிகிறாள். பின்னால் இருந்தபோது எழுந்த கதறல் ஒலி, இப்போது விண்ணப்பமாய் உருமாறிவிட்டது. இயேசுவை நெருங்க நெருங்க, நமது கதறல் மெல்லிய விண்ணப்பமாய், பணிவான வேண்டுதலாய் மாறிவிடுகிறது.
4. ”பிள்ளைகளுக்குரிய உணவை எடுத்து நாய்க் குட்டிகளுக்குப் போடுவது முறையல்ல” எனும் இயேசுவின் பதில் அந்தக் காலத்தில் பிரபலமாய் இருந்த ஒரு பழமொழி !
இஸ்ரயேல் மக்களுக்காக வந்த மீட்பை பிற இனத்தாருக்குக் கொடுக்கும் காலம் வரவில்லை என்கிறார் இயேசு. கானானேயப் பெண்ணோ தாழ்மை கொண்டாள். இயேசுவை நாடி வரும் ஒவ்வொருவருக்கும் அந்தத் தாழ்மை இருக்க வேண்டியது அவசியம்.
5. ”தங்கள் உரிமையாளரின் மேசையிலிருந்து விழும் சிறு துண்டுகளை நாய்க்குட்டிகள் தின்னுமே” என கானானேயப் பெண் இயேசுவிடம் சொல்கிறாள். தன்னை அடிமையாக, நாய்க்குட்டியாக பாவித்துக் கொண்ட அந்த பெண் உரிமையாளரின் கனிவை எதிர்பார்த்து நிற்கிறாள். நாம் அந்த மனநிலையோடு இறைவனை நாடுகிறோமா ?

6. ”தங்கள் உரிமையாளரின் மேசையிலிருந்து விழும் சிறு துண்டுகளை நாய்க்குட்டிகள் தின்னுமே” எனும் பதிலின் வழியாக அந்தப் பெண் இயேசுவிடம் தனக்கு பதில் உடனே வேண்டும் என்கிறாள். ”பிள்ளைகள் தின்ற பின்பு மிஞ்சுவது அல்ல, பிள்ளைகள் தின்னும் போதே சிந்துவது” என அவள் கேட்கிறாள்.
7. அம்மா, உமது நம்பிக்கை பெரிது. நீர் விரும்பியவாறே உமக்கு நிகழட்டும் , என்கிறார் இயேசு. நாய்க்குட்டியாய் உருவகிக்கப்பட்டவள் விசுவாசத்தின் வலிமையால் “அம்மா“ என அழைக்கப்படும் நிலைக்கு உயர்த்தப்படுகிறாள்.
8 ஒரு தாயின் பிரார்த்தனை எப்படிப்பட்டதாக இருக்கவேண்டும் என்பதை கானானியப் பெண்ணின் பிராத்தனை நமக்கு சொல்லித் தருகிறது.மூன்று குணாதிசயங்கள் செபத்தில் நிச்சயம் இருக்க வேண்டும். பணிவு, விடாமுயற்சி மற்றும் விசுவாசம்.
9 இந்த புதுமையில் இயேசுவே வானிலிருந்து இறங்கி வந்த உணவாகவும் காட்சியளிக்கிறார். இஸ்ரயேல் மக்களுக்காக வந்த மீட்பர், பிற இனத்தாரான நமக்கு மீட்பராகவும் மாறிய நிகழ்ச்சியாகவும் இதை எடுத்துக் கொள்ளலாம்.
10. ஓய்வு தேடிச் சென்ற இயேசு ஓய்வை விட்டு விட்டு மனித நேயப் பணியைச் செய்கிறார். ஓய்வு எனும் தேவையை விட, பணிசெய்தல் எனும் கடமை நம்மிடமும் இருக்க வேண்டும். இந்த சிந்தனைகளை மனதில் கொண்டால், நமது விசுவாசமும் ஆழமாகும்.









# கடலில் மீனொன்று அழுதால் கரைக்கு செய்தி வருமா?

## 'MeToo Movement" கரை சேர்ப்பது என்ன?

எங்கு பார்த்தாலும் இன்று Metoo என்னும் தலைப்பே செய்தி ஊடகங்களில் நிறைந்து உள்ளது. „நானும்“ என்று அர்த்தம் பெறும் இது, பாலியல் துன்புறுத்தலுக்கு ஆழான பெண்கள் குரலெழுப்பும் பிரச்சாரத்தை குறிப்பிடுகிறது. அன்றாடம் பெண்கள் பாலியல் துன்புறுத்தலை அனுபவித்துகொண்டு இருக்கின்றனர், வேலையிடத்திலிருந்து, பாடசாலை வீடுவரைக்கும் தொல்லை விடுவதில்லை. பல காலமாக தமக்கு நடந்த அக்கிரமங்களை சுற்றாடலில் மூடிமறைப்பது மட்டுமல்லாமல், பாதிக்கபட்ட இவர்களும் தமக்கு அசிங்கம், சுயவெறுப்பு, மானம் என்பவையை எண்ணி தாமே மூடிமறைத்திருக்கின்றனர்.

இந்த இயக்கம் மூலம், பாதிக்கப்பட்டவர்கள் முன்வருகின்றனர். இன்று சினிமாவைச்சார்ந்தோரும், அரசியல்வாதிகளும் முனைய, சராசரி பெண்களும் குரலெழுப்பத் துணிகின்றனர். சமூகவலைகளும் இதற்கு இடம் கொடுக்கின்றன. ஆண் பெண் சம்பள வேறுபாட்டின் கருத்துக்களத்தை நான் அமைத்தபோது: „ராம், நான் சித்திரவதைகளும் அன்றாட அநீதிகளும் தாங்கமுடியாது வேலைக்குப் பாவாடை சட்டை அணிவதை நிறுத்திவிட்டேன். விசில்கள், முணுமுணுப்புக்கள் வாயால் கூறமுடியாதவை!“. இது ஜேர்மனியின் மிக முக்கிய வங்கியொன்றில் உயர் அதிகாரிகளாக பணிபுரியும் பெண்கள் சொன்னது.

„ஒரு பெண், தன் ஆடைமூலம் பாலியல் முறையில் எவருக்கும் எந்தவித அனுமதிகளும் கொடுப்பதில்லை, ஆனால் சமுதாயம் அதை விளங்குவதில்லை. அலுவலகத்திற்கு நான் கிழங்குச்சாக்கையா அணிந்து வரவேண்டும்?“ என்கிறர்கள். வருவாய் பற்றிப் பேச்சுவார்த்தை செய்யப் போன மாநாடு, பாதுகாப்பான தொழிலிடத்திற்கான பேச்சுவார்த்தை ஆனது.

வேடிக்கைபோலத் தெரியும் இது, மிகப்பெரிய சிக்கலொன்றின் குறுகிய பங்கு. பாலியல் சித்திரவதை என்பது கற்பழிப்பு மட்டுமல்ல. பேச்சு, விசில், தொடுதல், ஏன் தவறான அழைப்பிதழ்களாகவும் இருக்கலாம் என்பதை முதற்கண் ஏற்றுகொள்வோம்.

பிரபலங்களினால் இன்று இந்த அநீதிகள் வெளிவருகின்றன. கவிஞர் வைரமுத்தின வரிகளிலேயே சொல்ல: „கடலில் மீனொன்னு அழுதா கரைக்கு சேதி வந்து சேருமா?“ ஆணாதிக்க உலகில் சிறுபான்மைகளின் குரல்களுக்கு இடமில்லை. சமுதாயம் ஆண் என்றும் ஆண்தான், பெண்கள் அதற்கேற்ப நடத்தல் வேண்டும் என்று தவறுகளை அற்பாமாக்கின்றனர். இன்று விஜய் போன்னற முன்னணிக் கதாநாயகர்கள் திரைப்படங்களில் கதாநாயகியை மோட்டார்வண்டியில் சென்று வீடியோ எடுப்பதும், ஆன் வீரத்தனம் கொண்ட படங்களை marketing செய்ய, பெண் நடிகைகளை உபயோகிப்பதும் பாலியல் பலாத்காரங்களை ஊக்கின்றது.

திரைப்படங்களில்„துரத்தித் துரத்திக்காதலிப்பது“ கூட, பெண்ணிற்கு சுயமுடிவுகள் எடுக்கமுடியாமல் ஆணே அவளுக்கு எது தேவை என காட்டவேண்டும் எனும் எண்ணத்தையும், பெண்கள் மேல் ஆண்களுக்கு உரிமை உண்டு எனும் எண்ணங்களை அங்கீகரிக்கிறது. இது „toxic masculinity“ அதாவது விசத்தனாமான ஆண்மையை சமுதாயத்தில் வளர்க்கின்றது.

ஒரு பக்கம், குற்றம்சாட்டப்பட்ட ஆண்கள் தனது ஊடக அறிக்கையில் மிகத்தீவிரமாக குற்றச்சாட்டுகளுக்கு எதிராக அச்சுறுத்தல் செய்ய, இன்னொரு பக்கம் ஆண்கள் பெண்களை அணுக பயம் கொள்கின்றனர். ஒரு பெண் தனது „கண்ணியத்தை“ இழந்து „பொய்க்குற்றச்சாட்டு“ செய்வாளா? பிரபலங்கள் சுயநலம்கருதி

**ராம் பரமானந்தன்**

Mee Too Movement ஐ துஸ்பிரையோகம் செய்கிரார்களா? இங்கு எது சரி எது தவறு?

வளர்ந்துவரும் ஆண் சமுதாயத்தை எப்படி வழிப்படுத்துவது? முதற்கண் ஏற்றுகொள்ள வேண்டியது: ஆண் அனுகூலம் இருப்பது யதார்த்தம். ஒரு தீவிர பெண்ணுரிமை யாளியின் மகனான நானே பாடசாலையில் இருந்து உணவகம் வரை, ஒரு பெண் முன்னே ஆணான எனக்கு அமைப்புரீதியாக பலவகை அனுகூலங்கள் இருக்க, அவற்றை உபயோகித்திருகின்றேன்.



Ram Paramanthan

ஆனால் இங்கு எனது ஆண்குரலை பெண்ணுக்காக நான் எழுப்புகையில் அவளது ஒலி அழுத்தம் அடைகிறது. இப்படி ஆணாதிகாரத்தை நாம் Trump போன்ற சுயநலவாதிகள் உலகை ஆழ்கையில் திறமையாக உபயோகிக்கவேண்டிய அவசியத்தில் உள்ளோம்.

பெண்ணின் மானம் அம்மா, அக்கா அல்லது தங்கையென்றால் மட்டுமே காக்கபடவேண்டியதல்ல என, உணவுடன் சிறுவர்களுக்கு ஊட்டவேண்டியது கட்டாயம். எப்போதும் எந்த அணுகுமுறைக்கும் சம்மதம் வேண்டும் என்பதே நியதி. வழிமுறை தவறும் பெண்களுக்கு மட்டுமே அக்கிரமங்கள் நடக்கும் என்பது தவறான கருத்து என்று நிரூவிக்கப்படுகின்றது.



அக்கிரமங்களை பற்றி குரல் எழுப்புவது தவறல்ல என்று தெரியவைக்கும் வழியில் **சுவர்னா ராஜலிங்கம்** தனது 28.000 Instagram நண்பர்களுக்கு, தமிழ் வீடுகளில் நடக்கும் பாலியல் பலாத்காரத்தை அநாமதேய உண்மைக் கதைகளால் தெரியவைத்தார். தொடர்ந்து பல கிழமைகளாக உலகளாவிய ரீதியில் புலம்பெயர் தமிழர்கள் இவரிடம் தங்களுக்கு நடந்த அக்கிரமங்களை எடுத்துக்கூற ; thelifeofsocialbuttefly என்ற இவரது Instagram பக்கம் கண்மூடித்தனமாக இருந்த எம் சமுதாயத்தை தட்டி எழுப்பியது. புலம்பெயர்ந்த தமிழ் சிறுவர்களின் முக்கிய பிரச்சனைகளில் குடும்பமானத்துடன் தமக்கு நடந்தவையை பெற்றோரிடம் சொல்ல மொழியிலாமையும் உள்ளது என்பவையெல்லாம் தெரியவந்தன.

அன்பு அதாவது Anbu.co.uk (abuse never becomes us) எனும் அமைப்பு சிறுவயதில் பாலியல் பலாத்காரத்தை நேரிட்ட தமிழ் மக்களுக்கு ஐக்கிய ராட்சியத்திலும் கனடாவிலும் உதவி செய்கிறது. Me too இயக்கத்தில் பிரபலங்கள் இறங்குவதன் நோக்கங்கள் பலவிதமாக இருக்க, சராசரி மனிதர்களிடையே பாலியல் பலாத்காரம் நடப்பதை சொல்ல எமக்குள் இருக்கும் தயக்கம் களைகிறது. ஏனெனில், 90 வீதமான பாதிக்கப்ட் டோர்களுக்கு தம்மை பலாத்காரம் செய்தவரை முன்கூட்டியே தெரியும். இப்படியே கடலில் அழும் பல மீன்களின் சத்தம் கரை சேர்ந்து ஆண்கள் மட்டுமலாமல் பெண்குற்றவாளிகளும் அறியப்படுகின்றனர். படம்: ஜெகதீஸ்வரன். சுவர்ணா:படம்: @thelifeofasocialmedia butterfly.

APIRAAMI ENTERPRISE




இலங்கை, இந்திய உப உணவுப் பொருட்கள், மற்றும் கடல் உணவு வகைகள் அனைத்தும் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

துரித பண மாற்றுச் சேவை!

Pferdemarkt 9 45127 ESSEN Tel.: 0201/236925

மொழிபெயர்ப்புச் சேவை!
V.Ramakrishnan

உங்கள் சகல பத்திரங்களையும் தமிழ்,ஆங்கிலம் பிரஞ் மற்றும் உலகமொழிகளில் இருந்து யேர்மன் மொழிக்கு மொழிபெயர்பதற்கும் யேர்மன் மொழியில் இருந்து நீங்கள் விரும்பும் மொழிக்கு மொழிபெயர்ப்பதற்கும் நீதிமன்றத்தில் சத்தியபிரமாணம் ( allgemein Vereidigte) மற்றும் நீதிமன்றத்தால் அங்கீகாரம் (Ermächtigte)அளிக்கப்பட்ட மொழி பெயர்ப்பாளர்களால் குறைந்த செலவில்

A.to.Z Dolmetscher - und Übersetzungsdienst
Für alle weltsprachen
Tel:0201 977 4957
Mobile 0176 28 44 85 89
0152 11 98 9603
Fax:0201 24 82 888

Lise-Meitner-Str.20
45144 Essen


Lyca TV
உலகின் மிகப் பிரமாண்டமான
தொலைக்காட்சி நிலையம்
ஒருவருட
இணைப்புச் சந்தா
£/€89
புதுப்பித்தல்
£/€69
SET TOP BOX
INCLUDED
50க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்
TENT KOTTA
1000க்கும் அதிகமான தமிழ்த் திரைப்படங்கள்
4K / HD / 5.1 DOLBY தரத்தில் திரைப்படங்கள்
+
SUN NXT
4000 +
திரைப்படங்கள்
DOWNLOAD VIDEOS
Look for this symbol to Download
TV episodes to watch on the go
without using data
MOBILE & TABLET
App Store
Google Play
OFFLINE VIEWING FEATURES
நிகழ்ச்சிகளை DOWNLOAD செய்து, INTERNET
இணைப்பின்றி உங்களுக்கு விரும்பிய நேரத்தில்
பார்க்கும் வசதி
* Selected channels only
UNITED KINGDOM
0207 132 2727
GERMANY
069 1200 7102
FULL TERMS AND CONDITIONS ARE AVAILABLE AT WWW.LYCATV.TV. LYCATV IS A TRADEMARK AND SERVICE MARK BELONGING TO LYCAMEDIA LTD. ANY PRODUCT OR SERVICE OR TRADE NAME OTHER THAN THOSE OWNED BY LYCAMEDIA LTD, THAT IDENTIFY A THIRD PARTY AS THE SOURCE, THERE-OF MAY (EVEN IF NOT SO INDICATED) BE THE SERVICE OR TRADEMARK OF THAT RESPECTIVE ENTITY OR INDIVIDUAL. ANY UNAUTHORIZED USE OF THE LYCATV MARK IS STRICTLY PROHIBITED.
www.lycatv.tv




மாற்றங்கள் வினா...மாற்றங்களே விடை....
படத்தின் கதையை இதைவிட ரத்தின சுருக்கமாக சொல்லிவிட முடியாது... இந்த இரு வரிகளுடன் படம் ஆரம்பிக்கிறது...

தெளிந்த நீரோடைல ஒரு இலை எப்படி பயணிக்குமோ அப்படி பயணிக்கிறது இந்த படம்..
டைட்டில் கார்ட்ல நன்றினு 3 பேர குறிப்பிடுறாங்க...
இளையராஜா
பாடகி S. ஜானகி அம்மா
இயற்கைக்கும் நன்றினு போடுறாங்க...
அந்த இயற்கை காட்சிகள் படத்தோட ஆரம்பத்திலேயே முடிந்துவிடுகின்றன... ஆனால் ஒவ்வொரு கதாபாத்திரம் மற்றும் காட்சிப்படுத்தும் விதம் வெகு இயற்கையாக இருந்தது... அதுனாலவோ என்னமோ இயற்கைக்கும் நன்றி ??...

ராஜாவோட இசை இல்லாமல் காதலா ?? அதுவும் 90 காலகட்டம்னா சொல்லணுமா என்ன? அதே போலதான் S. ஜானகியும் ...
இந்த எவர் கிரீன் காம்பினேஷன் ஒன்னே போதுமே எல்லாரையும் காதல்ல கவுந்தடிச்சு விழவைக்க.. அந்த காம்பினேஷன வச்சு மேஜிக் காட்டிருக்கார் நம்ம இயக்குனர்...
பொதுவாக இரண்டு வகையான படங்கள் நமக்கு பிடிக்கும் ...

நம்ம வாழ்க்கையில் நடந்த அல்லது நம்மை சுற்றி நடந்த விஷயத்தை கொஞ்சம் கற்பனை கலந்து சரியாக கொடுப்பது...
நம் வாழ்க்கையில் நடத்த முடியாத விஷயத்தை அதீத கற்பனை கலந்து கொடுப்பது...
இதில் இந்த படம் முதல் வகையைச் சேரும்.. வாழ்க்கையில் எதாவது ஒரு தருணத்திலாவது எல்லோரும் காதல் வயப்படுவதுண்டு. அதனால் இயல்பாக எடுக்கும் காதல் கதை பொதுவாக MG எனப்படும் மினிமம் கேரண்டீ வகையிலாவது வெற்றி பெற்று விடும். காதலில் வெற்றி பெறுபவர்களை விட காதலில் தோல்வி அடைபவர்களே அதிகம் என்ற காரணத்தால் இந்த படத்தை பெரும்பாலனவர்கள் கொண்டாடுகிறார்களோ என்ற சந்தேகம் வந்தது... ஆனால் என்னை பொறுத்தவரை அது மட்டுமே காரணம் இல்லை.

சுது வா இருக்கும் என் தம்பி பரத் அவன் ஷோவோட வெற்றிக்கு காரணமா ஒன்னை சொல்லுவான்... ரேடியோல பேசும் போது கேட்பவர்கள் என்ன கேட்க நினைப்பார்களோ அத பத்தி பேசணும்னு...
அண்ணே .. பக்கத்துல ஆட்டோ சர்ர்ருனு கார இடிக்கிற மாதிரி வருதேன்னு கோபப்படாம ஓட்டுங்க... இந்தா வருது உங்களுக்கு புடிச்ச பாட்டு.
IT Friends, இன்னைக்கு மேனேஜர் எதுக்கு திட்ட போறானோனு குழம்பாம இந்த பாட்ட கேளுங்க...
இப்பிடி நேரடியா கனெக்ட் பண்ற எல்லா விஷயமும் ஈஸியா சக்சஸ் ஆகிடும்னு சொல்லுவான்.

அது மாதிரி நம்மை நேரடியா கனெக்ட் பண்ற பல விஷயங்களின் தொகுப்பே இந்த படம்...

எல்லோரும் ஒரு தடவையாவது நாம் படித்த ஸ்கூலுக்கோ காலேஜுக்கோ திரும்ப போகணும்ங்கிற நினைப்பு வரும். அப்பிடி போகும் போது என்ன என்ன பண்ணுவோமோ அத அப்பிடியே காட்டி இருப்பதே படத்தின் முதல் வெற்றி.

கிளாஸ் போர்டு பிரேம் கீழே உதிர்ந்து இருக்கும் சாக்பீஸ் தூல விரல்ல எடுப்பதாகட்டும் , பெல்லை கையால தட்டி பார்ப்பதாகட்டும் , கொடி கம்பத்தை ஒத்த கையால புடிச்சு சுத்தறதாகட்டும் , காரிடார் ல நடந்து பார்க்கிறதாகட்டும், கிளாஸ் பெஞ்சல உட்காந்து பாக்குறதாகட்டும், நமக்கு புடிச்ச ஆள் உட்காந்த எடத்துல உட்காந்து பாக்குறதாகட்டும்..
FLAMES போட்டு பாக்குறதாகட்டும், லவ்வுன்னு வந்துட்டா பொம்பள பிள்ளைகள் கேஸுவலா face பண்றதையும் பசங்க நெர்வஸா இருப்பதையும் காட்ற விதமாகட்டும்.. வாட்சாப் குரூப் மெசேஜ்ல "இத பண்ணாதவன் ரத்தம் கக்கி சாவான்", னு மீம்ஸ் ஆகட்டும் "Dai get-together a weekend vaingadaa" ங்கிற மெசேஜ் ஆகட்டும்-னு பாக்குற ஆடியன்ஸ நேரடியா கனெக்ட் பண்ற பல விசயம்.

நாட்கள் நகர்கின்றனனு சொல்றதுக்கு தமிழ் சினிமா பல காட்சிகளை காட்டிருக்கு... இந்த படத்தில், ஹீரோயின் ஒவ்வொரு நாளும் வித விதமான ஹேர்ஸ்டைல் & பூ வைத்து வரும் அழகை அழகாக காட்டிருப்பர் இயக்குனர்...

ப்ளூட் மற்றும் கிட்டார் .. பின்னணி இசைல ஒரு சாம்ராஜ்யம் நடத்தி இருக்கு இந்த ரெண்டு இசைக்கருவி... ராஜாவுக்கு நன்றினு சொன்னது அவர் பாட்டுக்கு மட்டும் அல்ல அவர் பாணி பிஜிஎம்கும் சேர்த்துதான் நினைக்கிறேன்...

சென்சிட்டிவ் சீன்களில் இதயத்துடிப்பு பிஜிஎம் ... இதயத்தை திருடாதே, காதலுக்கு மரியாதை, இதயம், இந்த படத்தில் வரும் ராஜாவோட பின்னணி இசை பாணியையே இந்த படத்துல பயன்படுத்திருக்கார் இசை அமைப்பாளர்.

ராஜ மாதிரியே வேற வேற கடரவந பயன்படுத்தி, எங்கெல்லாம் பிரிவு வருதோ அங்கெல்லாம் நம்ம மனசு கனமாக்குகிறது இந்த கடரவந இசை .
இது இன்னொரு முக்கிய காரணம் நாம படத்தோட ஒன்றி பாக்குறதுக்கு...

கேரக்டர் செலக்ஷன் ஒவ்வொன்னும் செம...
சின்ன வயசு சின்ன வயசு திரிஷா செம க்யூட் ..பாடி லாங்வேஜ் + expressions எல்லாமே செமையா வருது... அதே போல சின்ன வயசு விஜய் சேதுபதி, தேவதர்ஷினி செம யிவ...

20 வருஷம் கழிச்சு திரிஷா விஜய் சேதுபதிய பாக்குறதுக்கு முன்னாடி ஸ்கூல் யூனிபார்ம்லையே இருக்கிற மாதிரி கற்பனை பண்ற விதம்...
காதலி சொன்ன ஒத்த வார்த்த பத்து யானைக்கு சமம்...

நீ எங்க இருக்க?
**உன்னை எங்க விட்டேனோ அங்கே தான் இருக்கேன் .**

இப்ப கூட எனக்கு ஏதாவது கஷ்டம் வந்தா எனக்கு ஞாபகத்துக்கு வர்றது tenth standard ராமச்சந்திரன் தான்...

எச்சில் பண்ண ஸ்பூன்ல சாப்பிட சொல்றது....
சட்டைல காதலன் வாசனையை ஸ்மெல் பண்றது ...
காதலனை அணு அணுவா ரசிப்பது...

தொடர்ச்சி 30 பக்கம்




அனைவருக்கும் எங்கள் உள்ளம் கனிந்த தீபாவளி நல் வாழ்த்துக்கள்

# நம்பி அவர்கள் கால்களில் விழுகின்றோம்.

## வாழ்த்துதலும் தூற்றுதலும்

கௌசி



வெறும் வார்த்தைகளின் சேர்க்கையே வாழ்த்து என்றால், அது புறப்பட்டு வரும் வாயின் உரிமையாளர் யார் என்பது முக்கியம். மனிதனை சாதாரணமான ஒரு பிறவியாக நாம் எடைபோட்டுவிட முடியாது. தோல் போர்த்திய, உணர்வுகள் பொருந்திய ஒரு இயந்திரமாகவே நாம் பார்க்க வேண்டியுள்ளது. கண்களை மூடி ஒரு முறை உங்கள் உள் உறுப்புக்களை மௌனமாகப் பாருங்கள். ஓய்வின்றி உங்களுக்குள் உங்களுக்காக உழைத்துக் கொண்டிருக்கும் அபூர்வ இயந்திரமாகத்தான் உங்களைப் பார்ப்பீர்கள். அந்த இயந்திரங்கள் உடலுக்குள் வெளியிடுகின்ற வாயுக்கள், ஹோமோன்கள், கழிவுகள், அனைத்தையும் தாங்கியபடி, அழகாக நாம் தோன்றினாலும் எமது தோலுக்கு மேலே இலட்சணக்கணக்கான அருவருக்கத்தக்க பக்றீரியாக்கள் நடமாடுவதை Microscope உதவியில்லாது நாம் காணமுடியாது. நம்மையே நாம் அறியாத போது எம்மை வாழ்த்துபவர் யாரென்று தெரியாமல் அந்த வாழ்த்தின் தன்மையை அறியமுடியுமா?

வாழ்த்துவதும் தூற்றுதலும் உள்ளத்தின் வெளிப்பாடு ஆகும். அடிமனதில் இருந்து நல் வாழ்த்து வரவேண்டும். அது கேட்காமலே எமக்குக் கிடைக்க வேண்டும். எம்மைத் தேடி வரவேண்டும்.

வாழ்த்தும் போது எமக்கு ஏற்படும் மனநிலை அதனைக் கேட்கும் போதும் ஏற்படுகின்றது. இரண்டு மனங்களும் ஒருமித்த மகிழ்ச்சியை அனுபவிக்கும் சந்தர்ப்பமே இந்த வாழ்த்தும் சந்தர்ப்பம். உள்ளம் என்னும்போது அது எண்ணங்களின் உறைவிடம். ஒரு மனிதன் தன்னுடைய எண்ண அலைகளைக் கடத்தக் கூடிய ஆற்றல் பெற்றிருக்கின்றான். உடல் முழுவதும் பாய்ச்சப்படும் மின்சார அலைகளை நாம் பல இடங்களில் உணர்ந்திருக்கின்றோம். நகரும் படிகளில் கை வைக்கும் சிலருக்குத் திடீரென கைளில் மின்சாரம் அடிப்பது போன்ற உணர்வு ஏற்படுவதை உணர்ந்திருக்கின்றீர்கள். காந்தக் கதிர்விசை எம்மிடம் இருப்பதைச் சில சமயங்களில் எங்கள் தலைசீவும் சீப்பை எமது தலைமயிருக்கு மேலே பிடிக்கும் போது அத்தலைமயிரைச் சீப்பு கவர்ந்து இழுப்பதைக் கண்டிருப்பீர்கள். நாம் எதிர்பார்க்காமலே சிலரில் மிதமிஞ்சிய பாசம் ஏற்படுகின்றது, ஈர்ப்பு ஏற்படுகின்றது. சிறுகுழந்தைகளிடம் இதனை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இவையெல்லாம் உடலுக்குள் ஏற்படுகின்ற ஹோமோன்களாலும் எமது உடல் தனக்குள்ளே செயற்படுகின்ற செயற்பாடுகளாலுமே ஏற்படுகின்றது என்பதை அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும்.

Britain's Got Talent, Ameriaca's Got Talent, Germany Super Talent போன்ற தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்த்திருப்பீர்கள். அந்த நிகழ்ச்சிகளில் சிலர் Mind Reading செய்து காட்டுவதைப் பார்க்கின்றோம். மனக்கட்டுப்பாடு, மனவசியம் போன்றவற்றைச் சரியான முறையில் கற்றுத் தம் மனதை கட்டுக்கோப்புக்குள் வைத்திருப்பவர்கள், மற்றவர்கள் மனதைப் படித்து விடுகின்றார்கள். அல்லது தம்முடைய மனதில் உள்ளவற்றை அவர்களுக்குச் செலுத்திவிடுகின்றார்கள். அப்போது தொடுகை முறை பயன்படுத்தப்படுகின்றது. அவர்களுடைய நெற்றிப்பொட்டிலே தொடுகின்ற போது ஒருவித மின்சாரம் பாய்ச்சப்படுவதாக பரிசோதனையின் போது அனுபவித்தவர்கள் கூறுகின்றார்கள். சுவாமிகள் செய்கின்ற கட்டிப்பிடி வைத்தியம் கூட இவ்வாறுதான் அமைகின்றது. அவர்கள் கைகளை தங்கள் கைகளுள் அழுத்துகின்ற போது எண்ண அலைகள் மற்றவருக்குப் பாய்ச்சப்படுகின்றது. இதனாலேயே வாழ்த்துபவர்கள் தலையிலே கைவைத்து தம்முடைய நல்ல எண்ணங்களை வாழ்த்தப்படுபவர்களுக்குச் செலுத்து கின்றார்கள்.

இதனாலேயே மாதா, பிதா, குரு வாழ்த்தைப் பெறும்போது நம்பி அவர்கள் கால்களில் விழுகின்றோம். அவர்களும் கைகளால் தலையைத் தொட்டு வாழ்த்தி வாழ்த்தப்படுபவர்களை எழுப்புகின்றார்கள். ஏனென்றால், பெற்றோர் தம்முடைய பிள்ளைகள் கெட்டுப் போகட்டும் என்று ஒருநிமிடம் கூட நினைக்க மாட்டார்கள். நல் ஆசிரியர் தன்னுடைய மாணவன் வளர்ச்சியிலே தன் வளர்ச்சியைக் காண்பார். தனது மாணவன் உயர்வுக்குத் தன்னை அர்ப்பணிப்பார். அவரே உண்மையான ஆசிரியர். அதனால், இவ்வாழ்த்துக்கள் நாம் அச்சம் இன்றி ஏற்றுக் கொள்ள வேண்டிய வாழ்த்துக்கள். ஆனால் வாழ்த்து என்பது பயங்கரமானது. பயப்பட்டுவிடாதீர்கள்! உண்மையில் வாழ்த்துதல் என்பது Elektronik Power போன்றது. மின் எம்மைத் தாக்காமல் இருப்பதற்கு றப்பரினால் சுற்றியிருப்பார்கள். அந்த றப்பர் இல்லாவிட்டால் எம்மை அழித்துவிடும். அதிலிருந்து எம்மை நாம் பாதுகாக்க வேண்டுமென்றால், அதை மிஞ்சிய சக்தி எமக்கு இருக்க வேண்டும். இதனாலேயே வாழ்த்தும் போது கூட எதிர்மறையான வார்த்தைகளைப் பயன்படுத்தக் கூடாது என்பார்கள். மனமார வாழ்த்தும் சொற்களுக்கு இருக்கும் பயனே, மனம் எரிந்து சொல்லும் வார்த்தைகளுக்கும் இருக்கின்றன. திருமண வீடுகளில் அபசகுனமான வார்த்தைகள் காதில் கூட கேட்கக் கூடாது என்பார்கள்.

வாழ்த்தலுக்கு இருக்கும் பயன்பாடு போன்றதே. தூற்றுதலுக்கு இருக்கும் பயன்பாடும் அமைகின்றது. வசைபாடல் என்பது அணுகுண்டுக்கு ஒப்பான ஆயுதமாகிறது. இலங்கையிலே நம் பெண்கள் மனம் உடைந்து மண்ணை அள்ளிவீசி அமங்கள வார்த்தைகளால் வசை பாடுவார்கள். அவர்கள் அள்ளிவீசுவது மண் அல்ல. அவர்கள் மனம் வெந்து சொல்லுகின்ற வார்த்தைகள். அவை அன்று நின்று கொன்றது. ஆனால், இன்று அன்றன்றே கொல்வதை நம் நேரிலே கண்டிருக்கின்றோம்

வாழ்த்தலுக்கு இருக்கும் பயன்பாடு போன்றதே. தூற்றுதலுக்கு இருக்கும் பயன்பாடும் அமைகின்றது. வசைபாடல் என்பது அணுகுண்டுக்கு ஒப்பான ஆயுதமாகிறது. இதுவே பழந்தமிழ் இலக்கியங்களில் அறம்பாடி அழித்தல் என்று சொல்வார்கள். வார்த்தை நஞ்சு போன்று ஒருவருடைய மனதை அரித்துச் சல்லடையாக்கி அவரை அழித்துவிடும் தன்மையானது. பழந்தமிழ் பாடல்களில் வசைபாடி மன்னர்களை அழித்த சம்பவங்கள் பாடல்கள் மூலம் அறிகின்றோம். வசைபாடக் காளமேகம் என்று சிறப்புப் பெயர் காளமேகப் புலவருக்கு உண்டு. பரிசில்கள் பெறுவதற்காக மன்னர்களை மனமொத்து வாழ்த்தாது வாழ்த்துபவர்கள் கூட பணத்துக்காக வாழ்த்தி பெற்ற பேறை இரட்டையர்கள் ஒரு இடத்தில்

“குன்றும் குழியும் குறுகி வழிநடந்து
சென்று திரிவது என்றும் தீராதோ - ஒன்றும்
கொடாதானைக் காவென்றும் கோவென்றும் கூறின்
இடாதோ நமக்கிவ் இடர்”

என்று பாடுகின்றார்கள். வாழ்த்தும் போது கூட உண்மைக்குப் புறம்பாக வாழ்த்தலாகாது. அதேபோல் தூற்றும் போது கூட உண்மைக்குப் புறம்பாகத் தூற்றக்கூடாது. இவை கொடுப்பவருக்கும் அச்சம், பெறுபவருக்கும் அச்சமாகவே படுகின்றன. எனவே ஒரு சொல் வெல்லும் ஒரு சொல் கொல்லும்.
சொல்லும் சொல் எம்மை வெல்ல வைக்கும் சொல்லாக அமைய வாழ்த்துபவர்கள் மனம் நல்மனமாக அமையட்டும்.






# பிக்பொஸ் 2 ! ஒரு பார்வை



ரித்விகா



ஏலையா க.முருகதாசன்

விஜய் தொலைக்காட்சி நடத்திய தமிழ் பிக்பொஸ் 2, போட்டியாளர் ரித்விகாவின் வெற்றியுடன் நிறைவு பெற்றுள்ளது. பிக்பொஸ் 1 பற்றியும், பிக்பொஸ் 2 பற்றியும் கலவையான விமர்சனங்கள் உண்டு.
தமிழ் நாட்டின் பண்புக்கு பிக்பொஸ் நிகழ்ச்சி கேடு விளைவிப்பது, எவ்விதத்திலும் தமிழர்களுக்கு இது பொருத்தமற்றது என்ற கண்டனங்களும் எழவே செய்தது. இதில் என்ன வேடிக்கை என்றால் கண்டித்தவர்கள் நிகழ்ச்சியைப் பார்த்தவர்களாகவும் தொடர்ந்து அவலுடன் பார்த்துக் கொண்டிருந்தவர்களாகவும் இருந்தார்கள்.தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பெரும்பாலானவை வணிகநிலை கொண்டவையே.அதில் தவறு எதுவுமில்லையென்பது எனது அபிப்பராயம்.

ஆனால் இந்த நிகழ்ச்சிபற்றி ஏன் வேறுவிதமாக சிந்திக்கக்கூடாது என்ற ஊற்றின் வழி எனது கருத்தை இங்கே பதிவு செய்கின்றேன்.
இந்நிகழ்ச்சியானது மனிதமனங்களை ஆய்வு செய்த நிகழ்ச்சி என்றுகூடச் சொல்லலாம்.
போட்டியாளராகப் பங்கு கொண்டவர்களில் பெரும்பாலானோர் நடிப்புத்துறை சார்ந்தவர்களாக இருந்த போதும், அவர்களில் வானொலித்துறை, இசைத் துறை சார்ந்தவர்களும் இவரகளுள் எத்துறையும் சாரத ஓரிருவர் இருக்கவெ செய்தனர்.பொதுவாக நடிகர்கள் என்றவுடனோ அவர்கள் ஊடகங்களில் கொடுக்கும் பேட்டிகளை அவரின் அழகினை பார்த்து அவர்கள் வானத்தில் இருந்து இறங்கியவர்கள் என்ற கற்பனையை இந்த பிக்பொஸ் நிகழ்ச்சிகள் தவிடுபொடியாக்கியிருக்கின்றன.
பிக்பொஸ்ஸில் பங்குபற்றியவர்கள் தாம் எக்குடும்ப பண்பியலுக்குரியவர்கள் என்பதை அவர்களே வெளிப்படுத்தி நின்றார்கள்.
அனைத்து நவரச உணர்ச்சிகளும், உணர்வுகளும் அங்கு பங்கு கொண்டவர்கள் வாயிலாக களமாடியதைக் காண முடிந்தது. அதே வேளை தொலைக்காட்சி இரசிகர்கள் தொடர்ந்து இந்நிகழ்ச்சியை பார்க்க வைப்பதற்காக சில சிண்டுமுடிதலையும் பிக்பொஸ் நிர்வாகம் கனகச்சிதமாக செய்தது.
மனிதர்கள் என்றால் அவர்கள் இப்படித்தான் இருப்பார்கள் என்பதை வெளிப்படுத்திய இந்நிகழ்ச்சி நெகிழ்ச்சியான தருணங்களையும், வெவ்வேறு குணாம்சங்களைக் கொண்டவர்களை ஒன்றாக குடியிருந்த நாட்களின் தன்மையால் அவர்கள் ஒரே குடும்பமாகி நின்ற போதும் ஒரு சிலர் தாமரைத் தண்ணீர் போல ஒட்டியும் ஒட்டாமலும் இருந்ததையும் பார்த்தோம்.

வீடு என்பது பற்றும் பாசமும் கொள்ளக்கூடிய இடந்தான்.இந்நிகழ்ச்சியில் பங்குபற்றியவர்கள் ஒவ்வொருவராக வெளியேறிய போது பிக்பொஸ் வீட்டினை பிரிய முடியாமல் பிரிந்ததைக் காண முடிந்தது.இங்கே மனிதமனங்களின் போராட்டமும் மகிழ்ச்சி, கவலை, விரக்தி, பொறாமை,கண்ணீர், கோபம் என எல்லாமே இருந்தன.அதனால் இதனை மனிதர்களின் மனங்களைப் பரீட்சித்துப் பார்த்த ஆய்வாகக்கூட இருக்கலாம் என்பது எனது அபிப்பராயம்.
எமது அன்றாட வாழ்வில் உதாரணமாக ஒரு மரத்தை தினம் தினம் பார்ப்பதும் வெயில் காலங்களில் அதன் நிழலில் ஒதுங்கியிருப்பதன் நிகழ்வு அம்மரத்தோடு ஒன்றித்த பாசமாக மாறுவதும் பிறகு அம்மரம் அந்த இடத்தில் இல்லாத பொது ஏங்குவது இயல்பானது.அது போன்றுதான் பிக்பொஸ்ஸில் பங்குபற்றியவர்கள் அங்குள்ள அனைத்தோடும் ஒன்றித்துப் போய் அப்பொருட்களை தமது தோழர்களாக கொள்வதும் இயல்பானதே.

அதற்கு உதாரணமாக ரித்விகா தான் அணிந்திருந்த மைக்கின் மீது பாசம் வைத்திருந்ததையும் அதை பிரிய முடியாமலிருப்பதையும் பிகபொஸ்ஸிடம் கூறியதிலிருந்து அறிய முடிகின்றது.
எனவே பிக்பொஸ் நிகழ்ச்சி என்பது வெறும் வணிகம் மட்டுமல்ல குணங்களை ஆய்வு செய்த களமாகக்கூட கருதலாம்.






# ஏதிர்மறை (நெகடிவ்) சிந்தனையும் தேவை

வெற்றி மைந்தன்

ஒவ்வொரு விஷயத்திலும் பாசிடிவ் மற்றும் நெகடிவ் விஷயங்கள் கலந்தே இருக்கின்றன. அவையே ஒரு வட்டத்தை இணைக்கும் இரண்டு புள்ளிகளாகின்றன. இரண்டும் இல்லாமல் செயல் இல்லை, இயக்கமும் இல்லை. – ஜான் மெக்டனால்ட்

பாசிடிவ் சிந்தனைகள் குறித்து மட்டுமே பெரும்பாலும் நாம் கேட்கிறோம். நெகடிவ் திங்கிங் என்பது சாவான பாவம் போல ஒதுக்கியே வைத்து விடுகிறோம். ஆனால் வாழ்க்கையில் இரண்டும் கலந்த நிகழ்வுகளே எழுகின்றன. சில இடங்களில் நெகடிவ் சிந்தனைகள் கூட நம்மை வழிநடத்திச் செல்லும் என்கிறார் டாக்டர். ஜேம்ஸ் டாப்ஸன்.

காரில் ஏறி அமர்கிறோம். உடனே சீட் பெல்ட் அணிந்து கொள்கிறோம். அல்லது "எல்லாரும் சீட் பெல்ட் போடுங்க" என்று சொல்கிறோம். இதன் காரணம் என்ன ? ஒருவேளை ஆக்சிடன்ட் ஆச்சுன்னா என்ன பண்றது ? சீல் பெல்ட் போட்டா உயிர் தப்ப வாய்ப்பு இருக்கு. இல்லேன்னா உயிருக்கே ஆபத்து தான் போன்ற எதிர்மறை சிந்தனைகள் தான் இல்லையா ? விபத்து நடந்தால் எனும் எதிர்மறைச் சிந்தனை தான் நம்மை சீட் பெல்ட் அணியத் தூண்டுகிறது.

"ஒரு லைஃப் இன்சூரன்ஸ் வாங்கி வைக்கணும்ங்க. ஒருவேளை நாம பொட்டுன்னு போயிட்டா பிள்ளைங்க நாளைக்கு நடுத் தெருவில நிக்கக் கூடாது" என பரிதவிக்கும் ஒரு தந்தையிடமும் ஒரு நெகடிவ் சிந்தனையே எழுகிறது. அந்த எதிர்மறைச் சிந்தனை தான் அவரை ஒரு ஆயுள் காப்பீடு வாங்க தூண்டுகிறது.

கஞ்சா பொட்டலம் கையில் இருந்தாலும் தூக்கித் தூர எறியவேண்டும் எனும் எண்ணம் தோன்றுவதில் கூட கொஞ்சம் நெகடிவ் சிந்தனை இருக்கும். "இதைச் சாப்பிட்டு, இதுக்கு அடிமையாகி, உருப்படாதவனா, கெட்டவனா, நோயாளியா வாழ்வதா ?" என்பன போன்ற எதிர் சிந்தனைகளே தீய பழக்கங்களை விட்டு நம்மை விலக்குகிறது. "நாம் செய்கின்ற இந்தச் சிற்றின்பத் தப்பு வெளியே தெரிஞ்சா என்ன ஆகும்" எனும் பயம் கலந்த நெகடிவ் சிந்தனை தான் நம்மை அந்த விஷயத்தை விட்டு வெளியே செல்ல தூண்டுகிறது.

எனவே நெகடிவ் சிந்தனை என்பது ஒட்டு மொத்தமாகக் கெட்டதல்ல. அது சில நல்ல முடிவுகளை எடுக்க நமக்கு உதவுமானால் அந்த சிந்தனைகள் நல்லதே. எந்த முடிவை எடுத்தாலும் அதை புத்திசாலித்தனத்துடனும், நல்ல சிந்தித்தும் எடுங்கள் என்கிறார் டாக்டர் ஜேம்ஸ் டாப்ஸன் சொல்லும் அறிவுரையாகும்.

மெல்லிய நெகடிவ் அலைகள் நம்மைச் சுற்றி அதிக அலர்ட் ஆக இருக்க வைக்கும். நாம் சார்ந்த சூழலைக் குறித்த விழிப்புணர்வு நமக்கு அதிகம் இருக்க உதவும். கொஞ்சம் நெகடிவ் சிந்தனை இருப்பது நல்லதே என்கிறது "நியூ சவுத் வேல்ஸ்" பல்கலைக்கழக ஆய்வு ஒன்று. நேர்சிந்தனைகளையும், சில நேர் விளைவுகளையும் நெகடிவ் சிந்தனைகள் உருவாக்கி விட முடியும்.

எதிர் சிந்தனைகளின் விளைவுகள் பாசிடிவ் ஆக இருந்தால், அல்லது எதிர் சிந்தனைகள் நம்மை ஒரு எச்சரிக்கை உணர்வுக்கு கூட்டிச் சென்றால் அதை வரவேற்பதில் தவறில்லை. "நாய் கடிக்குமோ" எனும் பயத்தில் வெறிநாய்களை விட்டு விலகிச் செல்வது ஒரு எச்சரிக்கை உணர்வு. ஓடும் யானைக்கு எதிரே நிற்காமல் விலகி நிற்பது புத்திசாலித்தனமான முடிவு. கடுகடுப்பான பாஸ் திட்டக் கூடும் என கவனமாய் இருப்பது நல்லது. இப்படி எதிர்மறைச் சிந்தனைகளெல்லாம் செயல்களை நேர்கோட்டில் கொண்டு நிறுத்தினால் அவை வரவேற்கப்பட வேண்டியதே.

உலக இலக்கியங்களில் பலவும் மனிதர்கள் உணர்ச்சியின் மிகுதியால் இருக்கும் போது உருவானவையே. தார்மீகக் கோபம், காதலின் சோகம், துரோகத்தின் கசப்பு இவையெல்லாம் உலக இலக்கியங்களில் உன்னத இடத்தைப் பிடித்திருக்கின்றன.

பாசிடிவ் விஷயங்கள் நெகடிவ் செயல்களை ஏற்படுத்துவதுண்டு. ஹிரோஷிமாவை அழித்துத் துவம்சம் செய்த அணுகுண்டைப் போல. நெகடிவ் விஷயங்கள் நம்மை பாதுகாப்பதும் உண்டு, கார் சீட் பெல்ட் போல. எந்த விஷயத்தை எப்படிப் பயன்படுத்துகிறோம் என்பதே முக்கியம்.

மரணம் குறித்த சிந்தனை நம்மை வாழத் தூண்டவேண்டும். நெகடிவ் சிந்தனை நம்மை பாசிடிவ் வாழ்க்கைக்கு வழிநடத்த வேண்டும். அது தான் முக்கியம் !

27 ம் பக்கத் தொடர்ச்சி

மாற்றங்கள் வினா...மாற்றங்களே விடை....



எச்சில் பண்ண ஸ்பூன்ல சாப்பிட சொல்றது.... சட்டைல காதலன் வாசனையை ஸ்மெல் பண்றது ... காதலனை அணு அணுவா ரசிப்பது... இத்தன வருஷமா விர்ஜினா இருப்பது தெரிஞ்சதுக்கு அப்புறம் ரியாக்ட் பண்றதுனு த்ரிஷாவும்...

காதலியின் குடும்ப போட்டோவ பாக்க துடிக்குறதும்...காதலியை கட்டில படுக்க வச்சுட்டு கீழ படுத்து ரசிப்பதும்□

சரி நீ எப்பிடி இருக்க இப்போ? சந்தோசமா இருக்கியா? னு ஆதங்கமா கேக்குறதுனு விஜய் சேதுபதியும்...

மேல சொன்ன இந்த சில சீன்களே போதும் ரெண்டு பேரோட மனநிலை என்னானு சொல்ல ...

ஹீரோக்கு எப்போதும் ஒரு தேடல் இருந்ததுனு படம் ஆரம்பத்துல இருந்தே காட்டி இருப்பது... அதனாலேயே அந்த வேலையையே தன்னோட profession ஆ ஆக்கிருக்குறமாதிரி காட்டிருப்பதும் செம..

பொதுவா எல்லா விமர்சனத்துலயும் படத்துல இருக்குற ஒவ்வொரு டிபார்ட்மெண்ட்டா அலசுவோம். இந்த படத்துல அத பத்தியெல்லாம் ரொம்ப பேசாம படத்தை பத்தி மட்டும் பேசுறது ஏன்னா, ஒவ்வொரு டெபார்ட்மெண்ட்டும் அவங்க வேலைய ரொம்ப சரியாக செஞ்சுருக்காங்க அதெயெல்லாம் சொன்னோம்னா இத விட இன்னும் மூணு பக்கம் அதிகமா எழுதணும்.. So off screenm ஒதுக்கி வச்சுட்டு onscreenm மட்டும் இவ்ளோ சொல்லிருக்கேன். அந்த அளவுக்கு onscreen presentation செம சூப்பர்...

ஒரு லவ் சப்ஜெக்ட இவ்ளோ டீசெண்டா கொடுத்ததுக்கு இயக்குனரை பாராட்டியே ஆகணும் .. பாசில் மாதிரி இன்னொரு இயக்குனர் கிடைத்தது தமிழ் சினிமாக்கு ஒரு பிளஸ்.. மொத்தத்தில்...

காதலிக்காதவர்கள் தங்கள் வாழ்நாளில் இப்பிடி ஒரு உணர்வை மிஸ் பண்ணிட்டோமேனு நினைக்கவும்....

காதலில் வெற்றி பெற்றவர்கள் தங்கள் இளமை காலங்களை அசை போட வைக்கவும்...

காதலில் தோல்வியுற்றவர்கள் முன்னாள் காதலியிடம் தனியா பேச நமக்கு இப்பிடி ஒரு வாய்ப்பு கிடைக்காதானு ஏங்கவும்....

வைக்கிறது இந்த 96...

**சீனிவாசன் திருநாவுக்கரசு** (தமிழ்நாடு)




வெற்றிமணி இனி இணையத்தளத்திலும் பார்வையிடலாம்

Visit us on

www.vettimani.com

live right now

email: ragu.savetax@gmail.com






# பங்குச் சந்தையும், தனிப்பட்ட ஓய்வுதியமும்

## Stock Market (FTSE100) & Pensions

ரகு தர்மரட்டணம் ACMA , CGMA

இங்கிலாந்தில் இருக்கும் மிகப்பெரிய 100 கம்பனிகளை உள்ளடக்கிய index என்பதனை FTSE 100 என்று கூறுவார்கள். இதில் தற்பொழுது HSBC வங்கி முதலாவது இடத்தினையும், B.P இரண்டாவது இடத்தையும் Shell மூன்றாவது இடத்திலும் market capital என்ற அடிப்படையில் வகுக்கப்பட்டு இருக்கின்றன. இந்த மூன்று கம்பனிகளும் 18வீதமான FTSE 100 மதிப்பீடுகளையும், முதல் 10 கம்பனிகள் 40 வீதமான மொத்த மதிப்பீடுகளையும் அடைந்துள்ளன.


ஒவ்வொரு பிரஜையும் தமது தனிப்பட்ட ஓய்வுதிய திட்டத்தை அதாவது Personal, private pension ஆரம்பிக்கும் பொழுது அவர்களது முதலீட்டின் பெரும்பான்மையான தொகை இந்த FTSE 100 கம்பனிகளில் முதலிடப்படுகின்றன. எனவே FTSE 100ல் ஏற்றத் தாழ்வுகள் ஏற்படும் பொழுது அது நிச்சயமாக தனிப்பட்ட ஓய்வுதிய திட்டத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தும்.




இங்கு இருக்கும் 20வருட FTSE வரைபடத்தை பார்த்தால் May 2018ம் ஆண்டு இது அதிக பட்ச புள்ளியான 7900 மதிப்பை எட்டி இருக்கிறது. இது தான் FTSE 100 வரலாற்றிலேயே அதிகபட்ச மதிப்புகள் ஆகும்.

கடந்த சில நாட்களாக அமெரிக்க நாட்டில் ஏற்பட்ட பங்குச் சந்தை வீழ்ச்சியினால் அது FTSE 100இலும் வீழ்ச்சியை ஏற்படுத்தி இருக்கின்றது. May ல் 7900 என இருந்த மதிப்பு இன்று 7000 ஆக அதாவது 11வீதம் வீழ்ச்சியுடன் காணப்படுகின்றது.

இந்த வரைபடத்தை மிக அவதானமாகப் பார்த்தால் 2000ம் ஆண்டில் 6900 ஆகவும் பின்னர் 2000 தொடக்கம் 2003ம் ஆண்டு காலப்பகுதியில் வீழ்ச்சிகைக் கண்டு, பின்பு 2007ம் ஆண்டு 6800 ஆகவும், பின்பு 2015ல் 7000 என இருந்த FTSE 100 முதல் தடவையாக October 2016ம் ஆண்டு 7000 என்ற மதிப்பை மீறி மேலே சென்றது.



எனவே எமது கணிப்பின் படி 1900 என்ற மதிப்பிற்கு கீழே செல்லாத பட்சத்தில் FTSE 100ன் மதிப்பு இன்னமும் மேலே செல்ல வாய்புகள் இருக்கின்றன. (வரைப்படத்தின் நீல நிறத்தால் கீறப்பட்ட கோடு 6900 என்ற மதிப்பை காட்டுகிறது).




பங்குச் சந்தையில் Bull market, Bear Market என்று அவதானிகள் கூறுவதை நாம் கேள்விப்பட்டு இருப்போம். Bear Market என்றால் அதிகப்படியான மதிப்பு எண்ணில் இருந்து 20வீதத்திற்கு கீழே விலைகள் வீழ்ச்சி அடைவதனை கூறலாம். FTSE 100 ஐ உதாரணமாக எடுத்தால் அதன் அதிகபட்சமான 7900 விலையில் இருந்து 20வீதம் குறைவாக அதாவது 6300க்குக் கீலே சென்றால் இதினை Bear Market எனக் கூறுவோம். வரைபடத்தில இதனை பச்சை நிறமான கோட்டினால் தெரியப்படுத்தி உள்ளோம்.

தனிப்பட்ட ஓய்வுதியத்தை எந்த ஒரு நபரும் தனது 55ஆவது வயதில் இருந்து முதல் 25வீதம் வரை எந்த வித வரியும் செலுத்தாமல் எடுத்துக் கொள்ள முடியும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

FTSE 100 Index க்கும் தனிப்பட்ட ஓய்வூதிய திட்டத்திற்கும் இடையில் உள்ள நேரடி தொடர்பினால் FTSE யில் அடுத்த சில மாதங்களில் குறைவடையலாம் என நினைப்பவர்கள் முதல் 25வீதமான தொகையை withdrow பண்ணிக்கொள்வதை ஒரு தந்திரமாக கருதலாம்.

சிறந்த ஒளிப்பதிவு!
0049 152 33 83 29 55
Nimal
Video & Photo
namilvideo@gmail.com

Dortmund நகரில்...
Schamera Travels




எமது ஸ்தாபனம் புதிய இடத்தில்
ஆரம்பமாகும் நிகழ்வை முன்னிட்டு
02.05.2018 முதல் 31.12.2018 வரை
எம்மிடம் விமானச் சீட்டு பெற்றுக் கொள்பவர்களில்
இரு அதிஷ்டசாலிகளுக்கு இலங்கை சென்றுவர
விமானச் சீட்டு இலவசம்
Tel:01741925169
Rheinische str.56 44137 Dortmund

## அருள்மிகு ஸ்ரீ நாகேஸ்வர சமேத நயினை நாகபூஷணி அம்பாள்
## தியான மண்டப கலை பெருங்கோவில் எசன் e.V.
### Sri Naagapushani Ampaal Meditation Temple Essen Germany



**நாகபூஷணியே சரணம் / *Nagapooshaniye Saranam***

அன்பான நாகபூஷணி அம்மன் அடியார்களே !!

ஐரோப்பிய கண்டத்தில் ஜேர்மனியின் வடபால் அமைந்துள்ள பசுமை நகரமான எசன் நகரில் குடிகொண்டு அருள்பாலித்திட நாகபூஷணி அம்மன் திருவருட் கடாட்சம் கிட்டியுள்ளது. அனைத்து அடியவருக்குமான வழிபாடுகள், தியானம், யோகா, கலை வெளிப்பாடுகள் என அனைத்தும் ஒருங்கே அமைந்திட வழிவகை செய்யப்படவுள்ளது.

அம்பிகை அடியார்கள் இங்கு எந்த விதமான வியாபார நோக்கமற்ற இறைவழிபாட்டைக் கண்டு ஆன்ம ஈடேற்றத்தைப் பெறமுடியும்.

கலைஞர்கள் கௌரவத்தோடு தமது வெளிப்பாடுகளை நடாத்த முடியும்.

அனைத்து வயதினருக்குமான தியானம், யோகா போன்றவை கால ஒழுங்கில் இடம்பெறும். கட்டணங்கள் சொற்பமே அறவிடப்படும்.

தமிழ், சமஸ்கிருத மொழிகளில் வழிபாடுகள் அமையும்.

தாயகத்தில் அடிப்படைத் தேவைகள் அவசியமான உறவுகளுக்கான உதவிகள் வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

தன்னலம் கருதாத அடியவர்களால் நிர்வகிக்கப்படும் இவ்வாலயத்தில் அங்கத்தவர்கள், விரும்பியவர்கள் சகல நிர்வாக அமைப்புகளையும் பார்வையிடலாம்.

உயரிய நோக்கோடு அமையவிருக்கும் இந்த தியானப் பெருங்கோவிலான நாகபுஷணி அம்மன் ஆலயத்திற்குத் தங்களாலான பங்களிப்பை நல்குமாறு இறையன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

அனைத்து நிர்வாகங்களும் ஜேர்மானிய சட்டதிட்டங்களுக்கமைய பதிவு செய்யப்பட்டுள்ளன.

அங்கத்தவர்களின் குடும்பநிகழ்வுகள் மிக மிக குறைந்த பங்களிப்போடு நிறைவு செய்து கொள்ளமுடியும்.

Post Bank : IBAN DE 27440 100 4608 11903460 BIC : PBNKDEFF
Tamilischer Kultur und Wohlfahrtsverein Essen e.V.
Am Ringofen.21,45355 Essen.Tel: 0201 330 7524

தொடர்புகளுக்கு:
0176 55 77 8752- 0201 4584 2159, 015299 66871,
015210183527,0176 5563 8827,0201 330 7524 அம்பிகை அடியார்கள்

## என்றைக்கும் பொதுவான
## சிரித்திரனின் சிரிப்பு!!!






**இரத்தினசிங்கம் கிருஸ்ணலீலா தம்பதிகளின்**

## 25 வது ஆண்டு திருமண வெள்ளிவிழா



ஜெர்மன் பீலபெல்ட் நகரத்தில் வசிக்கும் இரத்தினசிங்கம் கிருஸ்ணலீலா (தம்பதிகளின்)
எங்கள் பெற்றோரின் 25ஆண்டு திருமண வெள்ளிவிழாவிலும் 60 வது பிறந்தநாள் விழாவிலும் கலந்து சிறப்பித்த அனைத்து அன்பு உறவுகளுக்கும்
எமது மனம் நிறைந்த நன்றிகள்.
அன்புடன்
பிள்ளைகள்: அனோஜன் அனாமிக்கா








சிவகாமி மனவறைச் சோடினை

யோகன், யோகி:
02823/6838
Mobil:
152 138 22 350
Yogan Deko



# திருமந்திரமும் வாழ்வியலும் 32

(சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி)

இந்நூலில் சிவம் எனவரும் சொல்லுக்கு இறைவன் என்னும் கருத்தைக் கொள்வோமானால் இந்நூல் எல்லா மதத்திற்கும் பொது நூலாக அமைவதைக் காணலாம்.

## திருமந்திரம் கூறும் புராணங்கள்

புராணக்கதைகள் வேதத்தில் கூறப்பட்ட தத்துவங்களை, நீதி முறைகளை விரிவாக மக்கள் புரிந்து கொள்வதற்காகக் கூறப்பட்ட உண்மைக் கதைகளாகும். வேதமந்திரமான "ஸத்யம் வத" (உண்மை பேசு) ஹரிச்சந்திர புராணமாகவும், "தர்மம் சர" (அறத்தைப் பின்பற்று) மஹாபாரதமாகவும், "மாத்ரு தேவோ பவ, பித்ரு தேவோ பவ" (தாய், தந்தையருக்குக் கீழ்ப்படிதல்) இராமாயணமாகவும் பெரிதாக விரிவுபடுத்திக் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு எல்லாப் புராணங்களும் மக்களை நல்வழிப்படுத்துவதற்காக தத்துவங்கள் மக்களைப் போய்ச் சேரவேண்டும் என்ற நோக்கில் அந்தந்தக் காலத்திற்கேற்ப சில விடையங்களை பெரிதுபடுத்திக் கூறியுள்ளார்கள்.

புராணங்கள் 18 (வாயு புராணத்துடன் 19 எனவும் கொள்ளப்படுகின்றது) பெரிய புராணங்களும், 18 உப (சிறிய) புராணங்களும் ஆக வியாச முனிவரால் தொகுக்கப்பட்டன. பெரியபுராணம் தவிர்ந்த மற்ற எல்லாப் புராணங்களும் சமஸ்க்கிருத மொழியில்தான் இருந்தன. பிற்காலத்தில் தமிழில் ஸ்காந்தம் என்னும் புராணம் கச்சியப்பசிவாச்சாரியாரால் கந்தபுராணமாகவும், ஹாலாஸ்ய மகாத்மியம் என்னும் உப புராணம் திருவிளையாடற் புராணமாகவும் எழுதப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இவ்வாறு மேலும் பல புராணங்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன. பெரியபுராணம் மட்டும் தமிழிலிருந்து சமஸ்க்கிருதத்திற்கு "உபமன்யு பக்த விலாசம்" என மொழிபெயர்க்கப்பட்டது.

புராணங்கள் பிரம்மாவிடமிருந்து வெளிப்பட்டதாக சாந்தோக்கிய உபநிடதத்திலும், மத்ஸ்ய புராணத்திலும் கூறப்பட்டுள்ளது. புராணங்கள் சிவனிடமிருந்து வந்ததாகவே சைவசமயம் கூறுகிறது. சைவ சித்தாந்தம் பிரம்மாவை சிவனின் ஒரு அங்கமாகப் பார்ப்பதால் இதில் முரண்பாடு உள்ளதாக நாம் எடுக்கமுடியாது.

திருஞானசம்பந்தப்பெருமான் புராணங்கள் சிவனிடமிருந்து வந்ததைப் பின்வரும் பாடலில் 4 வேதங்களும், 18 புராணங்களும், 6 வேதாங்கங்களும் இறைவனால் விரித்து உரைக்கப்பட்டதாகக் கூறியுள்ளார்

"பாதம் விண்ணோர் பலரும் பரவிப் பணிந்தேத்தவே
வேத நான்கும் பதினெட்டோடு ஆறும் விரித்தார்கு இடம்
தாதுவிண்டம் மதுவண்டு மிண்டிவரு வண்டினம்
கீதம்பாடம் மடமந்தி கேட்டுகளும் கேதாரமே"

மேலும் புராணங்கள் சிவனிடமிருந்து நந்தி, சனற்குமாரர், சூத முனிவருக்கூடாக வந்து வியாச முனிவரால் வகுக்கப்பட்டதைப் பின்வரும் பாடலில் கூறியுள்ளார்

"பூத முதல்வன் முதலே முதலாப் பொலிந்த
சூதன் ஒலிமாலை என்றே கலிக்கோவை சொல்லே"

புராணங்கள் பற்றி சுந்தரமூர்த்திநாயனார், மாணிக்கவாசகநாயனார், சேக்கிழார் சுவாமிகள், அருணந்திசிவாச்சாரியார் போன்ற பல அருளாளர்கள் கூறியுள்ளார்கள்.

புராணங்களைத் திருமூலர் இறைவனின் தன்மைகளை இலகுவழியில் மக்களுக்கு வெளிப்படுத்தத் தோன்றிய பழமையான கதைகளாகவே பார்க்கின்றார். லிங்கபுராணத்தில் பக்தியால், தவத்தால் திருவருள் கிட்டும் என்பதன் அடையாளம் தான் சக்தி தவமிருந்தமை. பாடல் எண் 347

"அடிசேர்வன் என்ன எம் ஆதியை நோக்கி
முடிசேர் மலைமக னார்மக ளாகித்
திடமாத வம்செய்து தேவர் அறியப்
படியார அர்ச்சித்துப் பத்திசெய் தாளே"

சிவப் பரம்பொருளையே சரண் அடைவேன், அவரையே திருமணம் செய்து கொள்வேன் என்று எம் ஆதிமுதலாகிய சிவபெருமானை நோக்கி, இமவான் மகளாகப் பிறந்த பார்வதி தேவி, இமய மலைச் சாரலில், தேவரும் மூவரும் அறியப் பரமனைப் பூசித்துப் பக்தி செய்து வழிபட்டாள்.மேலும் சிவபுராணங்களில் முப்புரம் எரித்தல் ஆணவத்தை ஒடுக்கும் இறைவன் அடையமுடியாதவரல்ல அன்பர்க்கு கருணையோடு தன்னை வெளிப்படுத் துபவர். பாடல் எண் 348

"திரிகின்ற முப்புரஞ் செற்ற பிரானை
அரியனென்(று) எண்ணி அயர்வுற வேண்டா
புரிவுடை யாளர்க்குப் பொய்யலன் ஈசன்
பரிவொடு நின்று பரிசறி வானே"

போரிடாமலே, நெற்றிக்கண் நெருப்பாலேயே, பார்வை ஒன்றாலேயே முப்புரத்தையும் எரித்து அழித்த சிவப்பரம்பொருள் அறிதற்கு, அணுகுதற்கு முடியாதவன் என்று நினைத்து யாரும் மனம் தளர வேண்டாம். அன்பு செலுத்துபவர்களுக்குச் சிவன் பொய்யனாகான்.

தக்கன் வேழ்வியில் ஆணவத்தை ஒடுக்கும் இறைவன் பாடல் எண் 340
"கொலையிற் பிழைத்த பிரசா பதியைத்
தலையைத் தடிந்திட்டுத் தான்அங்கி இட்டு
நிலையுல குக்கிவன் வேண்டுமென் றெண்ணித்
தலையைப் பரிந்திட்டுச் சந்திசெய் தானே"

தட்சாயிணியாகப் பிறந்த பார்வதி தேவிக்குத் தகப்பனான மன்னன் தட்சன் ஒரு யாகம் செய்தான். அதற்கு முதல் பூசை பெற ஈசனை அழைக்காது அவமதித்தான். இது கொலைக் குற்றம் போன்றது. எனவே சிவபெருமான் சினம் கொண்டு யாகம் நடக்கும் இடம் சென்று தட்சனின் தலையை வெட்டி யாகத் தீயில் போட்டார். பின்பு பார்வதி தேவியும், மற்றவர்களும் வேண்ட அங்கிருந்த ஓர் ஆட்டின் தலையை தட்சனின் உடலில் பொருத்தி, இவன் சில காலம் இப்படியே இருக்கட்டும் என்று அருளிச் செய்தான்.

மார்க்கண்டேய புராணத்தில் எமனை வென்றவர் பாடல் எண் 345
"மூலத் துவாரத்து மூளும் ஒருவனை
மேலைத் துவாரத்து மேலுற நோக்கிமுற்
காலுற்றுக் காலனைக் காய்ந்தங்கி யோகமாய்
ஞாலக் கடவூர் நலமாய் இருந்தே"

மூலாதாரத்திலிருந்து சுழுமுனை வழியாக மூலக் கனலை மேலேற்றிச் சோதி ஒளியாகத் தெரியும் இறைவனை நோக்க வல்லவர்கள் இறைவன் அருளைப் பெறுவர். இவர்களை அணுகவரும் காலனைக் காலால் உதைத்து, இறைவன் சாகா நிலையளிப்பான்.


ஓம் பூரணம் ஓம்

மானுடம் முழுமை பெறும் பூரணம்

பூரண ஆச்சிரமம்

சுவிற்சர்லாந்து

0041 79 839 27 73

உடலினையும் மனதினையும் உறுதி செய்து
வாழ்வினை வெற்றி கொள்வோம்

யோகா, தியானம், மன ஒருங்குவிப்பு, உடல் உள நல பயில்வு, ஐபதப சாதனைகள்

Purna Ashram Gotthelfstrasse 44, 3400 Burgdorf Switzerland Tel: 0041 34 413 02 65

# இலங்கைக்கு வலைப் பந்தாட்டத்தில் ஆசியக் கிண்ணத்தை பெற்று தந்த உயர் தமிழச்சி தர்சினி.சிவலிங்கம்!






இலங்கையின் தலைசிறந்த விளையாட்டு வீராங்கனைகளில் ஒருவராக அடையாளம் காணப்பட்டவர்தான் தர்சினி சிவலிங்கம். நாட்டின் வலைப்பந்தாட்ட அணியின் நட்சத்திர வீராங்கனையும் இவர்தான். இவரின் உயரம் ஆறு அடியும் பத்து அங்குலமும். இவரின் மீள்வருகை இலங்கைக்கு வலைப்பந்தாட்டத்தில் மீண்டும் ஒருமுறை 2018 ஆசியக்கிண்ணத்தை பெற்றுக்கொடுத்துள்ளது.

தர்சினியின் சொந்த இடம் யாழ்ப்பாணத்தில் புன்னாலைக்கட்டுவன். ஆறு பிள்ளைகள் கொண்ட குடும்பத்தில் ஐந்தாவதாக பிறந்தவர்.

இவரது குடும்பத்தில் அநேகர் உயரமானவர்கள் தான். அதீத உயரம் காரணமாக இவரது சிறுவயது வாழ்க்கை மிகவும் கசப்பான அனுபவங்களை இவருக்கு கொடுத்திருக்கின்றது. பெரும்பாலும் இவர் வேடிக்கைக்கு உரிய பொருளாகவே ஏனையோரால் பார்க்கப்பட்டார்.

கல்விப்பொதுத்தராதர வகுப்பில் வசாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தில் இருந்தபோது இவரின் உயரம் 6 அடியும் இரண்டு அங்குலமும். பாடசாலையிலேயே இவர்தான் உயரமானவர். அதிபரின் உயரம் ஆறு அடியும் ஒரு அங்குலமும். உயரம் காரணமாக ஏனைய மாணவர்களால் நையாண்டி செய்யப்பட்டார்.

தர்சினி 1982ம் ஆண்டு பிறந்தவர். 22 வயதை அடைந்த பிற்பாடு தர்சினியின் உயரத்தில் பெரிய மாற்றம் ஏற்படவில்லை. தர்சினி கிழக்குப் பல்கலைக் கழகத்தில் கலைத்துறை பயின்றார். தமிழ்த்துறையில் விரிவுரையாளராக வரவேண்டுமென்பது இவரின் இலட்சியமாக இருந்தது.

ஆயினும் இங்குதான் இவரின் வலைப்பந்தாட்ட திறமை ஊக்குவிக்கப்பட்டது. கொழும்பிற்கு அழைத்து வரப்பட்டு விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டார். இவரின் கசப்பான அனுபவங்களுக்கு சிறுவயது முதலே காரணமாகி இருந்து வந்த அதீத உயரம் இவரை வாழ்க்கையில் உயரத்திற்கு கொண்டுவந்தது மாத்திரமல்லாது இலங்கை வலைப்பந்தாட்ட அணியையும் உலகறிய செய்தது.

ஆசிய கிண்ண வலைப்பந்தாட்ட போட்டியில் இலங்கை அணி சிங்கப்பூர் அணியை இறுதி போட்டியில் வீழ்த்தி சாம்பியன் ஆனது . 9 வருடங்களின் பின்னர் இலங்கை அணி ஆசிய கிண்ணத்தை கைப்பற்றி வெற்றி வாகை சூடியது .

தனது அசாத்திய திறமை மூலம் ஆசிய கிண்ணத்தை பெற்று கொடுத்த தர்ஷினி அவர்களுக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தில் செலான் வங்கியினால் மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது .

கிரிக்கெட் முதல் கொண்டு அனைத்து விளையாட்டுக்களிலும் தமிழ் வீர வீராங்கனைகள் திட்டமிட்டு சிங்கள பேரினவாதிகளால் புறக்கணிக்கப்பட்டு வரும் நிலையில் ஓர் தமிழச்சி ஆசிய கிண்ணத்தை பெற்று கொடுத்தமை ஒட்டு மொத்த தமிழர்களுக்கும் பெருமை






இலங்கை வலைப்பந்தாட்ட அணியின் நம்பிக்கை நட்சத்திரமானார். ஏனைய அணியினருக்கு சிம்மசொப்பனமானார். இவரின் கைகளுக்கு பந்து கிடைத்தால் போதும், 90 சதமானம் தவறாமல் புள்ளியைப் பெறுவார். 2009ம் ஆண்டு இடம்பெற்ற ஆசிய வலைப்பந்தாட்ட போட்டியில் சம்பியனாக வாகை சூடியது இலங்கை. இப்போட்டியில் மொத்தமாக இலங்கை அணியால் 79 புள்ளிகள் பெறப்பட்டன. இதில் 74 புள்ளிகள் தர்சினி போட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இவரின் மற்றொரு யாழ்.வீராங்கனையான எழிலேந்தினியும் இலங்கை வலைப்பந்தாட்ட வீராங்கனையாக கலக்கி வருவதும் குறிப்பிடத்தக்கது.





ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாள் ஆலயம்
துர்க்கா பூஜா துரந்தரர்
சிவசாமிக்குருக்கள்
ஜெயந்திநாதக்குருக்கள்
Tel: 02304- 910 9445
0177 20 16 941



இது விளம்பரம் அல்ல!
இது உங்கள் நல்வாழ்வுக்கு நாம் தரும் ஆதாரம்!

Pflegedienst Bergstraße

பிள்ளைகளே, பெற்றோர்களே 10ம் வகுப்பு முடித்தவுடன் தாதிதொழில் படித்தால், , யேர்மனி முழுவதும் எண்ணற்ற நிறுவனங்கள் சிவப்பு கம்பளம் விரித்து 3000€ சம்பளம் தந்து வேலை தர காத்துக் கொண்டு இருக்கின்றன.
ஏன் நாம் முன்வந்து இந்த புனிதமான தொழிலை கற்று பணியாற்றி எம்மவரை பாதுகாக்க, முன்வரக்கூடாது?, சிந்தியுங்கள்!, உங்கள் கரங்களைப் பற்றிக்கொள்ள விரும்புகிறேன்.
ஆர்வமுள்ள 10 பேருக்கு எனது ஸ்தாபனத்தில் இணைந்து தொழில் செய்ய சந்தர்ப்பம், அளிக்க விரும்புகிறேன். இங்கு பத்தாம் வகுப்பினை நிறைவு செய்து விட்டு, மேற்கொண்டு என்ன செய்தால், நல்ல வேலை வாய்ப்பு கிட்டும் என எண்ணும் இளையோர் என்னுடன் தொடர்பு கொள்ளலாம்.
வாகன ஓட்டுனர் அனுமதி பத்திரம் தேவை.படிக்க விரும்பும் பிள்ளைகளுக்கு நாம் தங்கும் இடவசதி, உணவு, தொழிலில், பயிற்சி (Ausbildungsplatz) தந்து வேலையும் தருகின்றோம்.



மனதுக்கு நிறைவான தொழில்!
கைநிறைய காசு!!
இதற்குமேல் மனசு வேண்டுவது என்ன!!!

அனைவருக்கும் எங்கள் உள்ளங்கனிந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்



info@pflege-bergstrasse.de
www.pflege-bergstrasse.de

Frau K.Wadeni Selvanathan
Mainstr 16
68642 Bürstadt

Telefon: (0 62 06) 937 857 Telefax:( 0 62 06) 937 858

## யேர்மனி– பிலபெல்ட் தமிழ் கல்வி கலைக்கல்லூரியின் மெய்வல்லுநர் போட்டி 2018














யேர்மனி- பிலபெல்ட் தமிழ் கல்வி கலைக்கல்லூரியின் மெய்வல்லுநர் போட்டி (23.09.2018) இல் இருந்து சில காட்சிகள். படம்: நந்தபாலன்.





### அம்ருதாவின் அரங்கேற்றம் அற்புதம் அதி அற்புதம்!

Baratha Arangetram - Selvi. Amrootha Chandrasekaran 07-10-2018












இசைமேதை லால்குடி GJR கிருஷ்ணன் அவர்களின் தலைமையில் லால்குடி இசைப் பரம்பரைக்கு சமர்ப்பணமாய் இடம்பெற்ற அம்ரூதாவின் அரங்கேற்றம். இந்திய இசைக்கலைஞர்கள் ,அதிதிகள்,அவை நிறைந்த ஆயிரம் ரசிகர்கள் அனைவரையும் கட்டிப்போட்ட அரகேற்றச் செல்வி அம்ரூதா அவர்களையும் அபிநயஷேத்ராவின் அதிபர் கலாசூரி திவ்யா சுஜென் அவர்களையும் வெற்றிமணி பாராட்டி மகிழ்கின்றது..

Photography by Pixtreme.







சொர்ணாஞ்சலி கவிதை நூல் வெளியீடு!



இன்று 21.10.2018 ஞயிற்றுக்கிழமை யேர்மனியில் முல்கைம் நகரில் அமரர் சொர்ணலிங்கம் அவர்களது 2 வது ஆண்டு நினைவு அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. இந் நிகழ்வில். சொர்ணாஞ்சலி எனும் கவிதை நூல் அவரது துணைவியார் கவிதா ஞானவாருதி கோசல்லயா சொர்ணலிங்கம் அவர்களால் எழுதப்பெற்று வெளியிடப்பட்டது. வானொலி நேயர்கள் இலக்கிய நண்பர்கள் என பலர் கலந்து சிறப்பித்தனர். படங்கள்:வெற்றிமணி

## யேர்மனி கஸ்ரொப் றவுக்சல் தமிழாலயத்தின் வாணிவிழா





கஸ்ரொப் றவுக்சல் தமிழாலயத்தின் வாணிவிழா 13.10.2018 அன்று சனிக்கிழமை மாலை 17.00 மணியளவில் கஸ்ரொப் றவுக்சல் தமிழாலய மண்டபத்தில் நிர்வாகத்தினர்இ ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் நலம்விரும்பிகள் ஆகியோரால் இணைந்து கொண்டாடப்பட்டது. கலைநிகழ்வுகளாக மாணவர்களின் நாடகம்இநடனம்இ சங்கீதஇசைஇ பாடல்கள்இ பேச்சுக்கள் போன்றவை இடம்பெற்றன. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக தமிழ்க் கல்விக் கழகத்தின் மாநிலப் பொறுப்பாளர் திரு தா.நற்குணராஜா அவர்கள் கலந்து கொண்டுஇ பொதுத்தேர்வில் அதிதிறன் மிகுதிறன் பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பினையும் வகுப்பு ஆண்டு 12 நிறைவு செய்த மாணவர்களுக்கான மதிப்பளிப்பினையும் வழங்கி சிறப்பித்திருந்தார்.



இலங்கை மலையகத்தமிழர்கள் தொடர்பான ஆவணங்கள்
- தமிழ் மரபு அறக்கட்டளை வெளியீடு





# மலையகத்தில் மாரியம்மன் வழிபாடு

உலகெங்கிலும் பண்டைய சமூகத்தில் தாய் தெய்வ வழிபாடு என்பது முக்கியக் கூறாக விளங்கியது. இன்று நமக்குக் கிடைக்கக்கூடிய மிகப்பழமையான பெண் தெய்வ வடிவமாக விளங்குவது வில்லண்டோர்ப் அன்னை (ஏநரெள ழக றுடைடநனெழசக) சிற்பமாகும். கி.மு.30,000 வாக்கில் செதுக்கப்பட்ட ஒரு சிறிய தாய் தெய்வ சிற்பம் இது. இன்றைய ஆஸ்திரியாவின் ஒரு மலையடிவாரத்தில் அகழ்வாராய்ச்சியின் போது இந்தச் சிற்பம் கிடைத்தது. இன்று வியன்னா வரலாற்று அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்படுகின்றது. தமிழகத்தில் தாய் தெய்வ வழிபாடு என்பது பன்னெடுங்காலமாக காலூன்றிய ஒரு வழக்கு. தமிழ் மக்கள் அன்னையையே தம் வாழ்வின் எல்லா கால கட்டங்களிலும் தம்மை காக்கும் தெய்வமாகக் கொண்டிருந்தனர்.

கடந்த சில நூற்றாண்டுகளில் புதிய வாழ்வைத் தேடி பல தீவுகளுக்கும், தென்னாப்பிரிக்கா, மலாயா, இலங்கை என்று சென்ற தமிழக மக்களும் தாய் தெய்வ வழிபாட்டையும் அதனைச் சுற்றி வழங்கப்படும் சடங்குகளையும் தம்மோடு எடுத்துச் சென்றனர் என்பதை இன்று அம்மன் கோயில்கள் பெருவாரியாக இங்கு வழக்கில் இருப்பதைக் கொண்டு எளிதாக அடையாளம் காண முடிகின்றது.

தங்கள் சொந்தங்களை விட்டுப் பிரிந்து புதிய நிலத்தில் கால் ஊன்றிப் பிழைக்க வந்த மக்கள் சந்தித்த அவலங்கள் பல. பணிக்கு அமர்த்தியவர்கள் நீண்ட நேரம் வேலை பார்க்க நிர்பந்தித்த சூழல், காடுகளை அழித்து கிராமங்களையும் தோட்டங்களையும் உருவாக்கிய போது சந்தித்த பிரச்சனைகள், சக மனிதர்களாலேயே துன்பத்திற்குள்ளாகப்பட்ட கொடூரமான சூழல் என்ற நிலையில் நம்பிக்கை தரும் ஒரே பொருளாக மாரியம்மன் கோயில்களே பஞ்சம் பிழைக்க வந்த இம்மக்களுக்கு அமைந்தது. இத்தகைய கோயில்களில் ஒன்றாக இலங்கையின் மாத்தளை முத்து மாரியம்மன் ஆலயத்தைக் கூறலாம்.

இலங்கை மலையகப் பகுதிகளில் கோப்பித் தோட்டம் தேயிலைத்தோட்டம் என உருவாக்கப்பட்ட 19ம் நூற்றாண்டின் பிற்பகுதிகளில் தோட்டத்து கங்காணிமார்களுக்குக் கோயில்கட்டிக்கொள்ள இடம் பிரித்துக் கொடுக்கப்பட்டிருந்ததாக அறிய முடிகின்றது ஒவ்வொரு கங்காணிக்கும் ஒரு "பெரட்டி" வழங்கப்பட்டிருந்தது. ஆக அவர்களுடைய ஆளுமைக்குள் இருக்கும் பெரட்டியில் கோயில் திருவிழா முடிந்த பின்னர் அடுத்த கங்காணியின் பெரட்டிலுள்ள கோயிலில் திருவிழா நடக்கும் வகையில் முறைப்படுத்தப்பட்டிருந்தது. பின்னர் பெரிய கங்காணியின் முக்கியத்தைக் காட்டிக்கொள்வதற்காகத் திருவிழாவில் ஊர்வலங்களும் நடத்தப்பட்டதாக அறிகின்றோம்.



முனைவர்.க.சுபாஷிணி

இத்தகைய சிறிய திருவிழாக்கள் முடிந்த பின்னர் இறுதியில் எல்லா சிறு கோயில்காரர்களுமாக இணைந்து பெரும் திருவிழாவினை எடுப்பது வழக்கமாயிருந்தது. இத்தகைய கோயில்களில் அன்று சாமிக்கு மந்திரம் சொல்வதற்கு பூசாரிமார்கள் இருந்தனர். இவர்கள் தோட்டத் தொழிலாளர்களுக்கிடையில் உள்ளவர்களிலேயே ஒருவராக இருப்பார். உடுக்கடித்து "மண்டு" வைத்து "சாமியை வரவழைத்துக்" குறி சொல்லி வழிபாடு நடைபெறும் . கரகம் எடுத்தல், காவடி எடுத்தல் வேல்குத்துதல் போன்றவையும் வழிபாட்டில் ஒரு அங்கமாக இருக்கும்.

பொதுவாக இலங்கையின் மலையகப் பிரதேசங்களில் காணப்படும் தெய்வங்களாக முத்துமாரியம்மன், காளியம்மன் ஆகிய பெண் தெய்வங்களையும் முருகன், விநாயகர், மாடசாமி முனியாண்டி, இடும்பன், முன்னடையான், ரோதை முனி, மதுரை வீரன், சிந்தாகட்டி, கறுப்பண்ணசாமி, கவாத்துசாமி, ஐயனார், அழகுமலையான் ஆகிய ஆண் தெய்வங்களுக்கான கோயில்களும் உண்டு. இவற்றோடு ஊமையன் கோயில், சமாதிகள் அடங்கிய தென்புலத்தார், நாகதம்பிரான், அரசமரம், கருடாழ்வார் போன்ற வழிபாடுகளும் இருந்தாலும் மாரியம்மன் வழிபாடே மலையக மக்கள் வாழ்க்கையில் முக்கியத்துவம் வாய்ந்த வழிபாடாக அறியப்படுகின்றது. உதாரணமாக கண்டியில் 57 மாரியம்மன் ஆலயங்களும், நுவரெலியாவில் 225 மாரியம்மன் ஆலயங்களும், கேகாலையில் 46 மாரியம்மன் ஆலயங்களும், களுத்துறையில் 45 மாரியம்மன் ஆலயங்களும் இருப்பதைக் காணலாம்.

இப்புகைப்படத்தில் தமிழகத்திலிருந்து மலையகத்தோட்டத்தில் பணிபுரிய வந்த தமிழ்ப்பெண் ஒருவர் குழந்தையைத் தூக்கியவாறு நிற்பதைக் காணலாம். இது 1901 அல்லது 1902ம் ஆண்டு வாக்கில் எடுக்கப்பட்ட ஒரு புகைப்படம். ஒரு அஞ்சல் அட்டையின் முகப்புப் பக்கத்தில் அச்சிடப்பட்ட புகைப்படம் இது.

குறிப்பு- மலையகத்தில் மாரியம்மன் வழிபாடும் வரலாறும், மாத்தளை பெ.வடிவேலன் (1997) நன்றி-

சேகரிப்பு:திரு.முருகையா வேலழகன், ஒஸ்லோ, நோர்வே. ( இணையம் வழி ஏலத்தில் வாங்கப்பட்ட கி.பி 19ம் நூற்றாண்டின் இறுதி அல்லது 20ம் நூற்றாண்டின் ஆரம்பகால புகைப்படம்)

**முனைவர்.க.சுபாஷிணி** (ஐ தமிழ் மரபு அறக்கட்டளை]





# வம்பு வார்த்தைகள் ஏனோ?

## ஆழ்வாப்பிள்ளை

வம்பு வார்த்தைகள் ஏனோ? இலங்கை வர்த்தக ஒலிபரப்புக் கூட்டு ஸ்தாபனத்தில் ஒலிபரப்பும் பாடல்கள் சில, திரையரங்குகளில் சினிமாவில் பார்க்கும் பொழுது வேறுபட்டு இருக்கும். இது ஏன் எப்படி என்று ஒரு குழப்பம் என்னிடம் முன்னர் இருந்தது. பின்னர் பாடல்கள் தணிக்கை செய்யப்படும் விபரம் தெரிந்த பின் தெளிவானது.

திரைப்படம் தயாரிப்பில் இருக்கும் பொழுதே அந்தப் படத்தின் பாடல்கள் இசைத்தட்டில் வெளிவந்து விடும். பின்னர் திரைப்படம் தயாரித்து முடித்தபின் தணிக்கைக் குழுவின் கைக்குப் போகும் பொழுது பாடல் வரிகளில் ஏதாவது ஏடாகூடமாக இருந்தால் கத்தரி விழ ஆரம்பிக்கும். அப்படி கத்தரி விழும் பாடல்களில் உள்ள வரிகளில் மாற்றம் செய்து பாடகர்களைக் கொண்டு மீண்டும் பாட வைத்து படத்தில் இணைத்து விடுவார்கள். முன்னரே வெளிவந்த இசைத்தட்டுக்கள் மாற்றம் இல்லாமல் ஒலித்துக் கொண்டிருக்கும்.

காங்கிரஸ் ஆட்சி நடந்து கொண்டிருந்த நேரம். எம்ஜிஆர் படங்களின் பாடல்களில் திமுக கொள்கைப் பிரச்சாரம் இருக்கும். அதனால் அங்கே கத்தரி கண்டிப்பாக விழுந்து விடும். அதுவும் இந்தக் கத்தரி விளையாட்டு எம்ஜிஆர் - வாலி கூட்டணியில்தான் அதிகம் நிகழ்ந்திருக்கிறது.

எங்கவீட்டுப் பிள்ளை திரைப்படத்திற்காக முதலில் வாலி எழுதிய பாடலின் வரிகள் இப்படி ஆரம்பிக்கும்,

„நான் அரசனென்றால்
என் ஆட்சி என்றால்
இங்கு ஏழைகள் வேதனைப் படமாட்டார்"

இந்தப் பாடலைப் பார்த்த தயாரிப்பாளர் பி.நாகிரெட்டி, கண்டிப்பாக தணிக்கைக் குழு அனுமதிக்காது என்று சொல்ல நான் ஆணையிட்டால் அது நடந்து விட்டால் என்று வாலி மாற்றி எழுதினார். பாடல் பதிவானது. ஆனாலும் தணிக்கைக் குழு இரண்டு இடத்தில் கத்தரி போட்டது.

ஒரு தலைவன் உண்டு- அவன்
கொள்கை உண்டு
அதை எப்போதும் காத்திருப்பேன் என்ற வரியில் "ஒரு தலைவனில் ஒரு தடவையும் "இந்தக் காக்கைகள் கூட்டத்தை ஒழிப்பேன் என்ற இடத்திலுமாக இரண்டு தடவைகள் வெட்டு விழுந்திருந்தன.

"இந்தக் காக்கைகள் கூட்டத்தை ஒழிப்பேன் என்ற வரி இந்தக் கூட்டத்தின் ஆட்டத்தை முடிப்பேன் என்றும் தலைவன் என்ற சொல் கடவுள் என்றும் திரைப்படத்தில் மாற்றம் செயயப் பட்டது.


அறிஞர் அண்ணா நம்நாடு பத்திரிகையில் அருமைத் தம்பி என்று விழித்து தொடராக கடித இலக்கியம் எழுதிக் கொண்டிருந்தார். அந்தக் காலகட்டத்தில் வெளிவந்த தாய்க்குப் பின் தாரம் திரைப்படத்தில் மருதகாசி எழுதிய பாடல் வரிகள் இசைத்தட்டில் இப்படி இருந்தன,

மனுசனை மனுசன் சாப்பிடுறாண்டா அருமைத் தம்பி - இது
மாறுவதெப்போ தீருவதெப்போ ஏழைத் தம்பி"
அருமைத் தம்பிக்கு தணிக்கைக் குழுவின் கத்தரி விழுந்ததால் திரைப்படத்தில்,

"மனுசனை மனுசன் சாப்பிடுறாண்டா தம்பிப் பயலே - இது
மாறுவதெப்போ தீருவதெப்போ நம்ம கவலை" என்று இடம் பெற்றிருந்தது.

அன்பே வா திரைப்படத்தில் "உதய சூரியனின் பார்வையிலே, உலகம் விழித்துக் கொண்ட வேளையிலே" என்ற வரிகளில் உதயசூரியன் புதிய சூரியனாக மாற்றப் பட்டது. பெற்றால்தான் பிள்ளையா என்ற திரைப்படத்தில் "மேடையில் முழங்கு அறிஞர் அண்ணா போல்" என்ற வரியில் அறிஞர் அண்ணாவை எடுத்து விட்டு திரு.வி.க. என்று மாற்றி இருந்தார்கள்.

எம்ஜிஆரின் அரசியற் பாடல்களில் மட்டுமல்ல, காதல் பாடல்களிலும் கத்தரி போட்டார்கள். படகோட்டி திரைப்படத்தில், அருகில் வராமல் அள்ளித் தராமல் ஆசை விடுவதில்லை என்ற வரி ஆபாசமாக இருக்கிறது என்று தணிக்கைக் குழு சொல்ல நேரில் வராமல் நெஞ்சைத் தராமல் ஆசை விடுவதில்லை என்று திரைப்படத்தில் மாற்றி இருந்தார்கள்.



வாலி-எம்.ஜி.ஆர்

பெற்றால்தான் பிள்ளையா திரைப் படத்தில்,
**"தோகை மயிலின் தோளை அணைத்து**
**பள்ளி கொள்வது சுகமோ"** என்ற வரியில்
பள்ளி கொள்வது ஆபாசம் என்று சொல்லி
பள்ளியில் தணிக்கை குழு கத்தரி போட,
"தோகை மயிலின் தோளை அணைத்து
பழகிக் கொள்வது சுகமோ" என
திரைப்படத்தில் வரும்.
இதே பாடலில்

**"உறவைச் சொல்லி நான் வரவோ**
**என் உதட்டில் உள்ளதைத் தரவோ"** என்ற வரியும் ஆபாசம் என்று தணிக்கைக் குழு சொல்ல,
உறவைச் சொல்லி நான் வரவோ
என் உயிரை உன்னிடம் தரவோ என்று மாற்றி இருந்தார்கள்.

பணம் படைத்தவன் திரைப்படத்தில்,
"அந்த மாப்பிளை காதலிச்சான்
கையைப் பிடிச்சான் என்ற பாடலில் இசைத்தட்டில்,
**"அம்மம்மா என்ன சுகம்**
**அத்தனையும் கன்னி சுகம்"** என்று ஆண் பாடுவதாக இருக்கும். திரையில்
அம்மம்மா என்ன சுகம்
அத்தனையும் கண்டதில்லை என்று மாற்றி இருப்பார்கள்.

எம்ஜிஆர் பாடல்களில் மட்டுமல்லாமல், பொதுவாக ஆபாசம் அல்லது சமூகத்துக்கு முரணான கருத்துகள் கொண்ட மற்றையவர்களுடைய திரைப்படப் பாடல்களிலும் கத்தரி விழுந்து கொண்டுதான் இருந்தன.

வாழ்க்கைப் படகு திரைப் படத்தில்,
**"பொல்லாத பெண்களடா**
**புன்னகையில் வேசமடா**
நன்றி கெட்ட மாதரடா - நான்
அறிந்த பாடமடா என்ற வரிகள் பெண்களுக்கு அவமரியாதை செய்கிறது என்று தணிக்கை கத்தரி போட,



"பொல்லாத கண்களடா
புன்னகையில் வேசமடா
நன்றி கெட்ட மாந்தரடா - நான்

தொடர்ச்சி 31 ம் பக்கம்




# மெல்ல, மெல்ல, மெலிகிறார்!

கூறியதை அடுத்து அமெரிக்காவில் இருந்து டிரெய்னரை வரவழைத்து உடல் எடையை குறைக்கும் வேலையில் ஈடுபட்டுள்ளார் கமல் ஹாஸன். இந்தியன் 2 படத்தில் கமலை மெல்லியவராக காட்ட விரும்புகிறார் ஷங்கர். படத்தில் கமலை முன்பு போன்று மெல்லியவராகப் பார்க்கலாம். கமல் தினமும் உடற்பயிற்சியும், யோகாவும் செய்யும் பழக்கம் உள்ளவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஷங்கர் இயக்கத்தில் இந்தியன் 2 படத்தில் நடிக்க உள்ளார் கமல் ஹாஸன். இந்தியன் படத்தை போன்றே இந்த படமும் நிச்சயம் பெரிய அளவில் ஹிட்டாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த படத்திற்காக ஒரு விஷயத்தை செய்யுமாறு ஷங்கர் கமலிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

கமல் கமல் ஹாஸன் தனது அலுவலக படியில் இருந்து தவறி விழுந்ததில் அவரது வலது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. அந்த சிகிச்சைக்கு பிறகு கமல் ஹாஸன் வெயிட் போட்டுவிட்டார். இந்நிலையில் இந்தியன் 2 படத்திற்காக வெயிட்டை குறைக்க வேண்டும் என்று ஷங்கர் கமலிடம் தெரிவித்துள்ளார். ஷங்கர் டிசம்பர் டிசம்பர் இந்தியன் 2 படத்தின் படப்பிடிப்பு டிசம்பர் மாதம் துவங்கும் என்று ஷங்கர் பேட்டி ஒன்றில் தெரிவித்தார். அதற்குள் கமல் ஹாஸன் தனது உடல் எடையை குறைக்க வேண்டும். கமல் ஓராண்டு காலம் படப்பிடிப்பில் கலந்து கொள்வாராம். இந்தியன் 2 படத்தை 2020ம் ஆண்டு வெளியிட திட்டமிட்டுள்ளனர். அனிருத் இசையமைக்கிறார். இந்த படத்தில் கமலுக்கு ஜோடியாக நயன்தாரா நடிக்க உள்ளார். ஒளிப்பதிவு பொறுப்பை ரவி வர்மன் ஏற்றுக் கொண்டுள்ளார். கமல் ஹாஸன் அரசியலுக்கு வந்த பிறகு இந்தியன் 2 படத்தில் நடிப்பதால் இதில் ஏகப்பட்ட அரசியல் காட்சிகள் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.படத்தில் நயந்தரா நடிக்கின்றார்?

## வம்பு

தொடர்ச்சி 38 ம் பக்கம்



**நன்றி கெட்ட மாதரடா – நான்**
**அறிந்த பாடமடா** என்ற வரிகள்
பெண்களுக்கு அவமரியாதை செய்கிறது
என்று தணிக்கை கத்தரி போட,
**“பொல்லாத கண்களடா**
**புன்னகையில் வேசமடா**
நன்றி கெட்ட மாந்தரடா - நான்
அறிந்த பாடமடா“ என்று பெண்கள் கண்களாகவும், மாதர் மாந்தராகவும் திரையில் மாற்றம் பெற்றிருக்கும்.

நெஞ்சிருக்கும் வரை திரைப்படத்தின் இசைத்தட்டில் கண்ணன் வரும் நேரம் இது என்ற பாடலில் வரும் **“இடையோடு விளையாட வருவாய் கண்ணா“** என்ற வரியில் உள்ள இடையோடு என்ற வார்த்தையை எடுத்து விட்டு “என்னோடு விளையாட வருவாய் கண்ணா“ என திரைப்படத்தில் மாற்றி இருப்பார்கள்.
ஆபாசமாக மட்டுமல்ல, பிராமணரைக் குறை சொன்னாலும் கத்தரி விழத்தான் செய்தது. பாவமன்னிப்பு திரைப்படத்தின் இசைத்தட்டில் இடம் பெற்ற பாலிருக்கும் பழமிருக்கும் பாடலில்,

**“வேதமெல்லாம் காதலையே மறுப்பதில்லையே அது**
**வேதம் செய்த குருவைக் கூட விடுவதில்லையே“** என்ற வரிகள் திரைப்படத்தில்
“வேதமெல்லாம் காதலையே மறுப்பதில்லையே அது
மேகம் செய்த உருவம் போல மறைவதில்லையே“
என்று மாற்றம் அடைந்திருக்கும்.இப்படி ஏகத்துக்குப் பல பாடல்களைச் சொல்லிக் கொண்டே போகலாம். இன்று இசைத்தட்டுகளைச் சுழல விட வாய்ப்புகள் இல்லாததால் இவற்றை எல்லாம் கேட்க வாய்ப்பில்லை. திரைப்படங்களில் இருந்து பிரதி எடுத்த பாடல்களையே கேட்கக் கூடியதாக இருக்கிறது.
ஆபாசம் என்று கருதப்பட்டு இலை மறை காயாகச் சொன்ன சின்னச் சின்ன சங்கதிகள் எல்லாம் திமுக ஆட்சி ஆரம்பித்த பொழுது வெள்ளிடை மழையாகின. வாலியின் ஆபாசப் பாடல்கள் அதுவும் எம்ஜிஆர் படங்களில் மெதுவாக அரங்கேற ஆரம்பமாயின.



**“மடல்வாழைத் தொடை இருக்க**
**மச்சம் ஒன்று அங்கிருக்க..“,**

**துணி போட்டு மறைச்சாலும் பெண்ணே**
**பளிச்சென்று தெரியாதோ இள மாங்காய் முன்னே..“**

**“தேன் குடங்கள் இருபுறமும்**
**தாங்கி வரும் பூங்கொடியோ“** என்றெல்லாம்
பாடல்களில் வரிகள் இடம்பெற ஆரம்பித்தன.
முன்னர்
**“உறவைச் சொல்லி நான் வரவோ**
**என் உதட்டில் உள்ளதைத் தரவோ“** என்ற வரிகள் ஆபாசம் என்று தடை விதித்தார்கள். பின்னர் வந்த பாடலில்
“இதழே இதழே தேன் வேண்டும்
இடையே இடையே கனி வேண்டும்“ என்றதை இலக்கிய வர்ணனை என்று அனுமதித்தார்கள். அனேகமான ஆபாசப் பாடல்கள் எழுதியது வாலிதான்.
நன்றி:மனஓசை




உலகு எங்கும் வலம்வர
தரமான விமானப் பயணத்தற்கு
EurAsian - Tours
LITTLE INDIA வின் மற்றுமொரு சேவை...
Tel: 02131 273 692
Rishi Ganeshamoorthy
Rishi 0174 96 44 965
துரித பண
மாற்றுச் சேவை!
VALUTRANS
Tel:02131 73 87 83 Fax: 02131 73 87 84
Further Str. 156
41462 Neuss
info@eurasian-tours.com
இந்தியா– இலங்கை– விசா பெற்றுத்தரப்படும்!


Jasmine Silk House
புத்தம் புது வரவுகள் என்றும் எமக்கு பண்டிகை நாட்களே!!!
என்றும் மலிவாக தரமாக திருமணப் பட்டுப்புடவைகள் மற்றும்
பாட்டிசாறிகள், சிறுவர்களுக்கான ஆடைகள், பஞ்சாபிகள்,
அனைத்தும் புத்தம், புது டிசைன்களில், எம்மிடம் உண்டு.
நம்மை நாடிவரக் காரணம், அதுவே!
அனைவருக்கும்
எங்கள் உள்ளங்கனிந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்
HP:0173 1937 325
Tel:02102 844744 'Jasmin Silk House" Fester Str.50- 40882 Ratingen


ASIA BAZAR
Ria Money Transfer
MoneyGram
அனைவருக்கும் எங்கள்
உள்ளங்கனிந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்
துரித பண மாற்றுச் சேவை!
VALUTRANS
ஆசிய,ஆபிரிக்கஉணவுவகைகள்
வியாழன் சனிக்கிழமை தோறும்
இலங்கை,இந்திய உடன் மரக்கறிவகைகள்
கடல் உணவுப் பொருட்கள்.இன்னும் பல...
உரிமையாளர்:
பா.கணேஷ்
An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-309282


Stuttgart நகரில்...
Pirruntha Silks
தரம்மிக்க தங்க நகைகள் நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்களில் அமைந்த
சேலைகள் மற்றும் இமிற்ரேசன் நகைகள்
அனைத்திற்கும் நீண்டகாலநம்பிக்கை
மிக்க ஸ்தாபனம்
0170 334 4059
பிருந்தாஸ்
அனைவருக்கும்
எங்கள் உள்ளங்கனிந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்
Ludwig str.87a - 70197 Stuttgart Tel: 0711 615 8976


Photography
Video Filming
Album Making
Graphic Desiging
Your Dreams Comes True
AKR Visualizers
BOOK A SESSION NOW AT
professional photography & cinematography
0049 231 5337 5366
0049 162 803 1647
Rheinische Str. 72
44137 Dortmund
akrvisualizers
akrvisualizers
akrvisualizer@gmail.com


HSB
SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
அனைவருக்கும் எங்கள்
உள்ளங்கனிந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்
069-97 693 374
info@saravanaabhavan.de
Kaiserstraße 66, 60329 Frankfurt am Main
India Singapore Malaysia Thailand Hong Kong U.A.E. K.S.A. Oman Qatar Bahrain Kuwait U.K. France Germany Australia South Africa Canada U.S.A.


அனைவருக்கும் ஸ்டார் இம்பெக்ஸ் நிறுவனத்தாரின்
***தீபாவளி வாழ்த்துகள்***
Happy Diwali
Star - Impex
Asiatische & Afrikanische
Lebensmittel Grosshandel
Lebensmittel Grosshandel e.K.
Franziusstrasse.150 (TOR 3) DE - 44147 Dortmund
Tel : 0231/8602696 Fax : 0231/8602698
E-mail : Info@star-impex.de Web : www.star-impex.de